# முடிவில் தொடங்கும் கதைகள்



கெகிறாவ ஸஹானா

பரணிதரனுக்கு,

அன்புடன்

ஸஹானா அம்மாவிடமிருந்து.

2013.04.16.

# முடிவில் தொடங்கும் கதைகள்

கெகிறாவ ஸஹானா

## ஆசிரியரின் பிற நூல்கள்

1. ஒரு தேவதைக் கனவு (சிறுகதைத் தொகுதி) 1997
2. இன்றைய வண்ணத்துப்பூச்சிகள் (கவிதைத்தொகுதி) 2004
3. ஒரு கூடும் இரு முட்டைகளும் (குறுநாவல்) 2009
4. சூழ ஓடும் நதி (ஆய்வு) 2010
5. இருட்தேர் (கவிதைத் தொகுதி) 2011
6. மான சஞ்சாரம் (சுயசரிதை) 2011

# முடிவில் தொடங்கும் கதைகள்

கெகிறாவ ஸஹானா

32/21 செக்குபிட்டிய தெற்கு
செக்குபிட்டிய
கெகிறாவ

இந்நூல் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினது அனுசரணையுடன் அச்சிடப்பட்டது. இதன் உள்ளடக்கக் கருத்துகள் சபையின் கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை என்பதை கவனத்திற் கொள்ளவும்.

நூல் : *முடிவில் தொடங்கும் கதைகள் (சிறுகதைகள்)*

© *கெகிறாவ ஸஹானா*

முதற்பதிப்பு : *டிசம்பர் - 2012*

ISBN : 978-955-51679-5-6

தேசிய நூலக ஆவணவாக்கல் மத்தியநிலையம் -
வெளியீட்டில் உள்ள பட்டியல் தரவு

ஸஹானா, கெகிறாவ
முடிவில் தொடங்கும் கதைகள் / கெகிறாவ ஸஹானா கெகிறாவ
ஆசிரியர், 2012 - ப 104.∵. செ.மீ 21
ISBN 978-955-51679-5-6
i 8948113 டிவி 23 ii தலைப்பு
1.சிறுகதைகள், தமிழ்

அட்டை அமைப்பு : *க.பரணீதரன்*

அச்சகம் : *ஏஜே பிரின்ட்ஸ்*
*44, ஸ்டேஸன் வீதி*
*தெஹிவெலை*

வெளியீடு : *நூலாசிரியர் வெளியீடு*
*32/21 - செக்குபிட்டிய தெற்கு*
*செக்கு பிட்டிய*
*கெகிறாவ*

விலை : *ரூபா* 175/=

சமர்ப்பணம்

மேமன்கவிக்கு

# முன்னுரை

இந்தத் தொகுதியில் நான் 2000-2009 வரை எழுதிய பன்னிரெண்டு கதைகள் படிமுறைப்படி அமைந்து காணப்படு கின்றன. இவை மல்லிகை, ஜீவநதி, பரவாகம், படிகள் ஆகிய இதழ்களில் வெளிவந்தவை.

'கோடரிக் காம்புகள்' பெண்ணுரிமை, பெண்விடுதலை பற்றியெல்லாம் ஆழ்ந்த சிந்தனையை என்னுள் ஏற்படுத்திய உண்மைச் சம்பவம் ஒன்றை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது. சில பிரச்சினைகள் தீர்வு காணப்படாத முடிவுகளில் சிக்கிக் கொண்டிருப்பதை இக்கதை உணர்த்த முயல்கின்றது.

'முடிவில் தொடங்கும் கதைகள்' வருடா வருடம் ஹஜ் அல்லது உம்ரா காலப்பகுதியில் எனக்குள் ஏற்படும் கருத்து மோதல்களை வைத்து எழுதப்பட்டது. மக்கமா நகர் சென்று இறையில்லத்தைத் தரிசிப்பது என்ற கடமை ஒரு முஸ்லிமுக்கு வாழ்நாளில் ஒரு தடவைதான் விதிக்கப் பட்டுள்ளது என்பதை உணர மறுக்கும் பலருக்கு, அதனால் நிஜமாகவே ஏற்படும் சிக்கல்களை விளக்கி 'அல்ஹஸனாத்' வெளியிட்ட ஒரு கட்டுரையை இதற்கு ஆதாரமாகக் கொண்டுள்ளேன்.

'சுவர்கள்' படித்த பெண்கள் உண்மையாகவே சுதந்திரத்தை யும், சமூகத்தில் கௌரவத்தையும் அனுபவிக்கிறார்களா? அவர்கள் மேலே சென்ற பிறகு தமக்குக் கீழுள்ளவர்களின் உரிமைகளைத் துஷ்பிரயோகம் செய்கிறார்களா என்ற இரு கருத்துகளின் மோதல்களை வைத்து எழுதப்பட்டது. அத்துடன் 'பெண்மை = உண்மை' கதை பொதுவாகவே பெண்கள் உண்மையின்பால் நிற்கிறார்கள் என்ற கருத்தை முன்வைத்து எழுதப்பட்டது. பல்வேறு தரத்தில் இருக்கின்ற பெண்களுடன்

எனக்கு எற்பட்ட அனுபவங்களே இங்கு பேசுகின்றன.

'பார்வை' ஆண்--பெண் பாலியல் சமவுரிமைகள் பற்றிக் குரலெழுப்புகின்றது. தமது கணவர்கள் குறையோடு இருந்த போதும் அதைப் பொருந்திக்கொண்டு பெண்கள் நல்வாழ்க்கை நடாத்தும் அதேவேளை, ஆண்கள் தமது துணைகளின் குறை களினால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைச் சொல்கிறது. ஆண் இயல்பாகவே பாலியல் வேட்கை மிகுந்தவன்; இதன்காரண மாகவே தனது வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும்போது அவன் மிகுந்த கவனத்துடன் செயலாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்தில், ஆனால் நமது இளைஞர்கள் பலர் அவசர அவசரமாக எற்படுத்திக் கொள்கிற திருமண பந்தங்கள் காலமெல்லாம் அவர்களது உணர்ச்சிகளைத் தின்று தீர்ப்பதை அவதானித்த ஆதங்கத்தில் எழுதப்பட்டது.

'திரை' வாய்கிழிய இஸ்லாம் பேசும் வேடதாரிகள் தமது சொந்த வாழ்க்கையில் மனம் சம்பந்தப்பட்ட, ஆன்மா சம்பந்தப்பட்ட தூய்மை பேணுதலைக் கண்டுகொள்வதில்லை என்ற கவலையை நான் பலமுறை அனுபவித்ததன் காரணமாக எழுதப்பட்டது.

'பிச்சைக்காரன்' நான் சந்தித்த பிச்சைக்காரர்கள் பற்றிக் கூறும் அதேவேளை, 'கறுப்பும் வெள்ளையும்' அமிதாப் பச்சனின் 'black' என்கின்ற குறுந்திரைப்படத்தைப் பார்த்த அருட்டுணர்வில் எழுதப்பட்டது. எப்படியிருப்பினும் இதில் வரும் கதாபாத்திரங்கள் கற்பனை அல்ல.

'சங்கிலித் தொடர்' பெண்கள் பிரசவ வேதனையால் பாதிக்கப்பட்டு குழந்தைகளே வேண்டாம் என்று முடிவு செய்து கொண்டாலும், இயல்பாகவே அவர்களுக்கு குழந்தைகள்மீது ஆசை அதிகம் உண்டு என்பதை உணர்த்துவதற்காக எழுதப்பட்டது.

'காட்டு நெடுவான நிலவு' இலங்கையில் சில வருடங் களுக்கு முன்னர் நிகழ்ந்த யுத்தம் பற்றிய நேரடி அனுபவம் இல்லாதபோதிலும், அது குறித்து என்னுள் ஏற்பட்ட சிந்தனை களைப் பதியவைக்கும் முகமாக எழுதப்பட்டது. 'பனிக்கட்டி உருகிடின்' பனிக்கட்டி போல் மிதந்து கொண்டிருக்கும் உள்

மனம் பல்வேறு தாக்கங்களினால் உருகும் போது ஏற்படும் மனப்பிறழ்வினை விளக்குகின்றது.

'சாக்கடை மேடையில் ஒரு மாநாடு' நுளம்புகளால் மனிதனுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு அதிகமாக அவனே காரணமாக இருக்கிறான் என்பதையும், மனிதன் எவ்வளவுதான் மேலே சென்றுவிட்டபோதிலும் நுளம்புகள் அவனுக்கு சவாலா கவே இருக்கின்றன என்பதையும் எடுத்துக்காட்டுவதற்காக எழுதப் பட்டது.

இந்தச் சிறுகதைகளைப் பிரசுரித்த அனைத்து இதழாசிரியர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை, இந்நூலை வெளியிடு வதில் உதவிய அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கெகிறாவ ஸஹானா,
2012. 05. 11.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| 1. கோடரிக்காம்புகள் | 01 |
| 2. முடிவில் தொடங்கும் கதைகள் | 10 |
| 3. சுவர்கள் | 15 |
| 4. பார்வை | 23 |
| 5. திரை | 30 |
| 6. பனிக்கட்டி உருகிடின்...? | 38 |
| 7. பிச்சைக்காரன் | 43 |
| 8. கறுப்பும் வெள்ளையும் | 51 |
| 9. சங்கிலித்தொடர் | 61 |
| 10. பெண்மை=உண்மை | 68 |
| 11. காட்டு நெடுவான நிலவு | 75 |
| 12. சாக்கடை மேடையில் ஒரு மாநாடு | 81 |

# கோடரிக் காம்புகள்

வரவுப் புத்தகத்தில் கையெழுத்திட்டுவிட்டுத் திரும்பினேன். திரு.பெர்னாண்டோ நின்றிருந்தார் மலர்ச்சியுடன்.

"குட்மோனிங் sir"

"குட்மோனிங் "

நான் வெளியேறத் திரும்புகையில் இனிய குரலில் ஆங்கிலத்தில் சொன்னார்.

"மிஸ் ஹினாயா. நான் உங்களுடன் கொஞ்சம் தனியே பேசனும்."

"யெஸ் sir"

"இங்கேயில்லை. மாலை ஆறுமணிக்கு என் வீட்டுக்கு வரமுடியுமா?"

தலையைக் குனிந்து கொண்டேன். ஒரு வினாடி மௌனத்தின்பின் "ஓகே" என்று சொல்லி காரியாலயத்தை விட்டும் வெளியேறினேன்.

உளவியல் விரிவுரைகள் தொடங்கிவிட்டிருந்தன. இன்று செவ்வாய்க்கிழமை. ஏறத்தாழ அனைத்து ஆசிரிய மாணவர் களும் சமுகமளித்திருந்தனர். விரிவுரை மண்டபம் நிரம்பி வழிந்தது. பின்புறமாக மூலையில் ஒரு ஆசனத்தில் அமர்ந்து கொண்டேன்.

ஏதும் புரியாமலும், விளங்காமலும் இருள் சூழ்ந்தது போன்ற பிரமை. தலை கனத்தது. தண்ணீர் போத்தலைத் திறந்து மடமடவென்று தண்ணீரைக் குடித்தேன்.

பெர்னாண்டோ sir பெண்களைக் கவர்ந்திழுக்கின்ற எந்தவிதமான சாமுத்திரிகா லட்சணமும் கொண்டவர் அல்லர். கரிய நிறம். நெடுநெடுவென்ற உயரம். சுருள் கேசம். கண்கள் மட்டும் உயிர்த்துடிப்புடன் நாலாபுறமும் சுழலும். அது ஒன்றே அவரில்

என்னைக் கவர்ந்த அம்சம். இவ்வளவுக்கும் மத்தியில் அவரது ஆங்கில இலக்கியப் புலமை அனைவராலும் மெச்சப்படும் ஒன்று. மாலை வேளைகளில் அவரது இலக்கிய வகுப்புகளுக்குச் சென்று தம்மையே பறிகொடுத்துத் திரும்பிய எத்தனையோ ஆசிரிய மாணவிகளின் கதைகளை முன்னம் கேள்விப்பட்டிருக்கிறேன்.

"ஏனோ தெரியல்ல. அவர் கூப்பிட்டால் மறுக்க மடியாமல் இருக்கு. அப்படி ஒரு கவர்ச்சி அவரிடம்......!" என்று மாணவிகள் அவரைப்பற்றி அடிக்கடி பேசிக்கொள்வதுண்டு. அந்த பெர்னாண்டோ sir இப்போ என்னை அழைப்பதா?

எங்காவது தலையைச் சாய்த்து சிறிது தூங்கணும் போலிருந்தது. விடியற்காலையில் ஊரிலிருந்து புறப்பட்ட அசதி வேறு. எழுந்து வெளியே நடந்தேன்.

இரண்டு மாதங்களுக்கு முன்னால் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியே அதிரும்படியாக அந்தச் சம்பவம்! மாலை விரிவுரையின்போது திடீரென இடைநடுவில் எழுந்து பேராதனை ரயில் நிலையத்துக்குச் சென்று ஓடும் ரயிலின் முன்னால் பாய்ந்து தற்கொலை செய்துகொண்ட நில்மினி... அவள்கூட காதல் தோல்வி காரணமாகத்தான் தற்கொலை செய்துகொண்டதாக பின்னர் தெரிய வந்தது. அவளது மரணத்தால் பெனிதெனிய மட்டுமல்ல முழு பேராதனையுமே அதிர்ந்து நின்றது.

எமது மாதாந்த கல்லூரி சஞ்சிகையின் அடுத்த இதழில் பெர்னாண்டோ sir ஒரு கவிதை எழுதியிருந்தார். "The Feet" என்பது தலைப்பு.

முழு உடம்புமே சிதைந்து போனாலும், தண்ட வாளத்தின் இடுக்கில் சிக்கியதால் அதிர்ஷ்டவசமாய் தப்பிய நில்மினியின் நகப்பூச்சு மின்னும் கால் பாதங்களை வர்ணித்து அவர் எழுதிய அக்கவிதை கல்லூரியில் பலத்த சலசலப்பை ஏற்படுத்தியது. மாணவர்கள் குசுகுசுவென்று பேசிக் கொண்டார்கள்.

எமது டோமை அடைந்து வராண்டாவில் நடந்து மாடிப்படிகளில் ஏறி எனது அறையை வந்தடைந்தேன். கதவைத் திறந்து ஹேண்ட் பேக்கை மேசைமீது விசிறி எறிந்துவிட்டு பாத்ரூமுக்குச் சென்று குளிர்ந்த நீரில் முகம் அலம்பினேன். சுகமாக இருந்தது.

டீ குடிக்கணும் போலிருந்தது. மண்ணெய் அடுப்பை எரித்து டீ

தயாரித்துக் கொண்டேன். கட்டிலில் அமர்ந்து டீயை உறிஞ்சத் தொடங்கினேன். மீண்டும் மனது அதே பாதையில் தறிகெட்டு ஓடத் தொடங்கியது.

ஆறுமாதங்களுக்கு முன்னால் ரயிலின் முன்னால் பாய்ந்து தற்கொலை செய்துகொண்ட ப்ரியாதான் இந்த சங்கிலித் தொடரை முதலில் ஆரம்பித்து வைத்தவள். அவள் நேரடியாகவே ஒரு கடிதத்தில் தன் சாவுக்குக் காரணம் தனது காதலன் தன்னை ஏமாற்றியமைதான் என்று குறிப்பிட்டிருந்தாள். பின்னர் நில்மினி....! இப்படி எத்தனையோ பெண்கள்!! கல்விக் காக இந்தக் கல்லூரியை நாடிவந்து காதலில் தம்மைப் பறிகொடுத்து, விரக்தியின் விளிம்பில் உயிரைப் பணயம் வைத்த எத்தனை பெண்கள்! இவர்கள் அறியாமையில் இருப்பவர்கள் அல்லர். அறிந்தும் அறியாதவர்கள் என்றுதான் எண்ணத் தோன்றிற்று.

இந்த இரண்டு தற்கொலைகளும் காரணமாக முழு பேராதனையுமே எமது ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை ஒரு மாதிரியாகத்தான் பார்த்தது. இதைப் புரிந்துகொண்ட அதிபர் திருமதி நாணயக்கார பல கடுமை யான செயல்திட்டங்களை வகுத்தார். “காதல்... தோல்வி... தற்கொலை... இவை ஒருக்காலும் இனி இந்தக் கல்லூரியில் நிகழக்கூடாது” என்று அவர் மாணவர் மத்தியில் அடித்துப் பேசியபோது சில மாணவிகளுக்குக் கசப்பாகத்தான் இருந்தது. எனினும், பலர் அவரது திட்டங்களை வரவேற்று ஆதரவளித்தனர்.

மேடம் நாணயக்கார ஒரு பெண்ணீயவாதி. எங்கே பெண்களுக்கு ஹிம்ஸை ஏற்பட்டாலுமே தயங்காமல் குரல் கொடுக்கக் கூடியவர். கண்டிப்பானவர். அவரிடம் சொன்னால் என்ன?

கையிலிருந்த தேநீர் ஆறிவிட்டிருந்தது. மனம் இன்னுமே கொதித்துக் கொண்டிருந்தது. தேநீரை ஒரே மூச்சில் குடித்து முடித்தேன். உடைமாற்றிக்கொண்டு 'அப்பாடா' என்று கட்டிலில் சாய்ந்துகொண்டேன். கண்கள் தாமாகவே இறுக மூடிக் கொண்டன.

இரவுச் சாப்பாட்டின் பின்னர் வெளிமுற்றத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். தூரத்தே ஆண் மாணவர் விடுதி மங்கிய ஒளியுடன் தெரிந்தது. திடுமென காலையில் பெரி sir உடன் நடந்த உரையாடல் ஞாபகம் வர, விளையாட்டுப்போல எல்லோரிடமும் கூறினேன்.

"அடடா...இப்போ உனக்கும் வலை வீசிட்டாரா?" மாணவிகள் கேலி செய்தனர்.

"ஏய் ஹினாயா...அப்புறம் உன் finance க்கு என்னடி சொல்லப் போகிறாய்....?"

"எங்களைப்போல உனக்கு தெவனி கமன இல்லைத் தானே... அதனால் ஒரு பிரச்சினையும் இல்லை... எங்களைப் போல பயப்படவும் தேவையில்லை...."

அவர்களது கிண்டலில் நானும் என்னை மறந்து சிரிக்கத் தொடங்கினேன். எல்லாப் பெண்களும் கலகலத்து உரத்துச் சிரிக்க.... ஒருத்தி மட்டும் அழத்தொடங்கினாள்... அவள் தம்மிகா!

இறுதியாண்டுத் தேர்வு நெருங்கி விட்டது. நான் திரு. பெர்னாண்டோவின் வேண்டுகோளை முற்றாக மறந்துபோய் படிப்பில் மூழ்கிவிட்டிருந்தேன். எப்போதும் அவரைத் தனியே எதிர்கொள்வதைத் தவிர்த்தேன். அவ்வப்போது என்னைக் கடந்து செல்ல நேர்கையில் எல்லாம் அவர் என்னை முறைத்துப் பார்ப்பதை அவதானிக்கத் தவறவில்லை. இன்னும் கொஞ்ச நாள்தானே! பரீட்சை முடிந்ததும் ஊரோடு போய்விடலாம் என்ற தைரியம். எதையும் கண்டு கொள்ளவில்லை.

கதவு லேசாகத் தட்டப்பட்டது. நள்ளிரவு. அனேகமாக யாவரும் தூங்கிவிட்டிருந்தனர். நான் மட்டும் சக்தி ரேடியோவில் பாடல் கேட்டபடி பழைய கொப்பியொன்றைப் புரட்டிக் கொண்டிருந்தேன்.

கதவைத் திறந்தபோது வீங்கிச் சிவந்த கண்களுடன் தம்மிகா!

"என்ன தம்மிகா இந்தப் பக்கம்...?"

பொதுவாக கல்லூரியில் ஆங்கிலத்தில்தான் பேசுவது வழக்கம். அவசரமான வேளைகளில் அச்சொட்டாக உணர்ச்சி களை வெளிப்படுத்துவதற்கு தாய்மொழிதான் கைகொடுப்ப துண்டு. எனக்கு சிங்களம் தாய்மொழிக்கு நிகராகிவிட்டிருந்தது இங்கே.

எமது டோமின் கடைசி அறையில் இருப்பவள் தம்மிகா. நான் முதல் அறையில். அடிக்கடி சந்தித்துக் கொள்ளும் வாய்ப்புகள் குறைவு.

அன்றைய அவளது அழுகைக்குக் காரணம் என்ன என்பதை காற்று வாக்கில் அறிந்திருந்தேன். எனினும், அதுபற்றி நான் அலட்டிக்கொள்ளவில்லை. காதலும், தோல்வியும், தற்கொலையும்

இங்கு சகஜம்தானே!

அவள் பதில்சொல்லாது என் தோளில் சாய்ந்து விம்மத் தொடங்கினாள். எனக்கு எரிச்சலாக இருந்தது. இந்த நடுநிசியில் என்ன தொல்லை இது?

கதவை மூடித் தாழிட்டுவிட்டு அவளை அணைத்த வாறே அழைத்து வந்து கட்டிலில் உட்கார வைத்தேன்.

“சொல்லு சீக்கிரம். நான் நிறைய படிக்கணும்...”

“உன்னைத்தவிர எனக்கு உதவிசெய்ய யாரும் இல்லை ஹினாயா...”

“என்ன உதவி? சீக்கிரம் சொல்லு...”

“நான் இப்போ நாலு மாச கார்ப்பம். பெரி sir தான் காரணம்.”

சப்தநாடியும் ஒடுங்கிப்போக தீனமாக அவளைப் பார்த்தேன். என்ன இந்தப் பெண்கள்...? ஆட்படுவதற்கு எந்தத் தகுதியும், ஆளுமையும் இல்லாத ஒரு மனிதனிடம் வரிசையாகத் தோற்றுப் போகிறார்களே...

இவளுக்குப் பைத்தியமா?

குனிந்து அழுதுகொண்டிருந்தவளது முகத்தை நிமிர்த்திக் கடுமையான குரலில் கேட்டேன்.

“இதையெல்லாம் ஏன் என்னிடம் சொல்கிறாய்? நான் படிக்கணும். பரீட்சைக்கு இன்னும் ஒரு வாரம்கூட இல்லை. உனக்குத் தெரியாதா...?

அவள் சடாரென்று கட்டிலிலிருந்து எழுந்து கீழே உட்கார்ந்து என் கால்களைக் கட்டிக்கொண்டாள்.

“நீதான் நான் நம்பத்தகுந்த ஒரு ஆள்... உன்னிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் நான் நிம்மதியாகச் சாவேன்....”

என்னையறியாமலேயே அவள் கன்னத்தில் பளாரெ ன்று அறைந்தேன். தலைமுடியைப் பற்றியிழுத்து முகத்தை நிமிர்த்தினேன்.

“உனக்கென்ன பைத்தியமா? நீயும் தற்கொலை செய்து கொள்ளப் போகிறாயா? உன் பெற்றோரை நினைத்துப் பார்த்தாயா...?”

அவள் என் கால்களைக் கட்டிக்கொண்டு நீண்ட நேரம் அழுதுகொண்டிருந்தாள்.

தம்மிகாவும் ஏனைய பல மாணவிகளைப்போல

பெர்னாண்டோ sir இன் மாலை நேர ஆங்கில இலக்கிய வகுப்புகளுக்கு ஒழுங்காக சென்று வந்தவள். எப்படியோ அவரது கடைக்கண் பார்வையில் விழுந்துவிட்டாள்.

ஆங்கில இலக்கியக் காதல் கொண்டே அவளை வீழ்த்திவிட்டார் பெர்னாண்டோ. விளைவாக அவருடன் பல இரவுகளை அவள் கழித்திருக்கிறாள்.

அவரது மனைவி இல்லாத பொழுதுகளில் அவரது குவாட்டர்ஸிலேயே யாவும் நிகழ்ந்து முடிந்தன.

சீக்கிரமே தன் மனைவியை விவாகரத்து செய்து விடுவதாகவும், தம்மிகாவை திருமணம் செய்து கொள்வ தாகவும் வாக்களித்திருக்கிறார். இவளும் பரிபூரணமாக நம்பி விட்டாள்.

தான் கர்ப்பமுற்றிருக்கும் செய்தியைத் தெரிவித்தபோது பெர்னாண்டோ அதிர்ந்து விட்டாராம். கர்ப்பத்தைக் கலைத்து விடச்சொல்லி வற்புறுத்தினாராம். இவள் பிடிவாதமாக மறுக்கவே அவளைச் சந்திப்பதைச் சிறிது சிறிதாகத் தவிர்த்து விட்டாராம். இப்போது தன்னை முற்றாக மறந்த நிலையில் என்னையும் வீட்டுக்கு அழைத்திருக்கிறார் என்றதும் தம்மிகா பொறி கலங்கிப் போய்விட்டாள்.

மற்ற பெண்களைப்போல அவரது வலையில் நானும் விழுந்து விடவில்லை என்ற காரணத்தினால் அவள் என்மீது மதிப்பு கொண்டு அவ்வளவு விஷயத்தையும் தெரிவித்து விட்டாள்.

தலையில் பெரிய பாறாங்கல்லைத் தூக்கி வைத்தது போன்ற நிலை எனக்கு. பரீட்சை பற்றிய பயம்...தம்மி பற்றிய குறுகுறுப்பு. என்ன செய்வது?

என்ன செய்வது? அதிபரிடம் சென்று முறையிடுவதா? பேசாமல் விட்டு விடுவதா? பேசாமல் விட்டு விடலாம் என்றால் தம்மிகாவின் நிலை பரிதாபமாக இருந்தது. முன்பெல்லாம் என்னைக் கண்டால் குத்தலாகப் பேசுபவள். எனது தனித்துவ உணர்வுகளைப் பலவேளைகளில் புண்படுத்தியவள். ஏதாவது ஒரு பிரச்சினைக்கு இஸ்லாத்தின் நிலைப்பாடு என்ன என்று அவர்களே கேட்டு, நான் விளக்கம் அளித்த பின்னர், அதனை கேலி செய்கின்ற ஒரு இளம் பெண் என்னிடம் தனது

அவலத்தைச் சொல்லத் துணிந்திருக்கிறாள் என்றால் என்னை அவள் அந்த அளவுக்கு நம்புகிறாள் என்றுதானே அர்த்தம்? அவளைக் கைவிடுவது சரியா?

பல குழப்பமான சிந்தனைகளுடன் அதிபரிடம் சென்று முறையிடுதல் பற்றிய எந்தத் தெளிவும் இல்லாதபோதும், மாலை மங்கி இருள் கவிந்திருந்த ஒரு பொழுதில் திருமதி நாணயக்காரவின் குவாட்டர்ஸிற்குச் சென்றேன்.

உள்ளே தொலைக்காட்சியில் மாலைச் செய்தி அறிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர் எழுந்து வந்து என்னைச் சந்திக்கப் பத்து நிமிடங்கள் ஆயிற்று. துடிக்கும் இதயத்துடன் காத்திருந்தேன்.

நெற்றியில் நரைத்த ஒன்றிரண்டு தலைமயிர்களுடன் மெல்லிசாக, ஆயினும் கம்பீரமாகக் காட்சியளிக்கும் திருமதி நாணயக்கார கவுன் அணிந்து சின்னப்பெண் போலிருந்தார். வினோதமாக இருந்தது.

இந்த நேரத்தில் அவசரமாக அவரைச் சந்திக்க வென்று ஒரு முஸ்லிம் பெண் வந்திருக்கின்றமை அவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். புன்னகையுடன் கேள்வி ரேகையும் சூழ என்னைப் பார்த்தார்.

ஒரு அதிபர்-மாணவி உரையாடலில் என்ன சம்பிரதாயம் இருக்க முடியும்? நேராக விஷயத்துக்கு வந்தேன்.

கேட்டுக்கொண்டிருக்கையிலேயே அதிபர் இறுகி கல்லெனச் சமைந்து போனார். இந்த அதிர்ச்சிக்குக் காரணம் அவர் இந்தக் கல்லூரியின் அதிபர் என்ற பொறுப்புணர்ச்சியா? அல்லது பெண்ணீயச் சிந்தனையா? புரியாமல் விழித்தபடி உட்கார்ந்திருந்தேன்.

நீண்ட மௌனத்திற்குப் பின்னர் சொன்னார்.

“இந்தக் கல்லூரியில் இன்னொரு தற்கொலைக்கு அனுமதிக்க முடியாது. நான் இருக்கும்வரை அது நடக்காது. நீ போ... நான் உரிய நடவடிக்கை எடுப்பேன் விரைவில்...”

தலையில் சிலநாட்களாக கனத்துக்கொண்டிருந்த பாறாங்கல்லை இறக்கிவைத்த நிம்மதியுடன் நான் என் அறைக்குத் திரும்பினேன்.

அதிபர் கனகச்சிதமாகவும், துரிதமாகவும் காரியத்தில் ஈடுபட்டார். அடுத்த நாளே பெர்னாண்டோ விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். பல

குற்றச் செயல்கள் நிகழக் களமாக இருந்த அவரது குவாட்டர்ஸ் அதிபரால் பறிமுதல் செய்யப்பட்டு சீல் வைக்கப் பட்டது.

இத்தனை களேபரங்களின்போதும் பெர்னாண்டோவின் மனைவியும், அவரது ஒரு வயதுக் குழந்தையும் ஊரில் இல்லை. பெர்னாண்டோ ஓட்டலில் அறை எடுத்துத் தங்கவேண்டி ஏற்பட்டது. குனிந்த தலை நிமிராமல் வந்து விரிவுரைகளை நடாத்தி விட்டுச் சென்றார். ஆங்கில இலக்கிய வகுப்புகளில் மாணவிகளின் வருகை பெரும் வீழ்ச்சி காணத் தொடங்கியது.

தம்மிகா அதிபரின் கண்காணிப்பின்கீழ் ஒரு வாடகை வீட்டில் குடியமர்த்தப்பட்டாள். தற்கொலை முயற்சியிலிருந்து எப்படியாவது அவளைக் காப்பாற்றியாக வேண்டும் என்ற அதிபரின் முயற்சி வீண்போகவில்லை. அவள் சிறிது சிறிதாக மனந்தேறி பரீட்சைக்குப் படிக்க ஆரம்பித்தாள். அவளது சகல நடவடிக்கைகளும் அதிபரின் பணிப்புரையின் கீழ் சக மாணவர் களால் அவளுக்குத் தெரியாமலேயே கண்காணிக்கப்பட்டன.

அன்றிரவு எல்லோரும் உணவு மண்டபத்தில் உண வருந்திக் கொண்டிருந்தோம். தம்மிகா விவகாரம் மாணவர் மத்தியில் பேரதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டிருந்தது. பரீட்சை பற்றிய பயம் வேறு. யாவரும் அமைதியாக சாப்பிட்டுக் கொண்டி ருந்தோம்.

மாடிப்படிகளில் டக் டக் என்ற காலடி ஓசை. யாவரும் திகைத்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டோம். வாசல்படியருகே தெரிந்த உருவம்.... பெர்னாண்டோவின் இளம் மனைவி ப்யூமி! அப்போதுதான் ஊரில் இருந்து வந்திருக்க வேண்டும். அயர்ச்சியாகத் தென்பட்டாள். தோளில் பயணப்பை தொங்கிக்கொண்டிருந்தது. கையில் குழந்தை. ஒரு வயதுகூட நிரம்பாத அழகிய பச்சிளங் குழந்தை.

"இப்பொதுதான் ஊரிலிருந்து வந்தேன். வீடு பூட்டிக் கிடக்கு. காவல்காரன் எல்லா விபரமும் சொன்னான. இப்போ தம்மிகா எங்கே?"

ஏறக்குறைய அரைநிமிட மௌனம். யாரும் வாய் திறக்கவில்லை. நான் சொன்னேன்.

" அவள் அதிபரின் கண்காணிப்பின் கீழ் இருக்கிறாள்...."

"நடந்த தப்புக்கு யார் காரணம்? அவள்தானே...!

அவளாகத்தானே என் கணவரைத் தேடிப்போய் இருக்கிறாள்...?''

முழு மண்டபமுமே ஒருகணம் குலுங்கி அதிர்ந்தது. விறைப்பான மௌனம் தொடர்ந்து ஆட்சி செலுத்தியது.

''சரி அதை விடுங்கள். என் கணவர் தவறு செய்து விட்டார். ஒப்புக்கொள்கிறேன். அதற்காக என்னைப் பழி வாங்குவது என்ன நியாயம்? நான் ஒரு ஏழை...எங்கு போவேன்...?''

''பேசாமல் டைவர்ஸ் பண்ணிடுங்க....''

தைரியசாலியான குசுமலதா மெதுவாகச் சொன்னாள்.

''அதெப்படி முடியும்? அவரைப்பற்றி எல்லாம் தெரிந்தும் கூட அவரோடு நான் வாழ்கிறேன். எதற்காக? எல்லாம் அந்த வீட்டுக்காகத்தான். எனக்கொரு வீடு வேண்டும். அதற்காகத் தான் நான் இத்தனைக் கஷ்டங்களையும் தாங்கி நிற்கிறேன். இப்போ நான் என்ன செய்வது? எங்கு போவது சொல்லுங்கள்....?''

அவள் சுண்டி வீசிய அந்தக் கேள்வி நீண்ட மலைப்பாம்பென எங்கள் முன்னால் விழுந்து கிடந்தது.

பிரவாகம் - செப்டம்பர் 2001

பி.கு: தெவனிகமன - புதுமணப்பெண் திருமணத்திற்குப்பிறகு முதல்தடவையாக கணவனின் வீடு செல்லும் சம்பிரதாயபூர்வ நிகழ்ச்சி. இதன்போது பெண்ணின் கன்னித்தன்மை கணவன் வீட்டாரால் பரிசோதிக்கப்படும்.

# முடிவில் தொடங்கும் கதைகள்

கூடத்துச் சுவரில் மாட்டப்பட்டிருந்த அந்தப் பெரிய படத்தை உற்று நோக்கியபடியே அமர்ந்திருந்தான் மஹ்ரூப். பொன் வண்ணச் சரிகை மின்னும் கருநிறத் துகில் போர்த்த க.்பதுல்லாஹ்... அதைச் சூழவும் எறும்புகளைப்போல் வெண்ணிற ஆடை மனிதர்கள்... என்ன அழகு...! கருமையை மிஞ்சும் வெண்மை...!

மாலை மயங்கி இருள் கவ்விக்கொண்டிருந்தது. அதிகாலையிலே எழுந்த வியாபாரத்துக்குக் கிளம்பிச் சென்ற போதும் வெறுங்கையுடன் திரும்பி வந்த எரிச்சல் நெஞ்சில் வியாபித்து நின்றது.

மனைவி கொண்டுவந்த சூடான தேநீரை அருந்தி விட்டு எழுந்தான். வெளியே விளையாடிக்கொண்டிருந்த குழந்தை இவன் வெளியே போகிறான் என்பதை உணர்ந்து, ஓடிவந்து காலைக் கட்டிக்கொண்டது.

தூக்கி இரு கன்னங்களிலும் முத்தமிட்டுவிட்டு, அழும் குழந்தையை பின்னால் நின்ற மனைவியிடம் எரிச்சலுடன் நீட்டினான். தெருவில் இறங்கினான்.

ம.்ரிப் தொழுகைக்கான (மாலைநேர வழிபாடு) பாங்கோசை கேட்டது. நடையை விரைவாக்கினான்.

இம்முறையும் உம்ராவுக்குச் (முஸ்லிம்கள் மக்கா சென்று நிறைவேற்றும் வழிபாடு ) சென்று வந்தால் என்ன? திடுமென யோசனை தோன்றிற்று. டல்லடிக்கும் வியாபாரம், துரத்தும் தொலைபேசி அழைப்புகள், திரும்பிவிட்ட காசோலைகள், மனைவியின் தொணதொணப்பு, குழந்தையின் நடுநிசிக் கதறல்... இவை யாவற்றையும் விட்டு இரண்டு வாரங்களுக்கு நிம்மதியாக இருக்கலாமே....

சென்ற ரம்ழானில் உம்ராவை நிறைவேற்றச் சென்று

இருமலுடன் திரும்பி வந்தாலும்கூட மக்காவில் பெற்ற சுகானுபவம்! மீண்டும் எப்போது காணலாம் அந்த இறை இல்லத்தை....?

விரைந்து பள்ளிவாசல் படி கடந்து தொட்டியில் இருந்த நீரில் (அங்க சுத்தி ) செய்துவிட்டு ஸப்புடன் (தொழுகைக்கான வரிசையுடன்) இணைந்துகொண்டான். ம..ரிப் தொழுகையை நிறைவேற்றி முடித்தபோது இம்முறை உம்ராவுக்குச் சென்றே தீருவது என்ற எண்ணம் உறுதியாயிருந்தது.

வங்கியில் எடுத்த பணம் ரூபா ஐம்பதினாயிரத்தையும், கடவுச்சீட்டையும் எடுத்துக்கொண்டு தனக்குப் பிரியமான அந்த ஹஜ் முகவர் நிலையத்தை நோக்கி நடந்து கொண்டி ருந்தான் மஹ்ரூப். முன்பு இரு தடவைகள் ஹஜ் யாத்திரையை மேற் கொண்டதும், சென்ற ரம்ழானில் உம்ராவை மேற்கொண்டதும் இதே 'ஸஹ்ரா ட்ரவல்ஸ்' ஊடாகவே.

இந்த முகவர்கள் குளிரூட்டப்பட்ட தங்குமிட வசதி களையும், சுவையான உணவு வகைகளையும் பிரமாதமாக ஏற்பாடு செய்வார்கள். கட்டணம் கொஞ்சம் அதிகம் தான். மீதியை பிறகு தரலாம்.

இரண்டு தினங்களுக்கு முன்னால் பேச்சுவாக்கில் மனைவியிடம் தனது தீர்மானத்தைத் தெரிவித்திருந்தான். அமீனா அவனைவிட இறை பக்தி மிக்கவள். எனினும்கூட, அவனது தீர்மானத்திற்கு திடீரென்று அவளால் உடன்பட முடிய வில்லை.

நடுநிசியில் விழித்தெழுந்து தந்தையைத் தேடும் குழந்தைக்கு என்ன பதில் சொல்லி சமாதானப்படுத்துவது என்ற திகைப்பே முதலில் எழுந்தது அவளுக்கு. ஒன்றிரண்டு நாட்களா? பதினைந்து நாட்கள்...!

எனினும், அவளது பயபக்தி வென்றது. "அவர் மக்காவிலிருந்து கொணர்ந்தது" என்று மற்ற பெண்களிடம் காட்டி மகிழத்தக்க பொருள்கள் பரிசாகக் கிடைக்கும் என்ற நப்பாசையும், "அமீனாட புருஷன் நாலு முறை மக்காவுக்குப் போனவருடி" என்று தன் முதுகுக்குப் பின்னால் பிற பெண்கள் பேசிக்கொள்ளும்போது ஏற்படுகின்ற பெருமிதமுமாக அவளைக் கிளர்த்த, இறுதியில் "அல்லாட பாதையில போறதுக்கென்ன?" என்று ஒப்புதல் கொடுத்துவிட்டாள்.

செலான் வங்கிக்கு எதிரே செல்கின்ற வீதியில் திரும்பி நடந்தான். வீதியின் முனையில் 'ஸஹ்ரா ட்ரவல்ஸ்' அமைந்தி

ருக்கிறது.

சந்தடியற்ற வீதி. கெகிறாவையில் மிக அழகான இடம் இந்தப் பகுதிதான். இரு மருங்கிலும் நிழல் மரங்கள். சுட்டெரிக்கும் வெயிலில்கூட சுகமாக நடந்து செல்லலாம்.

இளைஞர்களும் யுவதிகளும் சாரிசாரியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். பக்கத்தில் ஆங்கில மொழி கற்பிக்கின்ற தனியார் நிலையம்.

“ஹலோ” என்ற குரல் கேட்டுத் திரும்பினான். நஜீபுல்லாஹ்! 'English Academy' எனப் பெயர் குறிக்கப்பட்ட அந்தக் கட்டடத்தின் நுழைவாயிலுக்கருகே நின்றுகொண்டி ருந்தான்.

நஜீபுல்லாஹ் சுற்றுவட்டாரத்தில் பிரபலமான ஆங்கில மொழி ஆசிரியன். அரசாங்க உத்தியோகத்தைக் கைகழுவி விட்டு தனியார் துறையுடன் தன்னைப் பிணைத்துக் கொண்டவன். கம்பீரமான இளைஞன். ஏறக்குறைய மஹ்ரூபின் வயது. நண்பனும்கூட.

“என்ன இந்தப் பக்கம்?”

மஹ்ரூப் விஷயத்தைச் சொன்னான். நீண்ட நாட் களாகக் காணாதிருந்த ஒரு நெருங்கிய உறவினனைக் கட்டித் தழுவுவது போல அவனைக் கட்டித் தழுவிக் கொண்டான் நஜீபுல்லாஹ்.

முதுகிலே செல்லமாகத் தட்டி “சென்ற முறையும் போனாய்தானே?” என்று கேட்டான்.

“போனேன்தான். ஆனா ஒவ்வொரு வருஷமும் போய்ப் பாக்கணும்போல இருக்கு...”

அவனது கைகளைப் பற்றியபடியே சேர்ந்து நடந்தான் நஜீபுல்லாஹ்.

“ஏன் அப்படி?”

நண்பனுடன் பேசுவதற்காகத் தனது நடை வேகத்தைக் குறைத்துக்கொண்டவனாக மஹ்ரூப் சொன்னான்.

“ஒவ்வொரு வருஷமும் மக்காவுக்குப் போகணும்டா. அது ஒரு பேராசை மாதிரி. போனதும் முதல் தடவையா க.்பாவைப் பாக்குற சந்தோஷம் இருக்கே...அத வார்த்தையால சொல்ல முடியாதுடா...”

இரு வினாடிகள் அந்த அபூர்வ அனுபவத்தில் மௌனமாகத் திளைத்தபின் தொடர்ந்தான்.

"உனக்குத் தெரியுமா? போனமுறை உம்ரா போன நேரம் ஒருவரை சந்திச்சேன். டியூனீசியாவுல இருந்து வந்தவர். நாப்பது வருஷமா தொடர்ந்து உம்ராவுக்கு வந்து போறாராம்...."

நஜீபுல்லாஹ் மெல்லிசாய்ச் சிரித்துக்கொண்டான். பொது விளையாட்டு மைதானத்தைக் கடந்து இருவரும் நடந்துகொண்டிருந்தார்கள். முற்பகல் வெயில் சுரீரென உறைக்கத் தொடங்கியிருந்தது. மைதானத்தின் ஓரங்களில் நின்றிருந்த பென்னம் பெரிய வாகை மரங்கள் இராட்சத குடை பிடித்திருந்தன.

இளம் ஆண்களும், பெண்களும் நேரகாலம் மறந்து மரங்களுக்குக் கீழே உட்கார்ந்திருந்தார்கள். யாருமே சந்தோஷமாக இல்லை. எதைப்பற்றியோ தீவிரமாக பேசிக் கொண்டிருந்தார்கள்.

"டியூட்டரிகளுக்கு வாற மெஜாரிட்டி கேஸஸ் இப்படித் தான்...."

திடுமென நஜீபுல்லாஹ் சொன்னான். மஹ்ரூப் ஆமோதிப்பது போல தலையை ஆட்டிக்கொண்டான்.

"ஆரம்பத்துல சந்தோஷமா இருப்பாங்க. போகப் போக எல்லாம் தேய்ஞ்சி போயிரும். இவங்கட ப்ரெண்ட்ஷிப் ஒரு வருஷம்கூட நீடிக்கிறதில்ல..."

"அதுசரி, நீ கல்யாணம் பண்ணுற ஐடியா இல்லையா?"

"வை நொட்? இந்த வருஷம் பார். ஜாம் ஜாம் ஜாம்...."

இருவரும் கலகலத்துச் சிரித்தார்கள்.

"பக்கத்து வீட்டான் பசித்திருக்க வயிறு நிரம்ப சாப்பிடுறவன் உண்மை முஸ்லிம் இல்ல. உனக்குத் தெரியுமா?"

பேச்சு திசை மாறியதை எதிர்பாராத மஹ்ரூப் அதிசய மாக அவனைப் பார்த்தான்.

"நீ கையில வெச்சிருக்கிற இந்தப் பணத்தக்கொண்டு ஹஜ்ஜைவிட, உம்ராவைவிட மேலான எத்தனையோ விஷ யங்களைச் செய்யலாம். ஏழைகள், அனாதைகள், பல வீனர்கள், விதவைகள், அகதிகள்...இவங்களுக்கு உதவணும்டு நீ நெனச்சிப் பாத்ததில்லையா..."

"நா மட்டும் தனிச்சி என்ன செய்யப் போறேன்...?" மஹ்ரூபின் பேச்சில் லேசான தடுமாற்றம்.

" ஒவ்வொரு முறையும் ஹஜ் செய்யப்போற இருபது லட்சம் மக்களுக்கு மத்தியில மூணு லட்சம் பேர் மட்டும் தான் முதல்

தடவையா ஹஜ் செய்யிறாங்க. மத்த எல்லாருமே ரெண்டாவது, மூணாவது தடவை மக்காவுக்குப் போறவங்க.”

“உனக்கு அதெல்லாம் வெளங்காது நஜீப், ஒவ்வொரு வருஷமும் மக்காவுல காலடி வெக்கிறதுக்கும், க:.பாவைக் கண்ணால காணுறதுக்கும் நாங்க படுற பாடு...” என்று சலித்துக்கொண்டான் மஹ்ரூப் .

“ஹஜ் வாழ்க்கையில ஒரு தடவதானே கடமை....? உம்ரா அப்படிக்கூட இல்லையே...அது கட்டாயமான கடமை இல்ல. இப்படி நீங்க எல்லாம் பதறியடிச்சுக்கொண்டு ஹஜ்ஜுன்டும், உம்ரான்டும் போகும்போது முதல் தடவையா மக்காவுக்குப் போயி க:.பாவைக் கண்ணால பாக்கணும்டு ஆசைப்படுற மத்த ஹாஜிகளுக்கெல்லாம் எத்தனை சிரமம்...? அளவுக்கு மீறிய நெருக்கடியால நோயாளிகளும். வயசாலி களும் படுற கஷ்டங்களப்பத்தி கொஞ்சம் நெனச்சிப்பாரு...”

ஏதோ மக்காவுக்கு நேரில் சென்று இறையில்லமான க:.பதுல்லாஹ்வை நேரில் தரிசித்தவன்போன்று அவன் பேச, மஹ்ரூப் மேலும் வியப்புடன் அவனைப் பார்த்தான்.

“மருத்துவம்...கல்வி... சமூகசேவை...அப்படிக்கூட போக வேணாம். பசியாலயும்,பட்டினியாலயும் கஷ்டப்படுற இந்த ஊர்ல உள்ள சாதாரண மக்களப்பத்தியாவது நீ ஏன் யோசிச்ச தில்ல...? இவங்கள சந்தோஷப்படுத்த நீ எடுக்கிற சின்ன முயற்சிக்குக்கூட பெரிய கூலி இருக்கே...! இதெல்லாம் விட்டுட்டு குடும்பத்தையும், உன்னையும் கஷ்டப் படுத்திக் கொண்டு மக்காவுக்குப் போய்த்தான் நீ அல்லாஹ்வை அடையணுமா? நீ வெச்சிருக்கிற இந்தப் பணத்த பத்து பேருக்கு பங்கிட்டுக்கொடுத்தா பத்து குடும்பங்கள் சந்தோஷமா வாழாதா? உன்னை வாழ்த்தாதா...?”

கேள்வி மேல் கேள்வியாக கேட்டுக்கொண்டே நஜீபுல்லாஹ் வந்துகொண்டிருந்தான்.

எதிரே சுமார் இருபது அடி தூரத்தில் முகவர் நிலையம். மஹ்ரூப் கையில் இருந்த பணம் கனப்பதை உணர்ந்தான்.

# சுவர்கள்

மெல்லிய நீலநிறப் பூச்சிடப்பட்ட அறைச்சுவர் தண்ணென்ற குளிர்ச்சியை வாரி இறைத்துக் கொண்டிருந்தது. அச்சுவர்களில் நாற்புறமும் பலவிதமான அறிவித்தல்களும், வரைபடங்களும். புள்ளிவிபரங்களும் ஒட்டப்பட்டிருந்தன. காற்றாடி இதமாக சுழன்று கொண்டிருந்தது.

"வரச்சொன்னீர்களா மெடம்?"

மெல்லிய குரலில் கேட்டபடி வாசலருகே வஹ்ஹாப் ஆசிரியர் நின்று கொண்டிருந்தார். அது இரண்டாம் பாடவேளையின் ஆரம்பம். எல்லா வகுப்புகளிலும் மிக ஜரூராக பாடங்கள் நடந்துகொண்டிருந்தன. குளிர்ந்த காலைப்பொழுது உள்ளங் களில் உற்சாகத்தை அள்ளி வழங்கிக் கொண்டிருந்தது. அவருக்கும் அந்நேரத்தில் எட்டாம் தரத்தில் சமூகக் கல்விப் பாடம். விருப்பமின்றியே அழைப்பை ஏற்று வந்திருந்தார்.

அவர் இந்தப் பிரபலமான நகரப் பாடசாலைக்கு மாற்றலாகி வந்து ஐந்து மாதங்கள்தான் ஆகின்றன. அதற்குள் எப்படியோ அதிபரின் அன்புக்கு ஆளாகிப் போயிருந்தார். ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் ஒரு தடவையாவது அவரை அழைத்துப் பேச அதிபர் மறப்பதில்லை. அவரது முதுகுக்குப் பின்னால் இது குறித்துப் பல கதைகள். எதுவுமே அறியாதவர் போல் நடந்துகொள்வதன் மூலம் சிக்கலான அந்தப் பாடசாலை ஒழுங்கமைப்புக்குள் தப்பிப் பிழைத்து காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தார்.

"யெஸ். உட்காருங்கள்."

கதிரையின் நுனியில் தயக்கத்துடன் உட்கார்ந்தார். அலுவலகக் கோப்புகளை அடுக்கிக் கொண்டிருந்த காரியாலய ஊழியன் கோபாலன் தலைநிமிர்ந்து பார்த்து விட்டு மீண்டும் தன்

வேலையில் ஆழ்ந்தான்.

"நீங்கள்தானா இந்தக் கணக்கைச் செய்வித்தது?"

மேசையின் மீது பயிற்சிக் கொப்பியை நகர்த்திப்போட்டார் அதிபர். தங்க ஃபிரேம் போட்ட கண்ணாடிக்கூடாக கூர்மை யாகப் பார்த்தார்.

ஆசிரியர் கொப்பியைக் கையில் எடுத்துப் பார்த்தார். தான் செய்வித்த கணக்குதான். முந்தாநாள் பதில் கடமையின் போது மூன்றாம் தரத்திற்கு வழங்கியது.

"அது அந்த மாணவர்களின் தரத்துக்கு டூ மச் என்று பேரன்ட்ஸ் கொம்ப்ளைன் பண்ணியிருக்காங்க...."

"இல்ல மெடம். அந்த வகுப்புல பல கெட்டிக்கார மாணவங்க இருக்காங்க. அவங்களுக்காகத்தான் இதக் கொடுத்தேன். இன்னும் ரெண்டு வருஷத்துல ஸ்கொலர்ஷிப் எக்ஸாம் எழுதப்போறவங்க இல்லையா?"

அதிபர் தலையை அசைத்து அதனை ஆமோதித்தார்.

"அப்போ நா போகவா மெடம்?"

சில வினாடிகளின் பின்பு வஹ்ஹாப் ஆசிரியர் கேட்டார்.

"என்ன அவசரம்? கொஞ்சம் உக்காருங்க sir."

கட்டளைக்குப் பணிந்து மீண்டும் அமர்ந்தார்.

"ஏன் நேற்று நீங்கள் லீவு?"

"ஃப்ரெண்ட் கல்யாணம். கண்டிக்குப் போயிருந்தேன்."

"ஓ... ஐசீ..." என்று புன்னகைத்த அதிபர் தொடர்ந்தார்.

"கண்டி அழகான ஊர். அங்கே உள்ளவங்க நாகரிகத்துக்கு பேர் போனவங்க... அந்தக் காலத்துல நாகூட "கண்டி ஹைஸ்கூல்"லதான் படிச்சேன்..முப்பது வருஷத்தையும் அங்கதான் கழிச்சேன்.. என் ஃபாதர் அடிக்கடி சொல்லுவார், உனக்கு ஏத்த இடம் கண்டிதான். நீ அங்கதான் படிக்கணும். வளரணும். கல்யாணம் பண்ணி செட்டில் ஆகணும்... இப்படி சொல்லிக்கொண்டேயிருப்பார். நா படிக்கும்போது தனியா ஒரு வீடு, ரெண்டு ஆயாமார், ஒரு கார் எல்லாம் ஏற்பாடு பண்ணித் தந்தார். அது சரி, சாப்பாடெல்லாம் எப்படி? "

"பரவாயில்ல மெடம்..."

மெடம் சிரித்தார்.

"ஓமொம். வீட்டுல எப்பவும் நல்லா சாப்பிடுறவங்க கண்டியில

கிடைச்ச கல்யாண சாப்பாட்டக்கூட not bad ன்டுதான் சொல்லுவாங்க. அந்தக் காலத்துல எங்கட வீடும் அப்படித்தான். ஒரு கிழமைக்கு ஒரு கிடாய் அறுத்து கறியாக்குவாங்க. எங்க ஃபாதர் ஜி.எஸ். எங்க மதர் இதே ஸ்கூல்ல ப்ரின்ஸிபல். வடமத்திய மாகாணத்திலேயே முதலாவது முஸ்லிம் ப்ரின்ஸிபல் எங்க மதர்தான். எந்த நேரமும் விருந்துதான். வடமத்திய மாகாணத்தில, இந்த அனுராதபுர டிஸ்ட்ரிக்குல நல்ல ஃபேமஸா இருந்தது எங்க குடும்பம்...”

ஏறத்தாழ ஐம்பது வருடங்களுக்கு முந்திய கனவு லகுக்குள் காலடி வைத்ததுபோன்று அதிபர், தனது கதிரையில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டார். இதுதான் நல்ல தருணமெனப்படவே, வஹ்ஹாப் ஆசிரியர் மெதுவாக பேச்சைத் தொடங்கினார்.

“மெடம். வர்ற செகன்ட் டெர்ம்ல ஒரு ட்ரிப் ஏற்பாடு செஞ்சா நல்லம்தானே...?”

“ஒமோம். அது சம்பந்தமா ஸ்டாஃப் மீட்டிங்குல பேச வேணும். இந்த ஸ்கூல்ல ரெண்டு பார்ட்டி இருக்கு தில்லையா...? இழுபறி கேஸ்களையும் சமாளிக்கணும். முந்தியெல்லாம் என்னக் கண்டா ஊர் ஜனங்கள் எழும்பி நிண்டு மரியாதை செய்வாங்க. இப்ப இந்த அறுவான்களால எல்லாம் போச்சு. சின்ன பிள்ளைகள்கூட மதிக்குது இல்ல. அந்தளவுக்கு எல்லார் கிட்டயும் என்னப்பத்தி பொய்யும், புரட்டுமா சொல்லி வச்சிருக் கான்கள். நிர்வாகம் சரியில்லையாம். பெண் தலைமைத்துவம் உருப்படாதாம். என்ன மாத்த வேணுமாம். தூ! எப்பவும் கீழ்த் தரமான வேலைகளில்தான் கவனமாயிருக்கான்கள். யாரைச் சொல்ல? அவன்கள் பிறந்த கோத்திரமே அப்படித்தானே...! கடலைக்காரனும், பொட்டணிக்காரனும் படிச்சி, பதவிக்கு வந்துட்டா போதுமா? குணம் அதேதானே....!”

அதிபரது முகம் சிவந்து போயிற்று. வாய் கோணி, கண்கள் நனைந்தன.

நன்றாக மாட்டிக்கொண்டோமோ என்று ஆசிரியருக்கு பட்டது. ஏன் சுற்றுலா பற்றி கதை எடுத்தேன்? பேசாமல் அதிபர் புராணத்தைக் கேட்டபடி இருந்திருக்கலாம்.

கோபாலன் லேசாகத் திரும்பி ஆசிரியரை அனுதாபப் பர்வை பார்த்துவிட்டு மீண்டும் தனது வேலையில் ஆழ்ந்தான்.

மூக்கை உறிஞ்சியபடி அதிபர் மீண்டும் பேசத்தொடங்கினார்.

"இந்த கோபாலனக் கேட்டுப் பாருங்க sir. இவன்ட அப்பாகூட எங்கட வயல்லதான் வேல செஞ்சாரு. இவங்க காட்டுற மரியாதையும், மதிப்பும்கூட எங்க ஜனங்க கிட்ட இல்ல. அந்தக் காலத்துல எங்க வாப்பா பள்ளிவாசல் ட்ரஸ்ட்டியாவும் இருந்தாங்க. பில்டிங் சாமானெல்லாம் லொறி லொறியா வந்து எங்கட வீட்டுலதான் இறங்கும். மலேஷியா, சவூதி அரேபியா எம்பஸிக்கெல்லாம் கட்டட உதவி கேட்டு எங்கட ஃபாதர் எழுதின கடிதங்கள்...வந்த பதில்கள் எல்லாம் இப்பகூட எனக்கிட்ட பத்திரமா வச்சிருக்கேன். ஒரு செங்கல்லக்கூட எங்க வாப்பா அநியாயம் பண்ணினதில்ல. கெட்ட பேர் வாங்கவும் இல்ல. இப்பல்லாம் அப்படியில்ல. இந்த மக்களுக்கு எத செஞ்சாலும் திருப்தியில்ல..."

வஹ்ஹாப் ஆசிரியர் அதிபரின் முகத்தில் உணர்ச்சிக் கோலங்கள் வர்ணஜாலமிடுவதைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

"உங்களுக்குத் தெரியுமா sir? எங்கட ஃபாதர் நல்ல ரசிகர். ஜாக்குலின் கென்னடிக்குக்கூட அந்தக் காலத்துல கடிதம் எழுதியிருக்காரு. கென்னடி செத்த உடனே ஜாக்குலின், ஒனாஸிஸைக் கல்யாணம் கட்டினதைக் கண்டிச்சி லெட்டர் எழுதியிருக்காரு. அந்த லெட்டர் ஹெட் எனக்கிட்ட பத்திரமா இருக்கு. இப்ப அதேமாதிரிதான் வளர்ந்து வாறான் என் மகனும். இளைய தளபதி விஜய் எட்ரஸா, அல்காயிதா நெட்வர்க் பத்தின தகவலா...எல்லாமே விரல் நுனியிலதான். பட்பட்டுன்டு பதில் சொல்லுவான்..."

பேச்சு அடுத்த கட்டத்திற்கு நகர்ந்து கொண்டிருந்தது. நேரம் தண்ணீரைப்போல கரைந்துகொண்டிருந்தது. நான்காம் பாட முடிவுக்கு மணியடித்தது. வஹ்ஹாப் ஆசிரியர் எதிரேயுள்ள சுவரைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்.

------------------------------

அழகிய இள மங்கையரின் வண்ண வண்ணப் படங்கள் ஒட்டப்பட்ட சிறிய அறைச் சுவர்கள். சின்ன ஜன்னலுக்கூடாகத் தென்றல் தவழ்ந்து வந்து கொண்டி ருந்தது.

அது ஒரு சிறிய அறை. முன் ஹாலில் உள்ள நாலைந்து மேசைகளைத் தவிர, இவ்வறையினுள்ளே ஒரே ஒரு மேசையும், சில கதிரைகளும் போடப்பட்டிருந்தன. தனிமை விரும்பிகளுக்கு

வாய்ப்பான அறை.

மதிய இடைவேளை. முனாப், சலீம், இம்டியாஸ், மஜீத் நால்வரும் தமது ஆஸ்தான அறையில் தாம் கொண்டு வந்திருந்த உணவுப் பொட்டலங்களைப் பிரித்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அது, வலயக் கல்விப் பணிமனைக் கட்டடத்தின் அருகில் அமைந்திருந்த சிறிய சிற்றுண்டிச்சாலை. அந்த அலுவலக ஊழியர்கள் அனைவரும் ஆண், பெண் பேதமின்றி அங்கு வந்து சாப்பிட்டுச் செல்வார்கள்.

“சலீம் ஏன் நீ சாப்பாடு கொண்டு வரல்ல...?” மஜீத் கேட்டான்.

“வீட்டுல சின்ன பிரச்னை. ராத்திரி சண்டை போட்டு திரும்பிப் படுத்துட்டா. காலைல எனக்கு டீயும் இல்ல; சாப்பாடும் இல்ல...”

கடையில் வாங்கிய மரக்கறி ரொட்டியைக் கடித்தபடி சலீம் சொன்னான்.

கடைச் சேவகன் தண்ணீர் கிளாஸ்களை மேசையில் வைத்துவிட்டுப் போனான்.

“நடந்ததச் சொல்லுடா...”

“ஒண்ணுமில்ல. நா கண்ட மாதிரி சிகரட் குடிக்கிறனாம். ஏன்கிட்ட வந்தாலே அவக்கு வயித்தப் புரட்டுதாம். சிகரட்ட நிப்பாட்டுங்க. அதுவரைக்கும் கிட்ட வராதீங்க என்டெல்லாம் பெரிய வசனம் பேசுறா...”

இம்டியாஸும், முனாபும் புன்னகைத்துக் கொண்டனர். மஜீத் ஆறுதல் சொன்னான்.

“பெண்புத்தி பின்புத்தின்னு சும்மாவா சொன்னாங்க. கிடக்கட்டும். நீயும் போசாத. தானே வருவா...” சில நிமிட நேர மௌனத்திற்குப் பிறகு இம்டியாஸ் தொடங்கினான்.

“கவலய விடுடா. நம்ப புதிய ஃபிகர் எப்படி?”

தனது மேலதிகாரியாக-உதவிக் கல்விப் பணிப்பாளராக-சென்ற வாரம் பதவியேற்று கடமைக்கு வந்திருந்த சாந்த குமாரியைப் பற்றித்தான் அவன் குறிப்பிட்டான்.

“ச்சா... வெரி ஃபைன். நாப்பத்தஞ்சு வயசு இருக்கும். நல்ல ஸ்மார்ட் இல்லையா?”

“அது மட்டுமா? அவ இன்னும் மிஸ்தான்...”

“ஓஹோ..அதுதான் இவ்வளவு கெட்டப்பா? இளமை

ஊஞ்சலாடுகிறது..”

எல்லாரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

“நேத்து சைன் வாங்குறதுக்காக அது ரூமுக்குள்ள போனேன். ஃபிகர் வெளிய போய் இருந்திச்சி. மேசையில டயரி கிடந்திச்சி. சுட்டுட்டேன்.”

“என்ன சுட்டாய்?”

“சொந்த ஊர் கம்பஹா. இங்கே கூலிக்கு ஒரு வீடு எடுத்து பேரன்ட்ஸோட தங்கியிருக்கு. இன்னொரு விஷயம் சொல்லவா? ம்....வெயிட் அம்பத்தஞ்சி...”

மீண்டும் எல்லாரும் அட்டகாசமாகச் சிரித்தனர். சாப்பிட்டு முடித்து சிகரட் பிடிக்க ஆரம்பித்தனர்.

“அப்போ கணக்கு எப்படி?”

“இரு சொல்றேன்...” கண்களைச் சிமிட்டி, முகத்தில் சிருங்கார ரசம் தோய அவன் சொல்லத் தொடங்கினான். அவனது உள்ளத்தின் அழுக்குகள் அவன் வாயிலிருந்து புழுக்களைப் போல வந்து விழுந்தன.

மீண்டும் வெடிச்சிரிப்பு பரவி அந்த அறைச் சுவர்களில் மோதிற்று. சுவரில் தெரிந்த அழகிய பெண்களின் புகைப்படங் கள் சிகரட் புகையில் மங்க ஆரம்பித்தன.

.....................

கூட்டம் முடிந்து தலைவர் வெளியே சென்று விட்டார். அனைவரும் கசமுசவென்று பேசியபடி நகரத் தொடங்கினார்கள். ராசிக் எழுந்திருக்கவில்லை. காரணம், சுமையா இன்னும் எழுதிக்கொண்டிருந்தாள்.

அவள் தலை நிமிரும்போது அவன் எதிரே சுவரைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். சுவரில் பல புகைப் படங்கள் ஜனாதிபதி, பிரதமர், முதலமைச்சர் புகைப் படங்கள். நடுவே பிரதேச சபைக் கட்டடத்தின் முகப்புத் தோற்றம் அழகிய புகைப்படமாக. அதன் கீழே, வடமத்திய மாகாணத்தில் சிறந்த பிரதேச சபையாக கெகிறாவ பிரதேச சபை தெரிவு செய்யப்பட்ட போது வழங்கப்பட்ட சான்றிதழ்.

அது குறித்த பிரதேச சபையின் பாவனைக்குரிய விசாலமான விழாமண்டபம். விரைவில் நடைபெறப் போகும் தேர்தல் சம்பந்தமாக செய்யவேண்டிய வேலைகளைப் பகிர்ந்து வழங்குவதற்காக அக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஏறக்குறைய யாருமற்ற தனிமை. ராசிக் சற்று தூரத்தில், பக்கவாட்டில் அமர்ந்து குறிப்பெழுதிக் கொண்டிருந்த சுமையாவை கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

ஒருகாலத்தில் அவனுடன் ஏட்டிக்குப் போட்டியாகப் படித்தவள். பெரிய ஆசைகள், அதைவிடப் பெரிய கனவுகள். "படித்து முடித்து என்னவாகப் போகிறாய்?" என்று ஒரு கேள்வி கேட்டால் போதும். வரிந்து கட்டிக்கொண்டு தனது இலட்சியங்கள் பற்றிப் பேசுவாள்.

அவன் எதுவுமே காதில் விழாததுபோன்று பாசாங்கு பண்ணியபடி யாவற்றையும் கேட்டுக் கொண்டிருப்பான். அவளது அழகில் மயங்கி, அவளை ஒரு தலைப் பட்சமாக காதலித்த எத்தனையோ வாலிபர்களில் அவனும் ஒருவன். சாதாரண ஏழை. அவள் மீதுள்ள ஈடுபாட்டை வெளிக்காட்டிக் கொள்ள இன்றுவரை அவனுக்கு சந்தர்ப்பம் வாய்க்கவே யில்லை.

இப்போது இருவரும் ஒன்றாகவே வேலை செய்கின்ற போதும் இருவேறு திசைகளில் கவனங்கள். காரணம், ராசிக் அரசியலில் தீவிர ஆர்வங் காட்டினான். அலுவலக நேரம் போக, ஏனைய நேரங்களில் எல்லாம் ஆளும் கட்சிக்கு பிரசாரம் செய்து வந்தான். ஆளும் கட்சித் தலைவரின் வலது கையாக மேடைகளில் வீற்றிருப்பான் பெருமிதமாக.

இடையில், அவள் எதிர்க்கட்சித் தலைவரின் மனைவி யாகிப் போனாள். அவள் எந்தக் கட்சிக்கு வாக்களிக்கிறாள் என்பதுபற்றி ராசிக் எதுவும் அறிய முடியவில்லை. ஆயினும், அவள் எதிர்க் கட்சிக்காரியாகவே தோற்றமளித்தாள் இப்போது.

அவள் மீதுள்ள ஈடுபாட்டைக்கூட அரசியல் குறுக்கிட்டு மறைத்தது. வெறும் அலுவலகப் பேச்சுக்களோடு அவர்களது உறவு முடிந்துவிடும். என்றாலும், அவள் பார்க்காதபோது நாவில் எச்சில் ஊற, தலைமுதல் கால்வரை அவளை அளவெடுத்துக் கொண்டிருப்பது அவன் வழக்கம்.

அவள் தலைநிமிர்ந்தாள்.

"என்ன ராசிக் யோசனை...?"

"ஒண்ணுமில்ல..." சிரித்தபடி எழுந்துகொண்டான். அவளும் எழுந்து வெளியே செல்ல ஆரம்பித்தாள்.

அவள் வாசலை நெருங்கியபோது அவளை வெளியே செல்லவிடாமல் திடீரென ஒரு கும்பல் அவளைச் சூழ்ந்து கொண்டது.

எங்கிருந்து வந்தனர், எப்படி வந்தனர், யார் இவர்கள்...? எதுவுமே புலப்படவில்லை.

கும்பல் பல தூஷண வார்த்தைகளைப் பேசியபடி அவளை நெருங்கியது.

"பெரிய அரசியல்வாதிட பொஞ்சாதின்னு நெனப்பா? இந்தமுறையும் உன் கட்சிக்கு என்ன நடக்குதுண்டு பாரு. உன் புருஷன் ஊர விட்டே ஓடுவான்..."

அவர்களில் ஒருவன் திடீரென ஒரு வாளியை அவள்மீது கவிழ்த்தான். அது, ஆளுங் கட்சியின் வர்ணம் கலந்த நீர்.

அவளது இளமஞ்சள் நிறச்சேலை சில நொடிகளில் ஆளுங் கட்சியின் வர்ணமாக மாறியிருந்தது.

"இந்த முற வோட் போட இந்த சாரியோட போ."

அவள் மிரள மிரள விழித்தபடி பின்வாங்கினாள். கையிலிருந்த பேனையும், கொப்பியும் நழுவி வீழ, கதிரை களிடையே சிக்கியபடி ராசிக்கை நோக்கி ஓடிவந்தாள்.

"ராசிக் ப்ளீஸ்... காப்பாத்துங்க..."

நீரில் நனைந்த நிலையில் அவளது அழகிய தோற்றம் அவன் கண்களைக் கூசவைத்தது. அவளை யாரும் தீண்டாதபடி காப்பாற்றிவிட கைகள் பரபரத்தன.

ஒருகணம்தான். மறுகணம், தான் ஆளுங் கட்சிக்காரன் என்ற உணர்வு அவன் சிந்தையில் உறைக்கத் தொடங்கியது.

இவள் எதிர்க்கட்சிக்காரன் மனைவி. இவளை நான் ஏன் காப்பாற்ற வேண்டும்?

இரண்டடி விலகி நகர்ந்து, ஓடிச்சென்று பின்புற வாசலின் வழியாக அவன் வெளியேறியபோது, காரியம் முடிந்து கும்பல் வந்தவழியே நடக்கத் தொடங்கியிருந்தது.

விக்கித்துப்போய் மண்டபத்தின் உட்சுவரோடு ஒட்டி நின்றுகொண்டிருந்த அவளை எதிரேயிருந்த புகைப்படங்கள் அனுதாபத்துடன் பார்த்துக்கொண்டிருந்தன.

மல்லிகை - ஜூலை 2004

# பார்வை

முன்னிரவு ஏழு மணியாகியிருந்தது. அன்றைய வரவு செலவுக் கணக்குகளை சரிபார்த்து முடித்துவிட்டு நிமிர்ந்தாள் வித்யா. எதிரே வரவேற்பு கவுண்டரில் அமர்ந்திருந்த கௌதம் தன்னையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டதும் இலேசாக ஒரு திடுக்கம் பரவினாற் போலிருந்தது. மேலே கொங்க்ரீட் கூரையில் மாட்டப்பட்டிருந்த மின்விசிறிகள் வேகமாக சுழன்று கொண்டிருந்தன. ஆயினும், ஏதோ ஒருவகை வெப்பத்தை உணர்ந்தாள் அவள்.

தற்செயலாகத் திரும்புவதுபோல் நேர்முன்னால் சாந்தமே உருவாக வீற்றிருந்த வெண்ணிற புத்தர் சிலையின் மீது பார்வையை ஓடவிட்டாள். வீட்டுத் தோட்டத்திலிருந்து சற்று முன்னர் அவள் கொண்டு வந்து வைத்த ஊசிமல்லிகை மலர்கள் சிலையின் பீடத்தின்மீது பரவிக் கிடந்தன. அதன் கீழே செம்மஞ்சள் நிற விடிவிளக்கு எரிந்துகொண்டிருந்தது.

இந்நேரம் கணவரும், பிள்ளைகளும் திசாவெவக்குச் சென்று திரும்பிக் கொண்டிருப்பார்கள். இரவுச் சாப்பாட்டிற்கு ஓட்டலில் இருந்து ஸ்பெஷல் இடியப்ப பிரியாணி வாங்கி வருவதாக கணவர் கூறியிருந்தார். ஆகவே, தாமதமாகப் போனாலும் பிரச்னையில்லை.

எத்தனை வேலைக்காரிகள் இருந்தபோதிலும் கணவருக்கும், கட்டிளமைப் பருவத்தை நெருங்கிக் கொண்டி ருக்கும் தனது இரு பெண் குழந்தைகளுக்கும் தானே உணவு தயாரிப்பதிலும், அதனைப் பரிமாறுவதிலும் விஷேட கவனம் செலுத்துவாள் வித்யா. சமையற்கலை, வீட்டுப் பராமரிப்பு இவற்றில் ஆரம்பத்திலிருந்தே அவளுக்கு ஈடுபாடு அதிகம். அதுமட்டுமல்ல, கணக்கு வழக்குகளை நிர்வகிப்பதிலும், சரிபார்ப்பதிலும்கூட அவள் கெட்டிக்காரி. எனவேதான், நகரில் ஏறக்குறைய பத்து எனும் எண்ணிக்கையைத் தொட்டுவிட்ட வித்யா தனியார் மருத்துவ மனை, வித்யா ஃபார்மஸி,

வித்யா புத்தகசாலை, வித்யா ஜுவலரி, வித்யா ஹார்ட்வெயார் முதலிய நிறுவனங்களை அடிக்கடி சென்று மேற்பார்வையிடும் பணியையும் அவள் விரும்பியே மேற்கொண்டிருந்தாள். அவற்றில் பாதிக்கு மேற்பட்டவை அவளது கணவரது தனி உழைப்பினால் உருவானவை. எனினும், அவை யாவும் அவள் பெயரில், அவளது பணிப்புரையின் கீழே இயங்கின.

வித்யா தனியார் மருத்துவமனைக்கு அடிக்கடி விஜயம் செய்வது அவள் வழக்கம். மற்றெல்லா நிறுவனங்களை விடவும், மிக அதிகமாக மனிதர்களுடன் பழகுவதற்கு சந்தர்ப் பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நிலையமாக இம்மருத்துவ மனை திகழ்வது அதற்குக் காரணமாக இருக்கலாம்.

பக்கவாட்டு மாடிப் படிகளிலிருந்து தள்ளாடித் தள்ளாடி இறங்கி வந்துகொண்டிருந்த அந்த இளம் பெண்ணின்மீது அவள் பார்வை பதிந்தது. சீக்கிரமே இரண்டாம், மூன்றாம் மாடிகளுக்கு லிஃப்ட் வசதியை எற்படுத்திக் கொடுத்துவிட வேண்டும் என்று வழக்கம்போல வித்யா நினைத்துக் கொண்டாள். அவ்விளம் பெண்ணின் பொதிகளைத் தாங்கியபடி அவளது கணவனும், பின்னால் பச்சிளம் குழந்தையைக் கையில் ஏந்தியபடி ஒரு நடுத்தர வயது மாதும் வந்து கொண்டிருந்தனர். இரண்டு நாட்களுக்கு முன்னர் பிரசவத்திற்கென இம்மருத்துவமனைக்கு அனுமதி பெற்று வந்து, சுகப் பிரசவமாகி வீடுசெல்கிறாள் அப்பெண். அவர்களது கணக்கு இருபத்தையாயிரத்தைத் தொட்டிருந்ததை சற்றுமுன்னர் வித்யா சரிபார்த்திருந்தாள். பெரிய தொகைப் பணம் செலவழிந்தாலுமே திருப்தியான சேவை கிடைத்தது எனுமாப் போன்று அந்தக்கணவன் புன்னகைத்தான். அவளுக்கு நிறைவாக இருந்தது.

அவர்கள் வாகனத்தில் ஏறிச்செல்லும்வரை பார்த்துக் கொண்டிருந்தவள் எதிரே திரும்பியபோது மீண்டும் கௌதம் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அது சாதாரண பார்வை யல்ல. பெண்மையின் உறுதியை நிலைகுலைய வைக்கும் பார்வை. ஏறத்தாழ நாற்பத்தைந்து வயதை நெருங்கிக் கொண்டி ருந்தாலுமென்ன, அவளும் பெண்தானே.

கொஞ்ச நாளாகவே கௌதம் இப்படித்தானிருக்கிறான். எதையோ பறிகொடுத்தாற்போல்... வெறித்து வெறித்துப் பார்க்கிறான். இயல்பில் நல்லவன். வாட்ட சாட்டமான இருபத்தெட்டு வயது

இளைஞன். அந்த வாட்ட சாட்டத்தில் இலேசான முரட்டுத்தனம்கூட தென்படும். எனினும், வரவேற்பாளராக நியமிக்கப்பட்டிருந்த இந்த இரண்டரை வருட காலத்துக்குள் அவனைப் பற்றிய எந்த விதமான முறைப்பாடுகளும் அவளிடம் வந்து சேரவில்லை. தனக்குக் கீழேயுள்ள பணியாளர்களோடு ஒரு மேலதிகாரி யாகவன்றி ஆலோசகராகவே அவள் இயங்குவதுண்டு. அப்படியிருந்தும்கூட அவனுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு இதுவரை அவளுக்குக் கிட்டவில்லை.

உடம்போடு கௌவிய டீ-சேர்ட்டையும், இறுக்கமான குட்டைப் பாவாடையையும் இழுத்துவிட்டுக்கொண்டு அவனருகே சென்றாள் வித்யா.

"கௌதம், எப்போது உங்க ட்யூட்டி முடியும்?"

"இதோ இப்ப ஆச்சு மெடம்."

"எப்படி வீட்டுக்குப் போவீங்க?"

"பஸ்ஸில்தான் மெடம்."

"உங்களுக்கு ஆட்சேபணை இல்லாட்டில் என்னுடன் வரலாம். கார்ல ட்ரொப் பண்றேன்..."

அவன் மறுப்பின்றி எழுந்துகொண்டான். பக்கத்தில் அமர்ந்திருந்த தாதியிடம் ஏதோ கூறி விடை பெற்றுக்கொண்டு ஒப்பமிட்டுவிட்டு எழுந்தான்.

ஏறக்குறைய வைத்திய ஆலோசனைச் சேவைகள் நிறைவு பெற்றிருந்தன. இனி படிப்படியாக அந்த மருத்துவமனை அமைதியடைந்துவிடும். உள்நோயாளி களின் பிரச்சினைகளும், தாதிகளின் ஓட்ட நடைகளும், விடுதி வைத்தியரின் பேச்சுக் குரலும் மட்டுமே அங்கு எதிரொலிக்கும்.

காரை இயக்குமுன் அவனைத் தன் பக்கத்து சீட்டுக்கு முறுவலுடன் அழைத்தாள் வித்யா. அவனும் ஏற்றுக்கொண்டான்.

நெடுஞ்சாலையில் மெல்ல வழுக்கிச் செல்லும் காரின் அழகை இரசித்தபடி அமர்ந்திருக்கும் அவனை ஓரக்கண்ணால் பார்த்தபடி பேச்சைத் தொடங்கினாள்.

"உங்களுக்கு ஏதும் பிரச்சினையா கௌதம்?"

அக்கேள்வியை எதிர்பாராதவனாகத் திடுக்கிட்டு அவளைக் கூர்ந்து பார்த்தான்.

"எனக்கொண்ணும் இல்லையே. நல்லாத்தானே இருக்கேன்"

"அப்பசரி, சும்மாதான் கேட்டேன்..."

சிறிதுநேர மௌனத்திற்குப்பின் மீண்டும் கேட்டாள்.

"உங்க மனைவி என்ன செய்கிறாள்?"

"சாதாரண ஹவுஸ் வைஃப். இரண்டு சின்னப் பிள்ளைகள். மூத்தவர் இந்த வருஷம் ஸ்கூல் போகிறார்..."

அனுராதபுரம் நெடுஞ்சாலையிலிருந்து விலகி ஜயந்தி மாவத்தைக்குச் செல்லும் வீதியில் கார் ஓடிற்று. அவன் வழிகாட்டியபடி வந்துகொண்எருந்தான். வீட்டை நெருங்கியதும், "மெடம், அடுத்த வாரம் எனது சின்னக் குழந்தையின் பேர்த்டே பார்ட்டி வருகிறது. உங்களுக்குத் தான் முதல் அழைப்பு. கண்டிப்பாக கலந்துகொள்ள வேண்டும்" என்றபடி இறங்கினான்.

"ஓ.கே...பை..."

காரை தனது வீட்டை நோக்கித் திருப்பினாள். எப்படியோ கௌதமை நெருங்கிவிட்ட மகிழ்ச்சி மனதில் நிறைந்திருந்தது. இனி அவனது பிரச்சினை என்னவென்று அறிந்துவிடலாம். ஏன், அடுத்த வாரமேகூட அறிந்துவிடலாம்.

---------------

அன்றைய சம்பவத்திற்குப் பிறகு வித்யாவால் கௌதமைப் பற்றி நினைக்க முடியவில்லை. பல வேலைகள், பிரச்சினைகள், கணவரின் மருத்துவப் பரிசோதனை என்று அவளது நாட்கள் கரைந்து கொண்டிருந்தன. மருத்துவமனை பக்கமும் செல்ல முடியவில்லை. நான்கு நாட்களுக்குப் பிறகு கௌதம் வீடு தேடி வந்தான்.

"மெடம், நீங்கள் குடும்ப சமேதராக கட்டாயம் பேர்த்டே பார்ட்டிக்கு வரவேண்டும். வரும் ஞாயிற்றுக்கிழமை பகல் போஷணம் எங்கள் வீட்டில்."

"கட்டாயமாக வருவேன்"

சிரித்துக்கொண்டே அவள் கூற, அவளது பதிலை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அவனது முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது. பட்டாம் பூச்சிகள்போல கண்கள் துடித்து அங்குமிங்கும் அலைந்தன. ஒருகணம்தான். பின்னர் சட்டென தலையைக் கவிழ்த்துக் கொண்டான். திடீரென மௌனத்தில் ஆழ்ந்தான்.

அதற்குள் அவளது கணவர் ஊனமுற்ற தனது இடதுகாலை இலேசாக இழுத்தபடி அவ்விடத்துக்கு வந்துசேர, அவள் தனது வேலைகளைப் பார்ப்பதற்காக அப்பால் நகர்ந்தாள். மனதுக்குள்

பழைய கேள்வி மறுபடி சுரண்டத் தொடங்கிற்று.

“மெடம், நான் போறேன். பொஸ், நீங்களும் கண்டிப்பா வரணும்…”

அவரது கரங்களைப் பற்றி அன்புடன் கூறிவிட்டு அவசரமாக வெளியேறினான்.

---

ஞாயிற்றுக்கிழமை பகல். சொன்னபடியே கௌதமின் வீட்டுக்கு வித்யா குடும்ப சகிதம் சென்றிருந்தாள். கௌதம் முகம் மலர்ந்து நின்றான். தனது சின்னஞ்சிறிய வீட்டின் முன்னே தோட்டத்தில் பூத்துநின்ற அழகிய மலர்ச்செடியின் கொத்து ஒன்றைச் சட்டெனப் பறித்து அவளது குழந்தை களுக்குக் கொடுத்து வரவேற்றான். மிக நெருங்கிய நண்பர்கள், உறவினர்களது வீடுகளுக்கு வரும்போது மட்டும் இயல்பாக, கைத்தடி ஊன்றாது வருகின்ற வித்யாவின் கணவர் காரிலிருந்து இறங்குவதற்கு உதவி செய்தான்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு அவன் உற்சாகமாக இருப்பதைக் காண அவளுக்கும் சந்தோஷமாக இருந்தது. வாசலில் அவனது குழந்தைகள் அழகாக உடுத்தியபடி நின்றிருந்தன. தான் கொண்டுவந்த விலையுயர்ந்த பரிசுகளை அவற்றின் கைகளில் கொடுத்தாள் வித்யா.

நாலுபேர் உட்கார்ந்து பேசினால்கூட தாங்காது போலிருந்த ஒடுக்கமான ஹோல். அதன் இரு மூலைகளிலும் பளிச்செனத் துலங்கிய இரண்டு பெரிய குத்துவிளக்குகள் வைக்கப்பட்டிருந்தன. வாசலுக்கு நேரே சுவரில் வெண்கல புத்தர் சிலை. அதற்கு நேர் கீழே வித்யாவின் அழகிய புகைப்படம் ஒன்று ..பிரேம் பண்ணப்பட்டு மாட்டப்பட்டிருந்தது. 'My Madam' என்ற ஸ்டிக்கர் அதன் கண்ணாடிமீது கீழே ஒட்டப்பட்டிருந்தது. படத்துக்கு மேலே புத்தம் புதிய ரோஜாப்பூ ஒன்று செருகப்பட்டிருந்தது. ஹோலை ஒட்டிய வரவேற்பறையில் மேசைமீது சாப்பாடு தயாராக இருந்ததை இங்கிருந்தே காணமுடிந்தது. வாசனை மூக்கைத் துளைத்தது.

அவர்கள் உள்ளே வந்து அமர்ந்து கொண்டதும் தண்ணீர்க் குவளையைத் தட்டிலேந்தி அவன் நீட்ட, எல்லோரும் ஒருசேர அதைத்தொட்டு தமது அங்கீகாரத்தை சம்பிரதாயபூர்வமாக தெரிவித்துக்கொண்டனர்.உள்ளே சென்று குளிர்பானம் எடுத்து

வந்தான் கௌதம்.

“உங்கள் மனைவி எங்கே?”

“பக்கத்து வீட்டுக்குப் போயிருக்கிறாள். வெளிநாட்டி லிருந்து நீண்ட நாட்களுக்குப் பிறகு எனது தங்கை தொலை பேசியில் கதைக்கப் போகிறாள். அவளுடன் இவள் சரியான பாசம். பேசிவிட்டு இப்போ வந்துவிடுவாள்...”

“இங்கே பார் வித்யா.இந்தப் புகைப்படம் நமது வைத்தியசாலையில்கூட இல்லையே...”

வித்யாவின் கணவர் அவளது புகைப்படத்தை சுட்டிக் காட்ட, அவள் புன்னகைத்தாள். கௌதம் அதைச் சிலாகித்து, “ஆமாம் பொஸ். இதுபோல ஒரு புகைப்படம் நமது ஹொஸ் பிட்டல் கவுன்ட்டர் சுவர்மேலே கட்டாயம் மாட்ட வேண்டும்” என்றான்.

“எங்கே வேறு யாரையும் காணோம்?”

“உங்களுக்கு மட்டும்தான் இந்த பார்ட்டி...”

அவனது குழந்தைகளும், அவளது பிள்ளைகளும் தாமாகவே அறிமுகம் செய்துகொண்டு “ஹெப்பி பேர்த்டே” பாடத் தொடங்கின.

நேரம் நழுவிச் சென்று கொண்டிருந்தது. எப்போதும் நேரத்தின் பெறுமதியறிந்து செயலாற்றும் அவளை கௌரவிப்பதுபோல அவன் சாப்பிட அழைத்தான். அவர்கள் சாப்பாட்டு மேஜைக்குச் சென்றனர்.

சாப்பாடு சுவையாக இருந்தது. பாரம்பரிய முறையில் சமைக்கப்படடிருந்த உணவை குழந்தைகள் ருசித்து உண்டன. அவன் அருகிருந்து பரிமாறினான். தான் வேறு யாரையும் விருந்துக்கு அழைக்கவில்லையென்பதையும், அவர்களை மிக எதிர்பார்த்திருந்ததையும் பற்றி அவன் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டான்.

சாப்பிட்டு முடிந்தபின்னர் அனைவரும் மீண்டும் ஹோலில் சென்று அமர்ந்துகொண்டனர். குழந்தைகள் தோட்டத்தில் விளையாடத் தொடங்கின.

“நீங்கள் சாப்பிடல்லையா கௌதம்?”

“அவளும் வரட்டும். பாவம் . உங்களுக்கு விருந்து வைக்க அவள் ரொம்ப சிரமம் எடுத்துக்கொண்டாள்...”

சட்டென பக்கவாட்டிலிருந்து ஓடிவந்து, மூச்சுவாங்க வாசலில் நின்றாள் கௌதமின் மனைவி. முன்புற நுழை வாயில் வழியாக

அவள் வரவில்லை என்பதை நேரே அமர்ந்திருந்த வித்யா அவதானித்தாள். பக்கத்து வீட்டுத் தோட்டத்திலிருந்து குறுக்கு வழியில் வந்திருக்கக்கூடும். சிவப்பு பூப்போட்ட அழகிய வெள்ளை நிற கவுன் அணிந்திருந்தாள். அந்தக் கவுன் அவள்மீது ஆணியடித்துக் கொழுவி விட்டதுபோன்று காற்றில் ஆடிக்கொண்டிருந்தது. அத்தனை ஒடிசலான, எலும்புக்கூடு போன்ற, கூனிய, சதைப்பற்றற்ற உடம்பு.

தனது கைகளின் முழுவனப்பும் தெரியும்படியாக கையற்ற, இறுக்கமான, கடும்பச்சைநிற சல்வாரி அணிந்து, தங்க பொம்மைபோன்று முன்னால் அமர்ந்திருந்த வித்யாவை கண்கொட்டாமல் சிறிதுநேரம் பார்த்தாள். பிறகு சுதாரித்துக்கொண்டு கைகூப்பி வணக்கம் கூறினாள். சிரித்தபடி, "நான் தாமதித்து விட்டேன். மன்னியுங்கள்" என்று அவள் சொன்னபோது, வலிந்து அலங்கரிக்கப்பட்டிருந்த மாநிறமான, அவளது ஒட்டிய கன்னங்கள் இலேசாகத் திரண்டன. அந்தத் திரட்சியிலும் ஒரு கரும்புள்ளியாக, கடை வாயில் இரண்டு பற்கள் விழுந்துவிட்ட பெரிய இடைவெளி தெரிந்தது.வித்யா தன்னையறியாமலே கௌதமைத் திரும்பிப் பார்த்தாள்.

அந்தப் பார்வையில் தாய்மையின் பரிவு தெரிந்தது.

மல்லிகை - நவம்பர் 2005

# திரை

முற்றிலும் அந்நியமான அந்தச் சூழலில் தனித்து நின்றிருந்தாள் ராசிதா. தனித்துத் தெரிவதற்குக் காரணம் இருந்தது. ஆம். சிங்கள மொழி பேசுகின்ற, பௌத்த கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்ற, அல்லது அதைவிட ஒருபடி மேலே போய் மேனாட்டு நாகரிகப் பூச்சை அப்படியே அள்ளிக்கொண்ட அந்தக் கூட்டத்தின் நடுவில் கறுப்பு நிற ஃபர்தாவினால் தலையையும், முகத்தின் பெரும் பகுதியையும் மறைத்து, கைகள் முழுவதும் மறையும் விதமாகச் சட்டையும், சேலையும் அணிந்திருந்தாள் அவள்.

அனுராதபுரத்தில் ஆங்கில மொழியைக் கற்பிக்கப் போகின்ற ஆசிரிய மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்காக உருவான மத்திய நிலையம் அது. DELIC என்று அழைக்கப் படும் அந்த மாலை நேரக்கல்லூரியில் பொலனறுவையிலிருந்து தெரிவு செய்யப்பட்டு வந்த ஒரே ஒரு முஸ்லிம் யுவதியே ராசிதா.

சரளமாகச் சிங்களம் பேசத்தெரியாத, சிங்களம் பேசுகின்ற கூட்டத்தைக் கண்டாலே உள்ளூர நடுங்குகின்ற இளம்பெண் அவள். முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பியிருக்கும் ஒரு குடும்பத்திலிருந்து வந்தவள். தந்தையுடன் வந்து சேர்ந்தபோது இருந்த தைரியம், இப்போது கூட்டத்தில் கலந்து விடப்பட்டபோது முற்றிலும் குறைந்து போயிருந்தது.

ஆசிரிய மாணவர்களுக்குரிய ஒழுக்க விதிமுறை களைத் தலைமை ஆசிரியர் விளக்கிக் கொண்டிருந்தார். எல்லோரும் அங்கு கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விதி ஒன்றுண்டு. அதுதான், எந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருந் தாலும் அவர்கள் ஆங்கிலத்தையே பேச வேண்டும் என்பது. அவரும் முற்றிலும் ஆங்கிலத்திலேயே உரையாற்றிக் கொண்டிருந்தார்.

கூட்டம் முடிவுற்றதும் அனைவரும் தத்தமது வகுப்புகளுக்குச் செல்லத் தொடங்கினர். படிகளில் மேலே ஏறிச்செல்லும்போதே, புதிதாகக் கட்டிய சேலை சரியாகக் கட்டப்படாததால் கால் தடுக்கி

இடறினாள் ராசிதா. ஒருவாறு சமாளித்துக்கொண்டு போய்ச் சேர்ந்தபோது, வகுப்பில் மாணவர்கள் அனைவரும் சென்று அமர்ந்திருந்தனர்.

குனிந்த தலை நிமிராமலே நேராகக் கடைசி வரிசைக்குச் சென்று மேசையில் புத்தகங்களை வைத்தாள். உட்காருவதற்கு ஒரு கதிரைகூட இல்லை. அவள் மலங்க மலங்க விழிக்கத் தெடங்க, பக்கத்திலிருந்து ஓர் இனிய பெண்குரல் ஆங்கிலத்தில் சொல்லிற்று.

"அடுத்த வகுப்புக்குப் போய் கதிரை எடுத்து வாருங்கள்..."

ராசிதா பக்கவாட்டு மேசையைத் திரும்பிப் பார்த்தாள். வெள்ளை வெளேரென்று, உயரமான, அழகிய, இளம் பெண்ணொருத்தி புன்முறுவலுடன் அமர்ந்திருந்தாள். அவளுடன் மெல்லிதாய்ப் புன்னகைத்துவிட்டு மெல்ல மெல்ல நடந்து சென்று ஒரு கதிரையை எடுத்து வந்தாள்.

பிற்பகல் இரண்டு மணிக்குத் தொடங்கி மாலை ஐந்து மணிவரை விரிவுரைகள் நடைபெற்றன. ஒரு மணித்தியாலம் கழிவது ஒரு வருடம் கழிவது போலிருந்தது ராசிதாவுக்கு. ஐந்து மணியானதும் விரைவாகக் கையெழுத்திட்டுவிட்டு, வெளியே காத்து நின்றிருந்த தந்தையிடம் ஓட்டமும் நடையுமாகச் சென்றாள்.

புதிய பஸ் நிலையத்தை நோக்கி இருவரும் நடக்கத் தொடங்கினார்கள். சிறிது தூரம் சென்றதும் பின்னால் தற்செயலாகத் திரும்பியபோது அந்தப்பெண் வந்து கொண்டிருந்தாள். அவள் வந்து சேரும்வரை தந்தையுடன் தாமதித்து நின்று தானாகவே அறிமுகம் செய்து கொண்டாள்.

"நான் ராசிதா. நீங்கள்..?"

"நான் ஸ்வர்ணா..."

பளீரென்று வெண்முத்துப் பற்கள் ஒளிவீச அவள் பேசினாள். மயிலும், குயிலும் கலந்த ஒரு வடிவமோ இவள் என்று ஒரு திகைப்பு உண்டாயிற்று ராசிதாவுக்கு. தான் அவ்வளவு அழகானவள் இல்லை என்ற ஞாபகமும், தவிப்பும் உடன் எழுந்து ஹிம்ஸை செய்தாலும் சமாளித்துக் கொண்டாள்.

"நான் பொலனறுவையிலிருந்து வருகிறேன். புதிய பஸ் நிலையத்திற்குப் போகிறேன். நீங்கள்..?"

"நானும் அந்தப் பக்கம்தான்.."

தந்தை சற்று முன்னால் செல்ல, இருவரும் பேசிக் கொண்டே

நடந்தனர். இருவருக்கும் தாய்மொழிப் பிரச்சினை தடையாக இருந்தபோதும் இரண்டாவது மொழியாகிய ஆங்கிலம் கை கொடுத்தது. அந்தப்பெண் கலகலப்பாகப் பேசினாள்.

"எனது சொந்த ஊர் குளியாப்பிட்டிய. எனது பெற்றோர் இங்கே அரசாங்க உத்தியோகம் செய்கின்றவர்கள். ஆவர்களுடன் வாடகை வீட்டில் தங்கியிருக்கிறேன்."

சிறிது தூரம் மௌனமாக நடந்தனர். மீண்டும் அவளே பேசினாள்.

"நீங்கள் ஏன் இவ்வாறு உடையணிந்திருக்கிறீர்கள்?"

"இப்படித்தான் பெண்கள் உடுக்கவேண்டுமென எமது மார்க்கம் சொல்கிறது..."

"உள்ளே வேர்த்துக் கொட்டுமே...."

"அதையெல்லாம் பார்க்க முடியுமா? நாங்கள் சொர்க்கம், நரகம் பற்றி நம்புபவர்கள். மறுமையில் நமது இந்த உடைக்கெல்லாம் நமக்கு நற்கூலி வழங்கப்படும்..."

"இப்படி அணிந்து நடமாடுவது கஷ்டமாக இல்லையா?"

"இல்லையே. பெண்களுக்கு அதியுயர் பாதுகாப்பு வழங்குவதற்காகவே இந்த உடை கட்டாயமாக்கப்பட்டது. இதை அணிந்துகொண்டு ஆண்கள் மத்தியில் நாம் பயமின்றிப் போய் வரலாம்..."

புன்னகை மாறாமலே கேட்டுக் கொண்டிருந்துவிட்டு ஸ்வர்ணா சொன்னாள்.

"பொதுவாக உங்களைப் போன்ற முஸ்லிம் பெண்கள் எங்களுடன் நெருங்கிப் பழகுவதில்லை. நீங்கள் வித்தியாசமாக இருக்கிறீர்கள்..."

ராசிதாவும் இதுவரை அந்நியப் பெண்கள் யாருடனும் நெருங்கிப் பழகியவளல்லள். எனினும், ஸ்வர்ணாவை அவளுக்கு முதல் பார்வையிலேயே பிடித்துப் போயிருந்தது. பௌத்த மதம், சிங்களப் பெண்கள் பற்றியெல்லாம் அவளுக்குள் நிறைய அசூயைகள் இருந்தன. எனினும் மறைத்துக்கொண்டு கூறினாள்.

"ஒரு முஸ்லிம் பிறர்மீது எப்போதும் நல்லெண்ணம் கொண்டிருக்க வேண்டும். அதிகமாக வணக்க வழிபாடுகள் பற்றிப் பேசுகின்ற எங்கள் மார்க்கத்தில், அவற்றை அதிகம் செய்யாவிட்டாலும்கூட பிறர்மீது நல்லெண்ணம் கொண்ட ஒரு

முஸ்லிம் சுவர்க்கம் செல்ல வாய்ப்புண்டு என்று எங்கள் நபிகளார் கூறியுள்ளார்கள்...”

“ஓ...அப்படியா....!” ஸ்வர்ணா சிலாகித்தாள்.

இப்படித்தான் ஆரம்பிக்கலாயிற்று அவர்கள் நட்பு.

--------------------

ஒருநாள் முற்பகல் ஸ்வர்ணா ராசிதாவின் விட்டுக்குச் சென்றிருந்தாள். பொலனறுவையில், ஒரு குக்கிராமத்தில் மிகச் சாதாரணமான ஒரு வீடு. வீட்டின் பின்னால் பெரியதொரு காய் கறித் தோட்டமும், விசாலமான விவசாயக் கிணறும் இருந்தன.

ராசிதாவின் பெற்றோர் முகம் மலர அவளை வரவேற்றனர். குளிர்பானம் அருந்தியபின் ராசிதாவும், ஸ்வர்ணாவும் தோட்டத் திற்குச் சென்று மரநிழலில் சிறிதுநேரம் அமர்ந்திருந்தனர்.

“ஒரு முஸ்லிம் வீட்டுக்கு விஜயம் செய்வது இதுதான் முதல் தடைவ.....” ஸ்வர்ணா மகிழ்ச்சியுடன் சிரித்தாள்.

“ எனக்கும் நீங்கள் வந்தது ரொம்பச் சந்தோஷம். இன்னும் இரண்டு மாதங்களில் பரீட்சை முடிந்துவிட்டால் பிறகு எப்படிச் சந்திக்கப் போகிறோமோ?”

“அதுமட்டுமா? எந்த மூலையில் எந்த ஸ்கூலுக்குத் தூக்கிப் போடுவார்களோ?”

சிறிதுநேரம் அதுபற்றிய சிந்தனையில் இருவரும் லயித்திருந்தனர்.

“ ராசிதா, உங்கள் குடும்பத்தில் யார் இந்தத் தோட்டத்தைக் கவனிக்கிறார்கள்..?”

ஆங்காங்கே மாங்கனிகளும், கொய்யாப் பழங்களும் நிறைந்திருந்த மரங்களைச் சுட்டிக்காட்டி ஸ்வர்ணா கேட்டாள்.

“வாப்பாவும் நானாவும்தான். இதுதவிர குளத்திற்குப் பக்கத்தில் வயலும் உண்டு. போய் வருவோமா?”

“இப்பாது முடியாது. நான் சீக்கிரம் போகணும்...”

இருவரும் எழுந்து தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு வீட்டினுள் வந்து சேர்ந்தபோது மேசையில் மத்தியான உணவு தயாராக இருந்தது. மின்சாரம் போன்று விரைவாக ஓடியாடி வேலை செய்கின்ற ராசிதாவின் தாயாருக்கு ஏறத்தாழ நாற்பது வயதுதானிருக்கும் என்று ஸ்வர்ணா அனுமானித்தாள். அவள் எப்படித்தான் வேலை செய்கின்ற போதிலும் அவளது தலையிலிருந்து

முக்காடு கழன்று விழவேயில்லை என்பதையும் அவள் ஆச்சர்யத்துடன் அவதானித்தாள். அதுமட்டுமல்ல, ராசிதாகூடத் தனது மார்பி லிருந்து தாவணி நழுவிடா வண்ணம் இழுத்து இழுத்து மூடிக் கொள்வதையும் அவள் அவதானிக்கத் தவறவில்லை.

ராசிதாவின் தாய் எதோ சொல்ல அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொன்னாள் ராசிதா.

“இப்போ வாப்பா சாப்பிடும் நேரம். அவர் சாப்பிட்டபின் நாம் சாப்பிடலாம். வா உள்ளே போவோம்..”

அவர்கள் இருவரும் உள்ளே செல்ல, ராசிதாவின் தந்தை வந்து சாப்பிட அமர்ந்தார். அவரது முகத்தில் தனது மகள் ஆங்கிலம் பேசுவது பற்றிய பெருமிதம் மிளிர்ந்தது.

“நீங்கள் யாருமே முதலில் சாப்பிடுவதில்லையா?”

“எங்கள் வீட்டு வழக்கம் அப்படி. வாப்பாவுக்குத்தான் முதலில் சாப்பாடு வைப்பார் உம்மா. பிறகுதான் மற்றோருக்கு...”

அவள் சொல்ல, வார இறுதித் தினங்களில் மாலை வேளைகளில், ஒன்றாக அமர்ந்து மதுபானம் அருந்திவிட்டு, இரவிரவாகச் சண்டையிட்டுக் கொள்கின்ற தனது பெற்றோரை எண்ணிப் பார்த்தாள் ஸ்வர்ணா.

தனது அறையிலுள்ள ஒவ்வொரு பொருளையும் அணுஅணுவாக ஆராய்ந்து அவள் ரசிப்பதை மௌனமாக அவதானித்துக்கொண்டிருந்த ராசிதா கேட்டாள்.

“நீங்கள் மலைநாட்டு நடனம் ஆடுவீர்களா?”

“ஆமாம். உங்களுக்கெப்படித் தெரியும்...? “

“உங்களது ஒவ்வொரு அடியிலும் கண்டிய நடன அசைவுகள் வருகின்றன. ப்ளீஸ், எனக்காக ஒரு நடனம்...”

மறுக்காமல் ஆடிக்காட்டினாள் ஸ்வர்ணா. உள்ளே யிருந்து ராசிதாவின் தாயார் சாப்பிட அழைக்க, இருவரும் எழுந்து சென்றனர்.

ராசிதாவின் தமையன் வயலிலிருந்து வந்து கொண்டிருந்தான். ராசிதா அவனை அறிமுகம் செய்து வைக்க, அவன் நாணம் கலந்த மெல்லியதோர் புன்னகை யுடன் அப்பால் சென்றான். உணவை ரசித்துச் சாப்பிட்டபடியே ஸ்வர்ணா சொன்னாள்.

“உங்கள் எல்லோரிடமும் மத நம்பிக்கை அதிகமாகக் காணப்படும் அதே நேரம், ஏதோ ஒரு மென்மையுணர்ச்சியும் இழையோடுகின்றதே..”

"உண்மைதான். எங்கள் மார்க்கத்தில் எப்போதும் மென்மைக்கு அதிக இடமுண்டு. உங்களில் யார் அதிகம் மென்மையைக் கையாளுகின்றாரோ, அவர் அதிகம் நற்கருமங்களைச் செய்துவிட்டார் என்று எமது இறைத்தூதர் கூறியுள்ளார்கள்..."

"ஓ..." என்று வியந்த வண்ணம் சாப்பிட்டு முடித்தாள் ஸ்வர்ணா.

பொழுது சாய்ந்தபின்னர் அவள் புறப்படத் தயா ரானாள். தோட்டத்திலே பறித்த புதிய கனி வர்க்கங்களைச் சிறிய பையொன்றிலே இட்டு அவளிடம் வழங்கினாள் ராசிதாவின் தாய். ராசிதாவும், அவளது தமையனும் அருகி லிருந்த பஸ் நிலையத்திற்கு அவளை அழைத்துச் சென்று பஸ் வரும்வரை கூடவே நின்று அவளை வழியனுப்பி வைத்தனர். விடை பெற்றுச் செல்லும்போது ஸ்வர்ணாவின் உள்ளத்தில் புதியதோர் மகிழ்ச்சி நிறைந்திருந்தது.

-------------

அவர்களது ஒருவருட கற்கைநெறியும், பரீட்சையும் நடைபெற்று முடிந்துவிட்டன. இருவருக்கும் தொலைதூரக் கிராமப்புறப் பாடசாலைகளில் நியமனங்களும் கிடைத்தன. தொழிலின் தன்மை காரணமாகவும், வேறு பல வேலைப் பளுக்கள் காரணமாகவும் இருவரும் அதிகம் சந்தித்துக் கொள்ளவில்லை. பேசவும் முடியவில்லை. இருந்தாற் போலிருந்து கடிதத்தில் அல்லது தொலைபேசியில் பேசிக்கொள்வது மட்டுமே!

இடையில் ஸ்வர்ணா திருமணம் செய்துகொண்டாள். தான் காதலித்த எட்னா சொக்லேட் கம்பனி விற்பனைப் பிதிநிதியையே பெற்றோரது ஆசியுடன் மணமுடித்துக் கொண்டாள். திருமணத் திற்குக்கூட ராசிதா வராதது குறித்து ஸ்வர்ணா மிகுந்த கவலை கொண்டாள்.

ஒருநாள் மாலை. அநராதபுரம் பொது நூலகத்திற்கு சென்றுவிட்டு முன்றலில் தனது கணவருடன் கைகோர்த்தபடி வந்து கொண்டிருந்தாள் ஸ்வர்ணா. எதிரே வீதிக்கு அடுத்த கோடியில், பஸ் நிலையத்தில் ராசிதா நின்றிருப்பதைக் கவனித்தாள். அவளது தந்தை எங்கோ கடைக்குச் செல்ல, அவர் போன திக்கையே பார்த்துக் கொண்டு ராசிதா நின்றிருந்தாள்.

வழக்கமான அவளது உடையைக் கொண்டுதான் ஸ்வர்ணா அவளைக் கண்டுபிடித்தாள். வேகமாக அவளிடம் சென்றாள்.

"அசோக அங்கே பாருங்கள் ராசிதா..."

"வா, போய்ப் பேசலாம்..."

இருவரும் வந்து சேர்வதற்குள் அசோகவின் பால்ய நண்பன் வழிமறிக்க, அசோக அவளிடம் அனுமதி பெற்றுக்கொண்டு நண்பனுடன் அப்பால் நகர்ந்தான்.

ஸ்வர்ணா ஓட்டமும், நடையுமாகச் சென்று ராசிதாவின் முன்னால் நின்றாள். தந்தை போன திக்கையே பார்த்துக் கொண்டிருந்த ராசிதா தற்செயலாகத் திரும்ப, அவள் முன்னால் மலர்ந்த முகத்துடன் ஸ்வர்ணா நின்றிருந்தாள். ராசிதா சடாரென ஒரு நொடிப்பு நொடித்துவிட்டு வெறுப்புடன் அப்பால் திரும்பிக் கொண்டாள்.

ஸ்வர்ணாவுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பொங்கி வந்த பால் பானையில் ஒரு துளி நீர் பட்டு விட்டதைப்போல அவளது உற்சாகம் யாவும் வடிந்து போயின. முகம் கறுத்து அசடு வழியத் தொடங்கிற்று.

ராசிதா ஏன் அப்படி ஒரு வெட்டு வெட்டினாள்? அவளால் எதையும் அனுமானிக்க முடியவில்லை.

திடீரென இவளுக்கு என்ன வந்தது? இவ்வளவு காலமும் ஒரு கல்மிஷமும் இன்றிப் பழகினாளே...

என்னிடத்தில் ஏதாவது கெட்ட குணம் பிடிக்கவில்லையோ? பிடிக்காவிட்டால் அதை நேரிடையாக அல்லது கடிதம் மூலம் சொல்லியிருக்கலாமே... அப்படி எதுவுமே இதுவரை தெரியவில்லையே!

தனக்கு முதுகைக் காட்டிக் கொண்டிருக்கும் தனது நண்பியைப் பார்த்து உதட்டைக் கடித்தபடி யோசித்தாள் ஸ்வர்ணா.

ஒருகணம், ராசிதாவின் தோளைத் தொட்டுத் திருப்பி முகம் பார்த்துப் பேச வேண்டும் போலிருந்தது. மறுகணம் அந்த எண்ணத்தை வலிந்து மாற்றிக் கொண்டாள்.

தனது மார்க்கம் பற்றியும், அதன் நல்லியல்புகள் பற்றியும் வாய்க்கு வாய் பேசுகின்ற ராசிதாவா இவள்?

"தனது சகோதரனைப் பார்த்து புன்னகைப்பதும் தர்மமே ஆகும்" என்ற நபிகளாரது கூற்றை அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்கின்ற ராசிதாவா இவள்?

தனது மார்க்கம் பற்றி உயர்வாக, வாய் கிழிய இத்தனை நாள் பேசிய இவளுக்கே தனது மார்க்கத்தைப் பின்பற்றி நடக்கத் தெரியாவிட்டால் நான் என்ன செய்ய முடியும்?

எதையுமே சுட்டிக் காட்டத் தேவையற்ற, அவ்வளவு நூதனமான இந்தப் பெண்ணுக்கு நான் எதை சுட்டிக் காட்டுவது? எப்படிச் சுட்டிக் காட்டுவது?

எந்தவொரு நல்ல செய்கைக்கும், நல்லெண்ணத்திற்கும் இறைவனிடம் நற்கூலியை யாசிக்கின்ற இவளுக்கே தனது மார்க்கம் கூறியபடி நடக்க முடியவில்லையெனில், நான் அது பற்றிக் கவலைப்பட்டு என்ன ஆகப்போகிறது?

சிந்தித்தபடியே திரும்பி நடந்தாள் ஸ்வர்ணா.

மல்லிகை 41வது ஆண்டுமலர் - ஜனவரி 2006

# பனிக்கட்டி உருகிறன்...?

மெல்லிய வளையோசை காதில் கேட்டது. ஷமீர் திரும்பிப் படுத்துக்கொண்டான்.

கூந்தலை மறைத்த முக்காடும், முகத்தை மறைத்த நாணமும் ஏந்திய இரண்டு திரைகளுடன் அந்தப்பெண் தோன்றினாள்.

ஒருகணம் மட்டுமே அவனை எறிட்டுப் பார்த்தாள்... மிரட்சியும், செவ்வரியும் கலந்த கண்களில் ஒட்டு மொத்த மாகப் பயம் தெரிய, சட்டென விலகிச் சென்றாள். ஷமீர் பின்னால் ஓடிச்சென்று அவளது கைகளைப் பற்றிக் கொண்டான். அவள் சடாரென அவனது தோள்களில் விழ....

“வேணாம், வேணாம். எழும்புங்க போவோம்...”

கர்ணகடூரமான குரல். தாய் கோபாவேசத்துடன் நின்றிருந் தாள்.

'ஏன்?' பார்வையால் வினவினான்.

“இந்தப் பொண்ணு அவ்வளவு அழகாயில்லை. அதோட நிறமும் குறைவு...”

ஷமீர் ஸ்தம்பித்து அப்படியே நின்றிருந்தான். அந்தப் பெண்ணைக் காணவில்லை.

தூக்கம் கலைந்து விழிகளை அகலத் திறந்தான் ஷமீர். கண்டது கனவா? அசூயையாக இருந்தது.

இன்று மாலை நேரில் கண்ட அந்தப் பெண்ணை, மீண்டும் எப்பொழுதுமே காண முடியாதா? கனவில் மட்டும் தானா காண முடியும்? அதுவும் இன்றைய கனவில்.... நாளைய கனவில் வேறொரு பெண்ணா? இதயத்தை முழுவதும் நனைத்துச் சென்றது ஏக்கம். ஒருவகையான பரிதாப உணாச்சி உடம்பை போர்த்துக் கொண்டது.

இப்போது நிஜமாகவே வளையொலி கேட்டது. கனவல்ல

என்று உணர்ந்து காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டான். அடுத்த அறையில் இருந்து வந்தது அஸ்ரிபாவின் வளையொலி. அஸ்ரிபா தம்பியின் மனைவி.

இருவரும் காதலித்தார்கள். கைப்பிடித்து குடித்தனமும் நடத்துகிறார்கள்.

அவள் கிசுகிசுவென்று ஏதோ கேட்பதும், தம்பி பதில் சொல்வதும் கேட்டது. இந்த அர்த்த ராத்திரியில் என்ன பேசிக்கொள்கிறார்கள்?

நானும் யாராவது ஒரு பெண்ணைக் காதலித்திருக் கலாமோ என்று அவனுக்குள் திடுமென கேள்வி எழுந்தது. காதலிக்காதது என் குற்றமா? எனக்கொரு நல்ல பெண்ணைப் பார்த்து மணமுடித்து வைக்கவேண்டிய பொறுப்பை என் தாயிடம் விட்டது தப்பா? என் இளமையை இன்னும் எவ்வளவு காலத்திற்கு இப்படி சுட்டெரித்துக் கொள்வது? உம்மா ஏன் இதைப் புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறார்கள்? ஒருவேளை, வாப்பா இருந்திருந்தால் எல்லாம் சரியாக நடந்திருக்குமோ? எழுந்து மின்விளக்கை ஏற்றி நேரத்தைப் பார்த்தான். விடிகாலை நான்கு மணி.

இதுவரை எத்தனையோ பெண்களைப் பார்த்தாயிற்று. ஒவ்வொரு பெண்ணைப் பார்க்கும்போதும், இவள்தான் என் மனைவி என்று நினைத்துக் கொள்வதும், பின் உம்மா மறுதலிக்கும்போது மனம் உடைந்து போவதும், அன்று பார்த்த பெண்ணை இரவெல்லாம் எண்ணி ஏங்குவதும், அவளைக் கனவில் கண்டு தூக்கம் கெடுவதும் என்ன வாழ்க்கை?

அவனுக்கு வெறுப்பாக இருந்தது. வேலைக்குச் சென்றாலும் மனதை ஒருநிலைப்படுத்தி ஈடுபட முடியுமா என்ற கேள்வி நெஞ்சையும், உடம்பையும் அரித்தது.

தஹஜ்ஜத்(நடுநிசித் தொழுகை) தொழுது தனது மனக் குறைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக எழுந்து கொண்டான்.

---

பின்கட்டில் மணக்க மணக்க உஃவு தயாராகிக் கொண்டிருந்தது. வேலைக்குச் செல்வதற்குத் தயாராகிவிட்ட ஷமீர், காலை உணவை எதிர்பார்த்து அமர்ந்திருந்தான். மெல்ல அடியெடுத்து ஒருபெண் உணவுத் தட்டைக் கையில் கொண்டு

வருகிறாள். உடம்பில் பரிமள சுகந்தம் காந்தியாக....ஏறிட்டுப் பார்த்தான்.

அஸ்ரிபா சாப்பாட்டு மேசையை நோக்கி வந்து கொண்டிருந்தாள். சட்டென ஒரு குற்றவுணர்வு உடம்பை உராய்ந்து சென்றது. இவள் என் மதினி. தம்பியின் மனைவி.

சே...!

'யா அல்லாஹ் பாவத்திலிருந்து என்னைக் காப்பாற்று...'

“எனக்கு சாப்பாடு வேணாம்...”

எழுந்து வேகமாக வெளியே சென்றான்.

---

பஸ்ஸினுள், ஜன்னலோர இருக்கையில் அமர்ந்திருந் தான் ஷமீர். குளிர்ந்த காலை நேர இளங்காற்று இதமாகத் தழுவிச் சென்றது. லேசாக உற்சாகம் பற்றிக் கொண்டது. எனினும், தூக்கமற்ற கண்கள் எரிந்தன.

கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டான். முன் சீட்டில் ஒரு இளம் பிக்கு அமர்ந்திருந்தார். ஏறத்தாழ தனது வயதுதானிருக்கும் என ஷமீர் அனுமானித்தான். நான் முப்பத்தெட்டு வயது துறவி; காவியுடை அணியாத துறவி; விரும்பாமலே துறவறத்தை ஏற்றுக்கொண்ட துறவி. அவர்...? அவர்மீது ஏனோ ஒரு பரிதாபம் ஏற்பட்டது. என்னென்ன காரணங்களால் இவர் துறவியானாரோ? விரும்பியே ஏற்றுக்கொண்டாரோ? இல்லை, நிர்ப்பந்தம் காரணமாக இருக்கலாமோ? எனக்கும், அவருக்கும் ஏதோ ஒருவித ஒற்றுமை இருப்பதாகத் தெரிகிறதே...!

சிறிய முகம் பார்க்கும் கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டான்.

மீண்டும் நிமிர்ந்து பாாத்தபோது அந்த பிக்குவின் தலையில் இரண்டு கொம்புகள் முளைத்திருந்தன. பின்புறம் நீளமான வால் இருந்தது. சட்டென பார்வையைத் திருப்பிக் கொண்டான். கொஞ்ச நேரம் வெளியே பார்வையை ஓட விட்டு மீண்டும் திரும்பிப் பார்த்தான். அந்த பிக்கு கையிலிருந்த குறிப்பேடு ஒன்றை ஆழ்ந்து நோக்கிக் கொண்டிருந்தார். இப்போது அவருக்குக் கொம்புகளும் இல்லை. வாலும் இல்லை.

அந்தப் பிக்குவிலிருந்து கவனத்தைத் திருப்ப வேண்டும். அவரை மீண்டும் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று தோன்றிற்று.

பஸ்ஸினுள் அமர்ந்திருந்த அத்தனை பிரயாணிகளையும் ஒருமுறை திரும்பிப் பார்த்தான்.

எல்லா பயணிகளும் ஏதோ ஒரு இலக்கை நோக்கிய வர்களாக அமர்ந்திருந்தனர். முகங்களில் அன்றைய கேள்வி யின் பிரதிபலிப்பு. சிலர் முகங்களில் நீண்ட நாளைய கேள்வி.

திடீரென்று பயங்கர சிரிப்பொலி கேட்டது. அவ்வளவு பிரயாணிகளுக்கு உள்ளேயிருந்தும் ஒவ்வொரு பேய்கள் எழுந்தன. சிரித்தபடி அவனை நோக்கி அணிவகுத்து வந்தன. ஷமீர் தலையை உலுக்கிக் கொண்டான்.

மீண்டும் பஸ்ஸினுள் பார்வையை ஓடவிட்டான். இப்போது ஏதும் வித்தியாசமாகத் தெரியவில்லை. தனக்குள் ஏதோ நிகழ்வதை உணர்ந்தான். கண்ணாடிக் குமிழொன்று படீரென வெடித்துச் சிதறினாற்போல்...!

"அல்லாஹ்வே, நான் வேலைக்குப் போய்ச் சேரும்வரை என்னைக் காப்பாற்று." கலவரத்துடன் பிரார்த்திக்கத் தொடங்கினான்.

---

"இந்தா ஷமீர், இதப்பாரு. இன்னைக்கு இந்தப் பொண்ணப் போய் பாத்துட்டு வருவோம்..." உம்மா போட்டோவை நீட்டினாள்.

கையில் எடுத்துப் பார்த்தான். ஏதும் குறை தெரிய வில்லை. 'இந்தப் பெண்ணாவது உம்மாவுக்குப் பிடிக்கணும்...' பிரார்த்தித்துக் கொண்டான். தனது வேண்டு தலை தொழுது முறையிடுவதற்காக உள்ளே சென்றான்.

---

பெண்ணின் சகோதரன் கொண்டு வந்த தேநீரைச் சுவைத்தபடி, பெண்ணின் தாயாரிடம் உம்மா பெருமை பேசிக்கொண்டிருந்தாள்.

"என்ட மகனப்போல ஒரு நல்ல எளந்தாரிய நீங்க இந்த உலகத்திலேயே காணமுடியாது. அவ்ளோ ஒழுக்கம்... பக்தி... இப்ப ஆம்புளப் புள்ளைகள் என்ன மாதிரி கெட்டுப் போயிருக்காங்க. பாக்குறீங்கதானே...நா அவன அப்புடி வளக்கல்ல...."

பெண்ணின் தாய் அகலச் சிரித்து தலையாட்டியபடி கேட்டுக் கொண்டிருந்தாள்.

பெண் வந்து கதவோரம் நின்றது. உம்மா ஏற இறங்கப் பார்த்தாள். தாயின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ஷமீர்,

அவளது தலைக்கு மேலே ஒரு பேய் எட்டிப் பார்ப்பது கண்டு திடுக்கிட்டான்.

பக்கத்தில் பெண் வீட்டார் யாரும் இல்லை என்பதை நிச்சயித்துக்கொண்டு உம்மா அஸ்ரிபாவிடம் குசுகுசுத்தாள்.

“பொண்ணுட முகம் சிறுசாயிருக்கே...பரக்கத்(விருத்தி) இருக்கா துண்டு சொல்லுவாங்க. அதோட கட்டையான பொண்ணு குடும்பத்த நடத்த சரிவராது. என்ன சொல்ற ஷமீர்?”

தாயை ஏறிட்டுப் பார்த்தான். அவளது முகத்தில் சதைகள் கிழிந்து வெறும் மண்டையோடும், கோரப் பற்களும் தெரிந்தன. அவளைப் பார்க்கப் பயமாக இருந்தது. கண்களை கசக்கி விட்டுக்கொண்டு மறுபடி பார்த்தான். மீண்டும் முழு எலும்புக்கூடாக நின்றது தாயின் உருவம்.

ஷமீர் திகைப்புடன் எழுந்து நின்றான். தன்னைச் சுற்றிலும் மண்டையோடுகள் நிறைந்திருப்பதையும், ஒரு மயானத்தின் நடுவே தான் நிற்பதையும் உணர்ந்தான்.

“எனக்கு இனி கல்யாணம் நடக்காது.” அவனது உதடுகள் மெல்ல முணுமுணுத்தன.

உம்மா திகைப்புடன் அவனைப் பார்த்தாள். அவன் வேகமாக நடந்து வெளியிறங்கி, மெயின் வீதியில் நிறுத்தியிருந்த பஸ்ஸில் ஏறினான்.

மல்லிகை அநுராதபுரச் சிறப்பிதழ்--அக்டோபர் 2006

# பிச்சைக்காரன்

காற்று பலமாக வீசியடிக்கின்றது. வானம் இருண்டுகொண்டு வருகின்றது. நேற்றுவரை பளீரிட்டிருந்த வானம் திடீரென இந்தக் காலை வேளையில் இருளுவது குறித்து விசனத்துடன் ஜன்னலை மூடியபடி எழுகிறேன்.

தனிமை....பயங்கர தனிமை....இதைவிட வாழ்க்கையில் பெரிய கொடுமை வேறென்ன இருக்கிறது! மழையும், காற்றும் என்ன செய்துவிடக்கூடும்?

சமையலறைக்குள் நுழைந்து நிதானமாக அடுப்பைப் பற்ற வைக்கிறேன். சூடாக நெஸ்க.:பே குடித்தால் நல்லா யிருக்கும். கலந்து எடுத்துக்கொண்டு மீண்டும் ஹோலுக்கு வருகிறேன். சுவைத்துக் குடித்துக்கொண்டிருக்கையில் வாசலில் தபால்காரன் வந்து நிற்கிறான். கடிதத்தை வாங்கி மேசையில் போடுகிறேன். ஏதாவதொரு திறப்புவிழாவுக்குக் கூப்பிட்டிருப்பார்கள். எனக்கென்று கடிதம் எழுத வேறு யாரிருக்கின்றார்கள்?

முன்பு மருத்துவ சேவகியாக இருந்து ஓய்வு பெற்று விட்டபோதும் இந்த அறுபது வயதுக் கிழவியின் அறிவுரை களைக் கேட்பதற்கு இன்னும் ஆட்கள் இருக்கின்றார்கள். எங்கேயாவது ஒரு சுகாதார நிறுவனமோ, மருத்துவ தொண்டு நிறுவனமோ திறப்பு விழாவிற்கு அல்லது ஆண்டுவிழாவிற்கு என்னை அழைத்தபடியே இருக்கின்றன. இந்த லோகத்தில் இது ஒரு புதுமைதான். எனது பேச்சு இன்னும் உயிர்த் துடிப்புடன் இருக்கின்றது போலும். இன்றைக்கு கிழவிகளின் அறிவுரைகளை யார் கேட்கிறார்கள்?

வெற்றுக் கோப்பையை மேசைமீது வைத்துவிட்டு கடிதத்தைப் பிரிக்கிறேன். ஊர்க்கோடியிலுள்ள வயோதிபர் இல்லத்தில் முதியோர் தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு வந்திருக்கின்றது.

வாசலுக்கு வந்தபோது வானம் சிறிது வெளுத்திருப்பது கண்டு

உள்ளத்தில் களிப்பு மேலிடுகின்றது. படியை விட்டிறங்கி சிறிது நடக்கவேண்டும் போலிருக்கிறது. வெளியிறங்கும்போது பக்கத்து வீட்டுத் திண்ணையில் அமர்ந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்த பெரேரா நிமிர்ந்து பார்க்கிறார்.

"என்ன மெடம்...ஏதும் விசேஷமா?"

தபால்காரன் கொண்டுவந்த கடிதத்தைப் பற்றித்தான் கேட்கிறார் என்பதைப் புரிந்துகொண்டு "அப்படி ஒண்ணும் இல்லை..." என்கிறேன். ஒரு மருத்துவிச்சியைப் பார்த்து "மெடம்" என்று கூப்பிடும் அவரது உயர்ந்த குணத்தை எப்போதும் நான் சிலாகிப்பதுண்டு. எனது கணவரின் நல்ல நண்பர் அவர். கத்தோலிக்க சிங்களவர். இருவரும் கொழும்பில் பெற்றோலிய நிறுவனத்தில் வேலை செய்தவர்கள். பத்து வருடங்களுக்கு முன்பு எனது கணவர் இறந்துபோன நாளிலிருந்து முக்கியமான எனது வெளி வேலைகளை யெல்லாம் செய்து தருபவர்.

"மெடம்...இன்று மாலை மகளை பிரசவத்திற்கு வீட்டுக்குக் கூட்டிவரப் போகிறோம். நேரம் கிடைத்தால் நீங்கள் கொஞ்சம் வந்து பாக்கணும்.."

"ஓ...அதுக்கென்ன? அடுத்த கிழமைதானே டேட்?"

"ஆமாம். அவளை ஒரு மாசத்திற்கு முந்தியிருந்தே கூப்பிடுகிறோம். இப்போதான் வருவதற்கு ஒத்துக் கொண்டாள்."

அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு முற்றத்தில் காலைப் பதிக்கிறேன். வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் சிறிய பூந்தோட்டம். எனது கணவரின் ஓய்வூதி யத்தில் பெரும் பகுதியை இந்தப் பூந்தோட்டத்திற்கே நான் செலவிடுவது வழக்கம். அந்தளவுக்கு பூக்கள்மீது கொள்ளைப் பிரியம் எனக்கு. பேரன் பேத்திகளைக் கொஞ்ச வேண்டிய வயதில் பூக்களையாவது கொஞ்சக்கூடாதா?

செக்கச் சிவந்து மலர்ந்து கிடந்த அந்தூரியம் பூக்களை அள்ளிக்கொள்கிறேன். இந்தத் தள்ளாத வயதிலும் ஊர்ச்சேவகம் செய்யும்படி அழைப்பு வந்துகொண்டிருக்கிறது. சொந்தச் சேவகம் செய்ய ஒரு பிள்ளையையாவது தராத ஆண்டவரின் எண்ணத்தை என்னவென்பது?

ஓடியாடி ஊருக்குப் பிரசவம் பார்க்கின்ற மருத்து விச்சிக்கு ஆசைக்குக்கூட ஒரு வாரிசு இல்லாத முரண் நகையை

எண்ணிக்கொள்கிறேன். இதழோரத்தில் என்னை யறியாமலேயே ஒரு விரக்திப் புன்னகை சுழித்துச் செல்ல, படியேறி வீட்டினுள் நுழைகிறேன். “கர்த்தரே என்னை ஆசீர்வதியுங்கள்.” உதடுகள் மெல்ல முணுமுணுக்கின்றன. பூச்சாடியிலுள்ள நேற்றைய மலர்களைக் களைந்துவிட்டு இன்றைய மலர்களை வைத்து அழகு பார்க்கிறேன்.

“அம்மா..” வாசலில் குரல் கேட்கிறது. எட்டிப் பார்க்கிறேன். வெள்ளிக்கிழமைப் பிச்சைக்காரன். வாசலில் கையேந்தியபடி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வருவானே, அந்தப் பிச்சைக்காரன் நிற்கிறான். தோளில் பெரிய துணிமுட்டை.

“ஓ...இன்று வெள்ளிக்கிழமை...” மனது ஆயாசத் துடன் உணர்வு கொள்கிறது. காரணம், வெள்ளிக்கிழமை பொழுது முற்றிச் சாய்வதற்குள் பலதரப்பட்ட பிச்சைக் காரர்களின் குரல்களுக்கு செவி சாய்க்க வேண்டியிருக்கும். அக்கடாவென்று உட்கார்ந்து ஜெபம் பண்ணும்போதும், பைபிள் படிக்கின்ற போதும் அது பெரிய தொல்லையா யிருக்கும். எல்லோருக்கும் நல்ல நாளாக இருப்பது போலவே பிச்சைக்காரர்களுக்கும் இது விசேட நாள்தான். எல்லாரும் பிச்சையெடுக்கப் படையெடுப்பது இந்த நாளில்தான்.

எழுந்து சென்று அலுமாரி மேலுள்ள வாயகன்ற கோப்பையில் கைவிட்டு, சில்லறைகள் கலகலக்க ஒரு ஐந்து ரூபா நாணயத்தை எடுத்துவந்து கொடுக்கிறேன். பெற்றுக் கொண்டு நகர்கிறான். வெள்ளையும் சள்ளையுமாய் உடுத்து வந்து நிற்கின்ற இவனுக்கு அறுபது வயதுக்கு மேலிருக்கும்.

அந்த அனுதாபம் காரணமாகவே அவனுக்கு நான் ஐந்து ரூபா கொடுப்பது வழக்கம். போகும்போது துணிப்பையில் சேகரித்த அரிசியை விற்று காசாக்கி, அந்தப் பணத்திற்கு வயிறு முட்ட கள்ளச் சாராயம் குடித்து முடித்துவிட்டு, தானம் பெற்ற சில்லறையெல்லாம் கொட்டிக் கிடக்க, வழியில் மல்லாந்து விழுந்து கிடப்பான் பலவேளைகளில். அப்போது அவனிடமிருந்து யார் யாரோ தானம் பெற்றுக் கொள்வார்கள்.

மேசை மீதிருந்த வெற்றுக் கோப்பையை எடுத்துக்கொண்டு அடுக்களைக்குள் நுழைகிறேன். கோப்பி தயாரித்த குவளைகளைக் கழுவி கவிழ்த்து வைக்கும்போது அடுத்த ஞாயிற்றுக் கிழமை முதியோர் தினக் கொண்டாட்டத் தில் கலந்து கொள்வதா, இல்லையா

என்ற யோசனை எழுகின்றது. சும்மாயிருப்பதற்கு போய் வந்தால் என்ன? புதிய மனிதர்களை சந்திக்க வாய்ப்பு கிடைக்கும்தானே...

மனதுக்குள் போவது என்ற தீர்மானம் உறுதியாக, கைகளைத் துடைத்தபடி அறைக்குள் சென்று சுவரில் தொங்கிக்கொண்டிருக்கும் கலண்டரில் உரிய இடத்தில் குறித்துக்கொள்கிறேன்.

"அம்மா..." வாசலில் மீண்டும் குரல். சிறிது நேர இடைவெளிக்குள் மீண்டும் கல்லில் அடித்ததுபோல் "அம்மா..." என்று சிறிது அதிகாரத்துடன் ஒலிக்கிறது. பெண்குரல்.

இப்போது பிச்சைக்காரனுக்கும் நேரத்தின் பெறுமதி தெரிந்திருக்கிறது. எவ்வளவு அவசரமாக பிச்சை கேட்கிறான்? எண்ணியபடி ஒரு சிரிப்புடன் எட்டி நடந்து முன்னே செல்கிறேன். வாசலில் நிற்கும் இந்தப் பெண்ணுக்கும் ஏறத்தாழ அறுபது வயதிருக்கும். என் வயதுதான். பழக்கமானவள். ஆனால், அடிக்கடி வருபவள் அல்ல.

என்னைக் கண்டதுமே பழகிய தோரணையுடன் உள்ளே வருகிறாள். நான் சோபாவில் அமர்ந்துகொள்ள, அவளும் சற்றுத் தள்ளி எதிரே அமர்கிறாள்.

"என்ன மேரியம்மா..என்ன விசேஷம்?"

"ஒண்ணுமில்ல. சும்மா பாத்துட்டுப் போக வந்தேன்.."

இவள் பார்த்துவிட்டுப்போக வந்தேன் என்றால், நூறு ரூபா இல்லாமல் இங்கிருந்து நகரமாட்டாள் என்பதே அதன் அர்த்தம் ஆகும். ஒருவகை கர்ணகடூரமான முகம். கேதமுற்று வாட்டம் கொண்டிருக்காவிட்டாலும் வார்த்தைகளில் அளந்து கொட்டும் புலம்பல். பொசுபொசுப்பு.

"உங்களுக்கென்னம்மா....கொடுத்து வச்சவங்க. எங்கள மாதிரியா அலைஞ்சு திரிய ஆண்டவர் உங்கள வெச்சார் ?"

நீண்ட பெருமூச்சுடன் அவள் சொல்ல, "கர்த்தரே உமக்கு ஸ்தோத்திரம்." எனது உதடுகள் மெல்ல முணுமுணுக்கின்றன. மௌனமாக புன்முறுவல் பூக்கிறேன்.

பளிச்சென்று துடைத்து சுத்தமாகக் கூட்டப்பட்டு, ஒழுங்குடன் காட்சியளிக்கும் முன் ஹோலையும், வீட்டின் உட்புறத்தையும் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ஒரு அங்கலாய்ப் புடன் சொல்கிறாள்.

"நா அப்பாவ இழந்தேன்...தம்பிய இழந்தேன்...அவர

இழந்தேன்... கடைசியா மகனையும் சுனாமில பறிகுடுத் துட்டேன். என்ன தலையெழுத்தோ? ஏழை எப்பவுமே ஏழை யாவே இருக்கிறான். பணக்காரன் எப்பவுமே பணக்காரனாவே இருக்கிறான்....ஹூம்...''

அவளது வழக்கமான பல்லவி இன்று வித்தியாசமான தோரணையில் வெளிவருகிறது. என்னுள் சட்டென ஒரு எரிச்சல் மூளுகிறது. எழுந்து உள்ளே செல்கிறேன். இவளுக்கு நூறு ரூபா கொடுக்கத் தேவையில்லை என்று மனது கூவுகிறது. கைப்பையிலிருந்து ஐம்பது ரூபா தாளொன்றை எடுத்து வந்து அவளிடம் நீட்டுகிறேன். இது எந்த மூலைக்கு என்பதுபோல் பார்க்கிறாள்.

''வெச்சிக்கோங்க.இப்ப வேற காசு இல்ல... ஏழைக்குப் போலவே பணக்காரனுக்கும் பிரச்சினைகள் இருக்கு...''

அவள் முகத்தில் தெரிந்தது வாட்டமா அல்லது கோபமா? அனுமானிக்க முடியவில்லை. விசுக்கென பணத்தை எடுத்துக்கொண்டு சர்ரென பாம்பு ஊர்வதுபோல விரைந்து சென்று பெரேராவின் வீட்டுக்குள் புகுந்து கொள்கிறாள்.

அறைக்குள் சென்று நிலைக்கண்ணாடி முன்னால் நின்று என்னை நானே உற்றுப் பார்க்கிறேன். லேசாக நரை விழுந்த முன்கூந்தல். சுருங்கிய வட்ட முகம். சற்றே கூனிய உடம்பு. கழிவோலை வரும்வரை காத்திருக்கும் எனக்கு ஏன் சட்டென கோபம் வந்தது? அவளும் என்னைப்போலவே கிழவிதானே... ஏதோ சொல்லிவிட்டுப் போகட்டும் என்று ஏன் சும்மாயிருந்திருக்கக்கூடாது?

அய்யோ...அவளது புலம்பலைக் கேட்டுக் கேட்டு புளித்துப்போய் விட்டது. மனிதர்கள் ஏன் இப்படிப் புலம்பிப் புலம்பி தன்னையும் அழித்து, அடுத்தவரது சந்தோஷத்தையும் கெடுக்கிறார்கள்...? கொஞ்சமாவது இங்கிதம் வேண்டும். இல்லாவிட்டால் பேசாமல் இருக்கலாமே..

---

மத்தியான உணவை சமைத்துக் கொண்டிருக்கிறேன். வாசலில் மணி ஒலிக்கிறது. ஜன்னல் வழியே எட்டிப் பார்க்கிறேன். கறுத்த ஸ்கார்.்ப் பக்கவாட்டில் தெரிகிறது. அடுத்த வரவு ...டெயிசி!

கதவைத் திறக்கிறேன். ''கர்த்தரே'' என்று ஆசுவாசப் பெருமூச்சு விட்டபடி உள்ளே வருகிறாள். தான் கொண்டு வந்த வயர் பையை நீட்டுகிறாள்.

"மரக்கறி கொஞ்சம் கொண்டு வந்தேம்மா..."

இவளும் அடிக்கடி வருபவள் அல்ல. எனினும் வித்தியாசமான பிச்சைக்காரி. எவ்வளவு எதிர்பார்க்கிறாள் என்று சொல்ல முடியாது. இருபது ரூபா கொடுத்தால்கூட எடுத்துக் கொள்வாள். ஆனால், வெறுங்கையோடு வரமாட்டாள். ஏதாவது ஒரு அன்பளிப்புடன்தான் வருவாள். வயலில் அறுவடை செய்த புத்தரிசி, பச்சைமிளகாய், கெக்கரிக்காய்...

பையை வாங்கிப் பார்க்கிறேன். பயற்றங்காய்களும், முருங்கைக்காய்களும் கிடக்கின்றன. "இது என்னத்துக் கும்மா?" என்று கேட்டுவிட்டு அவளிடமே மீண்டும் தருகிறேன்.

"சும்மா எடுத்துக்கோங்க. உங்களுக்குத்தான் கொணாந்தேன்."

"சரி. தாங்க." எடுத்துச் சென்று பின்கட்டில் ஒரு பெரிய தட்டில் இட்டுப் பரப்புகிறேன்.

"இருங்க. சாப்பிட்டுப் போகலாம்.."

"இல்லம்மா...அவரு வந்து ஹொஸ்பிட்டல் பக்கத்துல நிற்கிறாரு.பார்மசிக்கு வந்த மாதிரி...அவரோட நானும் வந்தேன். உங்களப் பாத்துட்டுப் போகலாம்ன்டு.."

"சரி. இருங்க." உள்ளே சென்று ஹேண்டபேக்கில் கைவிட்டு எடுத்துப் பார்க்கிறேன். ஐம்பது ரூபா தாள்.

எடுத்து வந்து கொடுக்கையில், "எதுக்கும்மா இதெல்லாம்..? என்று மறுக்கிறாள். பரவாயில்லை... எடுத்துக் கோங்க" என்று அவளது கையில் திணிக்கிறேன். மறுக்காமல் எடுத்துக்கொண்டு விடைபெற்றுச் செல்கிறாள்.

ஓவ்வொரு கிறிஸ்மஸ் பண்டிகையின்போதும் இந்த இரண்டு கிழவிகளுக்கும் ஐந்நூறு ரூபா வீதம் அன்பளிப்பு கொடுத்துவிடுவேன். அந்த நன்றிக்கடனோ என்னவோ இவள் இப்படித் தீர்க்கிறாள். அவள்...?

அவளுக்குக் கொடுக்கவிருந்த ஐம்பது ரூபா தான் இவளுக்குக் கொடுக்கப்பட்டது என்று ஞாபகம் வருகிறது. "தேவரே...உம்மிடத்தில் பாரபட்சமில்லை..." நெஞ்சில் சிலுவைக் குறியிட்டு சொல்லிக் கொள்கிறேன்.

மனிதர்கள் எத்தனை விதமோ, பிச்சைக்காரர்களும் அத்தனை

விதம். இவர்களைப் படிப்பதும், இவர்களோடு பழகுவதும், இவர்களது பிடியிலிருந்து தப்பிவாழ்வதும்கூட ஜீவிதக் கலைதான்.

கொடுப்பவர்கள் கொடுத்துக்கொண்டேயிருப்பதாலோ என்னவோ, எடுப்பவர்களும் அதிகமாகவே இருக்கிறார்கள். அந்தக் காலத்தில் வீட்டு முன்னால் பெரிய கடாரம் வைத்து அதில் என் அப்பா அரிசியை குவித்திருப்பாராம். வருபவர்கள் எல்லோரும் அள்ளிக்கொள்வார்களாம். அந்தப் பழக்கம்தான் இன்றும் விடாமல் தொடர்கிறது.

இன்றைய உலகில் எத்தனையோ நாகரீகப் பிச்சைகளும், அடுத்திருந்து திருடிக் கொள்ளும் உறவுகளும் அதிகரித்திருப்பதுபோலவே இந்த வாசல் பிச்சைக்காரர்களும் அதிகரித்துவிட்டார்கள். ஆனாலும், இவர்கள் வாசலில் வந்து நேர்மையாகக் கையேந்திக் கேட்பதை மதிக்க வேண்டித் தானே இருக்கிறது....? சிலவேளை நாம் வைத்துக்கொண்டு இல்லை யென்று சொல்லும்போதும், துளியளவே தர்மம் கொடுக்கும் போதும் கொடுப்பதை மறுக்காமல் எடுத்துச் செல்கிறார்களே, இதைவிட நேர்மை வேறு என்ன இருக்கிறது! வெறுமனே ஒரு ஏக்கப்பார்வை மட்டுமே பார்த்துவிட்டு அவர்கள் செல்லும்போது எமது நெஞ்சே எம்மைச் சுட்டெரிக்கிறதே...

சமையலை முடித்து பின்கட்டை ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கிறேன். “அம்மா...” வாசலில் மீண்டும் குரல் கேட்கிறது. சென்று பார்க்கிறேன். நொண்டியன் நிற்கிறான்.

கால் லேசாக வளைந்திருப்பதால் இழுத்து இழுத்து நடப்பான். அதனால் நொண்டியன் என்று பெயர். இந்த வட்டாரத்தில் பலே குடிகாரன். குடிப்பதற்காகவே பிச்சை எடுப்பான். வயது நாற்பதுக்கு சிறிது மேலேதான் இருக்கும். எனவேதான் நான் அவனுக்கு இரண்டு ரூபாவுக்கு மேலே கொடுப்பதில்லை. கொடுப்பதைப் பெற்றுக்கொண்டு பேசாமல் போய்விடுவான்.

இன்று இவனுக்கு ஒரு பத்து ரூபா கொடுத்தால் என்ன என்று தோன்றுகிறது. எடுத்துக்கொண்டு வெளியே செல்கிறேன். பத்து ரூபா நோட்டைக் கையில் பெற்றுக் கொண்டு அதிசயமாகப் பார்த்து முகம் மலர்ந்து சிரிக்கிறான்.

“கொண்டு போய் நல்லாக் குடி...”

அவனது சிரிப்பில சட்டென ஒரு வெட்கம் இழைகிறது. தலையைக் குனிந்துகொண்டு அப்பால் செல்கிறான்.

அன்றைய வெள்ளிக்கிழமைக்குப் பிறகு அவன் என்றுமே என் வீட்டுப் பக்கம் தலைகாட்டவில்லை. பல மாதங்களுக்குப்பிறகு ஒருநாள், அவன் வீடு வீடாகச் சென்று, காட்போட் அட்டைகளைக் கேட்டு வாங்கிச் சேகரித்து கடைகளுக்கு விற்பதாகக் கேள்விப்பட்டேன்.

படிகள் - நவம்பர் - டிசம்பர் 2006

# கறுப்பும் வெள்ளையும்

மெல்லிய இளமாலைப் பொழுதின் தென்றல் கழுத்தோரமாக கிச்சுகிச்சு மூட்டிற்று. வாடிக்கையாளர்கள் வரும் நேரம். எல்லாவற்றிற்கும் மேலாக சந்தடியின்றி அந்தப் பொலிஸ்காரன் வரும் நேரமும்கூட. சாரதா மெல்ல எழுந்துகொண்டாள். கையில் வைத்திருந்த சிறிய கையகலக் கண்ணாடியில் முகத்தை மீண்டும் ஒரு தரம் பார்த்துக் கொள்கிறாள். அந்தக் கண்ணாடியே நிரம்பி வழிவதுபோன்று தெரிந்த வட்ட, சிவந்த முகத்தில் செவேரென்ற குங்குமப் பொட்டு பிரகாசமாக ஒளிவீசிற்று. கண்ணாடியை சற்றே வளைக்க, காதோரங்களில் சுருளாக விழுந்திருந்த கேசம் அழகு காட்டிற்று.

அவள் எத்தனை தடவையாக இந்தக் கண்ணாடியைப் பார்த்துக்கொள்கிறாள் என்று தெரியாது. எத்தனையோ தடவைகள்! அவளைப் பொறுத்தவரை அவளது பொழுதுபோக்கே இதுதான். தனது அன்றாட வேலைகளை முடித்துக்கொண்டுவிட்டால், வீட்டின் முன்புற ஹோலின் முன்வாசல் கதவோரமாக வந்து அமர்ந்து விடுவாள்.பின்னர் என்ன, கண்ணாடி அவள் கையில் 'சீஸோ' விளையாடும்.

சாரதா இந்த ஊரில் பிரபலமான ஒரு சாராய வியாபாரி. இந்த ஊரிலேயே பிறந்து வளர்ந்த இவளது அம்மா பலே குடிகாரி. குடிக்கச் செல்லும்போது சாரதாவையும் எப்போதும் தன்னோடு இட்டுச் செல்வதுண்டு. நாளடைவில் சாராய சமாசாரங்கள் அத்துபடியாகிவிட, சாரதா பிரபல "கசிப்பு" வியாபாரியாக மாறிவிட்டாள். எனினும், அவள் ஒருபோதும் சாராயக் கிளாஸொன்றை உதட்டருகே கொண்டு சென்றதுகூட இல்லை. ஆனால், அவளைப் பார்ப்பவர்கள் மதர்ப்பான அந்தத் தேகக்கட்டின் பின்னால் ஒளிந்திருக்கும் அழகின் ரகசியம் அவள் குடிக்கின்ற சாராயமோ என்று ஐயுறுவார்கள். அந்தளவுக்கு செக்கச் சிவந்து ஜெகஜோதியாக அவளது முகமும், உடம்பும் சுடர்விடும்.

அவளது தொழில் முதலிய யாவற்றையும் தெரிந்துகொண்டே

வேலுச்சாமி அவளைக் கரம் பிடித்தான். அவளைத் திருத்தி நல்ல குடும்பப் பெண்ணாக ஆக்கிவிடலாம் என்ற நப்பாசையின் காரணத்தாலோ என்னவோ, துணிந்து நல்ல குடும்பத்தைச் சேர்ந்த அவன் பெற்றோரை எதிர்த்து வந்து அவளை மணமுடித்துக்கொண்டான். ஆனால், ஐந்து வருடங்கள் முயன்றும் அவனால் எதுவும் செய்ய முடியாது போயிற்று.

திருமணத்தை அடுத்து ஒரு வருடத்துக்குள் பிறந்த ஆண்குழந்தை 'குப்பை'. அதுதான் அவனது செல்வ மகனின் பெயர். அவனுக்கு இப்போது பத்து வயது நெருங்குகிறது. ஆண்டவன் தந்த அருளால்தான் தாம் எதிர்பாராத விதமாக ஒரு ஆண்மகன் தலைச்சனாகக் கிடைத்தது என்று மனங்கொள்ளாத பூரிப்பில் லயித்திருந்த சாரதா-- வேலுச்சாமி தம்பதிகள் பிறர் கண்ணூறு செய்யாதிருக்கும் பொருட்டு அவனுக்கு அந்தப் பெயரைச் சூட்டி மகிழந்தனர். இப்போதெல்லாம் வேலுச்சாமி அவளுடன் இல்லை. அவளது பிடிவாத குணம் காரணமாக மனம் விட்டுப்போய் நான்கு வருஷங்களுக்கு முன்பு, குப்பையின் ஆறாவது வயதில் தனது குடும்பத்தை விட்டே பிரிந்துசென்று எங்கோ தொலைதூரம் போய்விட்டான்.

அவள் ஒரு துணிந்த கட்டை. வாழ்க்கையில் எதற்குமே அஞ்சியது இல்லை. சாராயம் விற்பவளாயினும்கூட அவள் இன்றுவரை அந்த சமாசாரங்கள் உற்பத்தி செய்யப்படும் இடங் களுக்கெல்லாம் போனதில்லை. அதற்கெல்லாம் உதவிக்கு ஏகப்பட்ட ஆட்கள் தயாராக இருந்தார்கள். சாராயத்தை மலிவு விலையில் காய்ச்சுவதற்கு ஒருவன், அதைக் கொண்டுவந்து தருவதற்கு ஒருவன், தற்செயலாக அவள் பிடிபட்டுவிட்டால் தானே அந்தக் குற்றத்திற்குப் பொறுப்புதாரி எனக்கூறி, வலிந்துசென்று பொலிஸில் தண்டனையை அனுபவித்துவிட்டு வந்து, பிறகு அவளிடம் கூலி பெற்றுக்கொள்ள ஒருவன் என, ஏக தடபுடலாக சாரதா வாழ்ந்து வந்தாள்.

ஒருதடவை, எதிர்பாராதவிதமாக பொலிஸ் திக்விஜயம் செய்தபோது சாரதா வீட்டில் இருக்கக்கண்டு, அவளையும், சாராய முட்டியையும் ஏற்றிக்கொண்டு போய்விட்டார்கள். அப்போது விளக்கமறியலில் இருந்த காலத்தில் அவளுக்கு அறிமுகமாகியவனே அந்த பொலிஸ்காரன். நாளாவட்டத்தில் அவன் அவளது வாடிக்கையாளனாக மாறிவிட்டான்.

சாரதாவின் தாய் வள்ளியம்மா சில வருடங்களுக்கு முன்னர் இறந்துபோனாள். சாரதா ஒரு கேவலமான சாராய வியாபாரியாக மாறிவிட்டது குறித்து அவளுக்கு ஏகப்பட்ட மனவருத்தம். அடிக்கடி சண்டை பிடிப்பாள். முற்றத்து மணலை வாரி வீசி, திட்டிக்கொட்டுவாள். அப்படித்தான் ஒருநாள் போனவள் குடிபோதையில் கீழே விழுந்து, அருகில் இருந்த பெரிய கல்லில் தலை மடேரென்று மோதி அடிபட, பொட்டென்று போய்விட்டாள்.

சாரதாவுக்கு உள்ள வருத்தமெல்லாம் ஒன்றே. அவள் அருமை பெருமையாகப் பெற்ற ஒரே மகன் குப்பை மூளை வளர்ச்சியற்ற பையனாக இருந்தான். சட்டென்று பார்த்தால் தோற்றத்தில் எதுவும் தெரியாது. சிறிது நுணுகிப் பார்த்தால் அவன் தன்னையொத்த ஏனைய சிறுவர்களைவிடவும் வித்தியாசமாக இருப்பது தெரியும். பன்னிப் பன்னிப் பேசுவான். செயல்களில் பத்து வயதுப் பையனின் முதிர்ச்சி இல்லை. நாலு வயதுக் குழந்தையின் சமர்த்துக்கூட இருக்காது. கை, கால்கள், கண்பார்வை, மூளை என்பவற்றிலும் சரியாக இயங்கும் திறன் இல்லை. வெள்ளை வெளேரென்று மெலிந்த அழகிய சிறுவன் அவன்.

சிவனேயென்று போட்டதைத் தின்றுவிட்டு தன்பாட்டுக்குக் கிடப்பவனாக அவன் இருந்திருந்தால் அவள் இவ்வளவு வருத்தமாக இருந்திருக்க மாட்டாள். கெக்கிராவ பிரதான வீதியின் அசுரப் போக்குவரத்தில் இருந்து நாளும் அவனைக் காப்பதே பெரும்பாடாக இருந்தது. பக்கத்து வீடுகளுக்குப் போய் ஏதாவது தொல்லை கொடுப்பான். அவர்கள் ஒரு நடை நடந்து வந்து முறைப்பட்டுவிட்டுப் போவார்கள். சாரதா சமாளித்து அனுப்புவாள். பக்கத்து வீட்டுக் கூனிக் கிழவி குனிந்து கூட்டுவதற்கென்று செய்துவைத்திருந்த கூட்டுமாறைத் தூக்கி மதிலுக்கு அப்பால் எறிவான். முன் வீட்டுச் சிறுமி கண்ணே பொன்னே யென்று வைத்திருக்கும் விளையாட்டுச் சாமான் களைத் தூக்கியெறிவான்.

பின்வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங் களைக் கண்டால் அவனுக்கு ஒரு நரம்புத் துடிப்பு கூடிவிடும். ஏறி உட்கார்ந்து ரிப்பேர் பார்ப்பான். யாருக்கும் தெரியாமல் மெல்ல கதவை இழுத்து, மூடித்திறந்து கையில் பலத்த அடியுடன் வந்து அதை கொஞ்சங் கொஞ்சமாகக் காட்டி எரிச்சல் மூட்டுவான். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இரத்தக் காயங்களோடு வரும்

அவனுக்கு அவள் ஏசி மருந்துபோட்டு விடுவாள். மருந்தும் மாயமும் பண்ணிப்பண்ணி சமயங்களில் தண்டணை அனுபவிப்பது போல் இருக்கும் அவளுக்கு.

இதையெல்லாம்விட பெரிய வேதனை பொலிஸ் காரனின் உருவத்தில் வந்தது. தொழில் முறையில் மிகவும் வேண்டப்பட்டவனல்லவா அவன்? கள்ளச்சாராயம் குடிப்பவர் களைவிட விற்பவர்கள் ஏறத்தாழ நூறு என்று விகிதம் காணப் பட்ட அவ்வூரில், சாரதா தவறியும் பொலிஸ் நிலையத் திற்கு போக நேராதபடி அவன் பார்த்துக்கொண்டான். மாதாந்தம் ஐம்பதாயிரம் ரூபாவரை வருமானம் தருகின்ற கள்ளச் சாராய கேஸ்களை வெகு உற்சாகமாகக் கையாளுகின்ற தனது சகாக்களை ஒரே கண் ஜாடையில் சாரதாவின் வாசலுக்குப் போகாமல் தடுத்துவிட அவனால் முடியும். ஈஸ்ட்டையும், பேரீச்சம்பழத்தையும், சீனியையும் எவ்வெவ் விகிதங்களில் கலந்தால் என்ன சுவை கிடைக்கும் என்று கூறுமளவிற்கு அவன் அவ்விடயத்தில் கைதேர்ந்தவனாக இருந்தான். சமயங்களில் இரண்டு கிளாஸ் கசிப்போடு அவனது தேவைகள் முடிந்துவிடும். சிலவேளைகளில் அதற்கும்மேல்... சிறிது மேலே....

அப்போதெல்லாம் சாரதாவிற்குப் பெரிய பிரச்னையாக இருக்கும். எல்லாவற்றிற்கும் குறுக்கே குப்பை நின்றான். அவனைச் சமாளித்துத் தூங்கவைப்பதற்குள் போதுமென்றாகி விடும் அவளுக்கு.

இவனை எங்காவது தொலைத்துக்கட்ட முடியுமானால் எவ்வளவு நிம்மதி? யோசித்துக் கொண்டிருந்தவளின் கவலையை ஒருநாள் அந்த பொலிஸ்காரனே தீர்த்து வைத்தான்.

“மாத்தளையில் ஒரு ஸ்கூல் இருக்காம். அங்க போய் தள்ளிடலாம்....”

-------------------

மூளை வளர்ச்சி குறைந்த மாணவர்களுக்காக புதிதாகக் கட்டப்பட்டிருந்த அந்தப் பாடசாலை பெரிய ஆரவாரங்கள் எவையுமின்றி இரண்டு கட்டடங்களுடன் இருந்தது. அவர்களது பிரயோக அறிவுத் திறன்களுக்காக பொருட்கள் நிறைந்திருந்த ஒரு மண்டபமும் தவிர, பிள்ளைகள் விளையாடுவதற்கான பூங்கா ஒன்றும் வெளியே காணப்பட்டது. தோட்டத்தின் மேல் மூலையில் ஒரு சிறிய குவாட்டர்ஸ் இருந்தது.

சாரதா குப்பையை அழைத்துக்கொண்டு சென்றது ஒரு

மாலை நேரம் ஆதலால், இரு மண்டபங்களும் மூடப்பட்டு பூட்டுகள் தொங்கிக்கொண்டிருந்தன. விளையாட்டுப் பூங்காவைக் கண்டதுமே உற்சாகம் மேலிட்டதால் அங்கு மிங்கும் ஓடியாடி, அதிலும் இதிலும் தொங்கிப் பாய்ந்து குப்பை விளையாடத் தொடங்கிவிட்டான். அவனை அப்படியே விட்டுவிட்டு, குவாட்டர்ஸின் திறந்திருந்த வாசல் கதவுகளின் முன்னே தயங்கி நின்றாள் சாரதா.

உள்ளேயிருந்து டீவியின் சப்தம் மெல்லிதாகக் கேட்டுக்கொண்டிருந்தது. ஆள் அரவமில்லை. இரண்டுமுறை கதவில் தட்டினாள்.

உள்ளேயிருந்து ஒரு பெண் வந்தாள். அந்த அம்மணியின் கையில் ஒரு பத்திரிகை இருந்தது. மூக்குக் கண்ணாடியைச் சரிசெய்தபடியே புருவங்களை நெரித்தபடி வாசலில் வந்துநின்று, மிக நேர்த்தியாக உடையணிந்து கௌரவமான தோற்றத்துடன் வெளியே காத்து நிற்கின்ற சாரதாவைப் பார்த்தாள்.

சாரதா எப்போதுமே இப்படித்தான். வெளியே புறப்பட்டாளானால் அவளது இனம், குலம், கோத்திரம், தொழில் பற்றிய சந்தேகங்கள் யாருக்கும் எழவே எழாது. அந்தளவுக்கு படித்த , நாகரிகமான ஒரு தொழில் செய்கின்ற பெண்ணைப் போன்று கனகச்சிதமாகக் காட்சியளிப்பாள். சற்று உருண்டு திரண்ட உருவம் ஆயினும் போதுமான உயரம் இருந்ததால் அவளது தோற்றம் யாரையும் ப்ரீதி கொள்ள வைக்கும். ஜொலிக்கும் குங்குமப் பொட்டு எப்போதும் நெற்றியில் பெரிதாகத் துலங்க, தலையில் மலர்ச்சரம் இல்லாவிட்டாலும் ஒரேயொரு ஒற்றைப்பூவாவது பின் கொண்டையில் கொலு விருக்க, பளீரென ரோஜா நிறத்தில் ஒளிர்கின்ற முகத்தில் செவ்விரத்தம் கோலம் காட்ட, அவள் அனேகமாக ஒரு தேவதை போன்றுதான் இருப்பாள்...

"என்ட, எத்துலட்ட என்ட" என்று அவளை வரவேற்றாள் அம்மணி, யாரோ வேலை தேடி வந்திருக்கக்கூடும் என்ற எண்ணத்தில். நெடிய, மெல்லிய அவளது தேகத்தையும், முகத்தின்மீது தொங்குகின்ற சுருள் முடிகளையும், தூய வெள்ளை நிறத்தில் பளீரென்று கட்டியிருக்கும் வெள்ளைச் சேலையையும் கண்ணால் அளந்து, மனதால் எடை போட்ட படியே உள்ளே வந்தமர்ந்தாள் சாரதா. அது வரை விளையாடிக் கொண்டிருந்த குப்பை ஓடிவந்து ஏக உரிமையுடன் அவளது மடியில்

உட்கார்ந்துகொண்டான்.

அவனைப் பார்த்ததும் அம்மணிக்கு எல்லாம் புரிந்தது. இருவருக்குமிடையில் மொழி ஒரு பிரச்சினையாக இல்லை. சாரதாவுக்கு சிங்களம் நன்கு தெரியும். அம்மணியும் புதிதாகக் கொஞ்சம் தமிழ் கற்றிருந்தாள்.

சாரதா குப்பையின் பிரச்சினையை எடுத்துக் கூறினாள், தனது தொழில் என்ன என்பதை மட்டும் மறைத்துவிட்டு. அவனை ஏற்க சம்மதித்த அம்மணி, தினமும் காலையில் அவனைக் கொண்டு வந்து விட்டு, பின்னேரம் கூட்டிச்செல்ல வரவேண்டுமென்று கண்டிப்பாகக் கூறினாள்.

இந்த இடத்தில்தான் உதைத்தது. ஏறத்தாழ ஐம்பது, அறுபது கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் கெக்கிராவையில் இருந்து தினமும் அவனைக் கூட்டி வந்து, கூட்டிச் செல்வதென்றால் வேறு வேலை இல்லையா சாரதாவுக்கு?

கெஞ்சிக் கூத்தாடி அவனை அங்கேயே விட்டுச்செல்ல அனுமதிக்குமாறு வேண்டினாள் அவள். ஏற்கனவே அவனுக்குத் தேவையான உடைகளையும், பொருட்களையும் ஒரு ட்ரவலிங் பேக்கில் எடுத்து வந்திருந்தாள். தான் தினமும் போக்குவரத்திற்கு செலவளிக்க முடியாதளவிற்கு ஏழை என்று பேசி அந்தப் பெண் அதிபரை நம்பவைத்துவிட்டாள்.

மிஸ் குருகுலசூரிய...அவளுக்கு இந்தப் பொறுப்புமிக்க அதிபர் பதவிதான் புதியதே தவிர, அல்லும் பகலும் மனவளர்ச்சியற்ற சின்னக்குழந்தைகளுடன் பழகி, அவர்களது நாடித்துடிப்பை அறிந்து செயல்படுவதில் நல்ல அனுபவம் பெற்றிருந்தாள். ஏற்கனவே பல சமூகசேவை நிறுவனங்களில் கடமையாற்றியிருந்தாள். அரசாங்கம் தற்போது இந்தப் பள்ளியின் நிருவாகியாக அவளை நியமித்தபோது மனப்பூர்வமாக அதை ஏற்றுக்கொண்டு, இனி தனது வாழ்நாளை இத்துறையிலே அர்ப்பணித்துவிட வேண்டும் என்ற சங்கற்பமும் கொண்டிருந்தாள்.

ஏறத்தாழ வயது ஐம்பதை நெருங்கிக் கொண்டி ருந்தாலும் திருமணம் செய்து கொள்ளாமல் சமூகப்பணி செய்து வாழ்ந்து, ஊருக்கும் உலகுக்கும் பல சேவைகள் செய்து இப்படியே காலங் கழித்துவிடவேண்டும் என்று அவள் தீர்மானித்திருந்தாள். இன்று நேற்றல்ல, பல வருடங் களாகவே தன்னுள் சுடர்விடும் இக்கனவை,

அதன் ஜோதியை இன்றுவரை யாரும் அழித்துவிடாதபடி மிகக் கவனமாகவே தனது வாழ்க்கையில் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைத்தவள்....வைப்பவள்...அவள்.

இந்தப் பாடசாலையை நடத்தி வருகின்ற இந்த ஒரு வருட காலத்தில் இத்தகைய மாணவர்களைப் பயிற்றிப் பல கலைகளையும் கற்பிப்பதற்கு ஏற்றபடி ஒரு விடுதியையும் தானே நடத்திவர வேண்டும் என்ற எண்ணம் அவளிடம் இருந்தது. ஏற்கனவே ஓரிரண்டு மாணவர்கள் அவளுடன் வந்து தங்கி நிற்பதற்கு விருப்பம் தெரிவித்திருந்தனர். இப்போது குப்பையும் சேர்ந்துகொள்ளவே, பரீட்சார்த்தமாக விடுதியைத் தொடங்கிவிடலாம் என்ற எண்ணத்தில், அவனைப் பொறுப்பேற்றுக்கொண்டாள் அவள்.

---------------

குப்பையைத் தள்ளிவிட்டு வெற்றிக் களிப்புடன் திரும்பி, பஸ் பிடித்து வீடு போய்ச்சேர இரவு எட்டு மணியாகியிருந்தது. சமையல்கட்டில் இருந்த பிஸ்கட்டை உண்டுவிட்டு, சூடாக டீ தயாரித்துக் குடித்துவிட்டு படுத்துக்கொண்டாள் சாரதா. மனது ஏனோ வெறுமையாக இருந்தது.

காலையில் நேரங்கழித்தே எழுந்தாள். எழுந்ததும் வழக்கமாக "அம்மா" என்று குரலெடுத்து அழைத்து எழுப்பி விடுகின்ற குப்பையின் குரல் கேளாதது சந்தோஷமாகவே இருந்தது. கூடவே ஒருவித வெறுமைசூழ் அமைதியாகவும் இருந்தது.

வீட்டு வேலைகளை நிதானமாகச் செய்து முடித்தாள். வீட்டைக் கூட்டிப் பெருக்கும்போதும், தட்டித் துப்புரவு செய்யும் போதும், ஆங்காங்கே சிதறிக் கிடந்த குப்பையின் பொருட்களை யும், விளையாட்டுச் சாமான்களையும் காணுந்தோறும் மனதைப் பிசைந்தது. பாத்ரூம் கதவோரத்தில் பின்புறம் ஒளித்து வைத்திருந்த சாராயக்குடம் காலியாக இருப்பதைக் கண்ட அவள், ராமலிங்கத்திடம் ஒரு கேன் எடுத்து வரச் சொல்ல வேண்டும் என்று எண்ணிக்கொண்டாள்.

மாலை வந்தது. அவள் சொல்லியனுப்பியதுபோல ராமா ஒரு பிளாஸ்டிக் கேனில் சரக்கு எடுத்து வந்திருந்தான். பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டு, மாலை கறுக்கும்போது வரும் வாடிக்கையாளர்களைக் கவனிப்பதில் மும்முரமானாள் அவள்.

இரவு முற்றிப் பழுத்து, மின்விளக்குகளின் பளீர் ஒளியால்

கனிந்துகொண்டிருந்தபோது பொலிஸ்காரன் வந்து சேர்ந்தான். அவன் வருகின்ற நாள்தான். அவனது வரவை அவளும் எதிர்பார்த்திருந்தாள். இடையிடையே பல்வேறு சிந்தனைகள் மனதில் சூழ மனதுக்குள் குழப்பமாகவே இருந்தது அவளுக்கு. குப்பையின் நினைவும் மேலோங்கி நின்றது.

தனக்குக் கள்ளச் சாராயத்தைக் கொண்டு தந்துவிட்டுப் போகும் ராமலிங்கத்திற்கும், தன்னிடம் கிளாஸ் கணக்கில் குடித்துவிட்டு பணம் தந்து செல்கின்ற வாடிக்கையாளர் களுக்கும், தனக்கும் என்ன உறவோ, அவ்வளவே தனக்கும் இந்தப் பொலிஸ்காரனுக்குமான உறவு எனுமாப்போல ஒரு நிரந்தரமற்ற தன்மை தன்னை சூழ்ந்துகொண்டிருப்பதை அவளால் இப்போது உணர முடிந்தது. ஒரு கிளாஸை மேலதிகமாகக் குடித்துவிட்டு, "நாளை பணம் தருகிறேன்" என்று யாரும் அவளை ஏமாற்றிவிட முடியாது. பணம், கடன் போன்ற விடயங்களில் பேய் அவள். வந்தவனிடம் கண்டிப்பாகப் பேசி, கறாராக பணத்தை வாங்கியபின்பே திரவம் கையில் கொடுக்கப்படும். அப்படி கொடுக்கும்போது எக்குத்தப்பாக வந்தவன் ஏதும் சில்மிஷம் செய்துவிட்டால் போதும்; தொலைத்துவிடுவாள். அவளது வலிய தடக்கைகள் எப்போதும் சுறுசுறுப்பாகச் சுழலும். ஓட ஓட விரட்டுவாள். எனவே, அந்த ஊரிலேயே "ராங்கிக்காரி" என பேரெடுத்திருந்தாள்.

இந்த பொலிஸ்காரனோ பொலிஸ் விவகாரங்களில் மட்டுமன்றி தனது சுதந்திரத்திலும் தலையிடுவது அவளுக்கு நீண்ட காலமாகவே பிடிக்கவில்லை. அவளது கொள்கைகளில் கூட அவன் அதிகம் தலையிட்டான். எப்போதும் கடன் வைத்துக்கொண்டுதான் குடிப்பான். பொலிஸ் உருட்டல் மிரட்டல் களுக்கென்று அவள் அவ்வப் போது கணக்குத் தீர்த்துப் பணத்தைக் கொடுத்துவிடுவாள். அல்லது, போனால் போகிற தென்று ஒருநாள் பிடிபட்டாலும் தண்டப்பணம் கட்டி வெளியே வந்து ஒரு குப்புசாமியையோ, மாடசாமியையோ அனுப்பி, பிடிபட்ட சாராயக் குடத்திற்கு பொறுப்பேற்க வைத்துவிடுவாள். வீடுவாசலின்றி கட்டாக்காலியாகச் சுற்றிக் கொண்டிருக்கும் அவர்கள் மாதக்கணக்கில் மாமியார் வீட்டில் இருந்து ஹாய்யாகச் சாப்பிட்டுவிட்டு. முடிந்தால் பொலிஸ்காரர்கள் முதல் வக்கீல்கள் வரையில் கூட்டாளிகளாக்கிக்கொண்டு வெகு கம்பீரமாக வந்து சேர்வார்கள். சிலவேளைகளில், நீதவான் வீட்டு வேலைகளைச்

செய்வதற்காக பொலிஸ் மூலம் அனுப்பப்படும்போது அங்கே நீதவானுக்கு உதவி ஒத்தாசை புரிந்து அவர் மனதை வென்றவர்களாகவும் திரும்புவார்கள்.

எப்படிப் பார்த்தாலும் சாரதாவுக்கு இந்தத் தொழில், இதன் ஏற்ற இறக்கங்கள் தண்ணீர் பட்டபாடுதான். இந்த பொலிஸ்காரனோ பல வேளைகளில் அதிகபட்ச தொல்லை யாக, ஒரு கடன்காரனாக, அடிக்கடி அவளை ஏமாற்று வதற்கே வழிபார்த்தவனாக, அல்லது ஒவ்வொரு முரண்பாடான யோசனைகளையும் கதைகளையும் சொல்லி அச்ச மூட்டுப வனாக, எரிச்சலூட்டுபவனாக இருந்து கொண்டி ருந்தான். இப்போது குப்பையை அனுப்ப யோசனை சொன்னவனும் அவன்தானே!

"என்ன முஞ்சி ஒரு மாதிரி செவக்குது?"

பொலிஸ்காரன் இளித்தவாறு கேட்டான். அவனுக்கு வழக்கமாகக் கொண்டுதரும் உயரமான, விஷேடமான, பூப்போட்ட கிளாஸை நிரப்பி நீட்டியவாறு சொன்னாள்.

"குப்பையை ஸ்கூல்ல வுட்டுட்டு வந்துட்டேன் நேத்து..." அவளை அறியாமல் குரலில் சோகம் தொனித்தது.

"அடிசக்கை..." கும்மாளமிட்டுச் சிரித்தான் சந்தோஷத்தில். உடனே சரக்கை காலி பண்ணாமல் கிளாஸை மேசைமீது வைத்துவிட்டு குறும்பாகப் பார்த்தான்.

"அப்ப இனி தொல்லையே இல்லை..." நெருங்கி நின்று கண் சிமிட்டினான்.

சாரதாவுக்கு திடீரென அழுகை பொங்கியது. ஒருகணம், தன்னை உயர்த்தி வாழவைப்பதற்காகவே தன்னைக் கரம் பிடித்து, பொறுமைகாட்டி வாழ்ந்துவந்த வேலுச்சாமியின் சாந்தமான முகம் மனக்கண்ணில் வந்து நின்றது. அவன் எங்கே? இந்த சுயநலமி எங்கே? அவன் எவ்வளவு நல்லவன்...!

ஏதோ ஒரு குணத்தால் பொலிஸ்காரன் சொன்னபடி குப்பையைத் தள்ளிவிட்டு வந்துவிட்டாலும், அந்த யோசனை அவளுக்கு முற்றாகப் பிடிக்கவில்லை எனுமாப்போல் ஒரு குமைச்சல் அவளுள் அடிக்கடி எழுந்துகொண்டிருந்தது. 'இவன் சொன்னபடிதானே அவனைத் தள்ளிவிட்டேன்...இப்ப என்னால் நிம்மதியா இருக்க முடியுதா...? முந்தியைவிட கொடுமையா இருக்கே அவன்

நெனப்பு...?' என்றெண்ணிக் கலங்கினாள் சாரதா.

அவளது முகபாவத்தைக் கவனித்த அவன், கிளாஸை நிதானமாகக் காலி பண்ணிவிட்டு, வாயைத் துடைத்துக் கொண்டு, கிளாஸை டமாரென்று மேசையில் வைத்தான். அந்த சத்தத்தில் திடுக்கிட்டுப் பார்த்தாள் அவள். அவளது அகன்ற விழிகளில், கடைசியாக தான் டொபி வாங்கித் தருவதாகப் பொய் சொல்லி ஏமாற்றிவிட்டு வந்தபோது தன்னை நம்பியும், நம்பாமலும் நிலைகுத்திப் பார்த்த குப்பையின் கண்கள் வந்து நின்றன.

பொலிஸ்காரன் முகம் நிறையச் சிரித்துக்கொண்டு, சாராய நெடி அவளைச் சூழும்படி இன்னும் மிக நெருங்கி அவளது தோள்களைத் தொட்டான்.

ஏனோ...தனக்கு மட்டுமே முழு உரிமையில்லாத ஒரு பொருளை... வேலுச்சாமிக்குச் சொந்தமான ஒரு பொருளைத் தொலைத்துவிட்டு நிற்பதுபோல் ஒரு குற்ற உணர்வு மேலிட்டு கொதித்துப் போயிருந்த அவள் வெறிகொண்டு 'பளாரென' அவனது முகத்தில் அறைந்தாள்.

“யோசன சொல்லிட்டு சிரிச்சிட்டு வாரியா, மவனே போடா வெளியே...நீ நெனக்கிறது இனி நடக்காது. தூ...ஒன் யோசனயும் நீயும்...தொலஞ்சி போ...”

திகைத்துத் தள்ளாடி நின்ற அவனைப் பிடித்து வெளியே தள்ளி கதவைச் சாத்தினாள். கண்ணீர் கண்களில் கோடாக வழிந்து நெஞ்சை நனைத்தது. “நாளையே குப்பைய கூட்டி வந்திரணும்” என்ற எண்ணம் கொஞ்சங் கொஞ்சமாக முளைவிட்டு அவளுள் உறுதியாயிற்று. அதற்கும் மேலாக, பத்து வருடமாக தன்னை விட்டுப் பிரியாத குப்பையை....மூணு வயசுக் குழந்தையின் புத்திசாலித்தனம்கூட ஒரு பச்சைப் பாலகனை....எங்கோ தள்ளிவிட்டேனே என்ற குற்றவுணர்வு படமெடுக்கும் நல்ல பாம்பு போன்று அவளைச் சுற்றி சீறிக் கொத்தியது. அந்தத் துன்பத்தில் மிக உழன்று, மூடிய கதவில் சாய்ந்து, “எங் கண்ணே குப்பை....” என்று ஓலமிட்டு அழத்தொடங்கினாள் சாரதா.

# சங்கிலித்தொடர்

மெல்லிய கீச்சுக்குரலை அலைபாயவிட்டபடி தாயின் முலைகளுக்குள் புகுந்து விளையாடின அந்தப் பிஞ்சுப் பூனைக்குட்டிகள். அப்பொழுதைக்கு சற்று முன்னர்தான் புத்தம் புதிய அந்த மூன்று பூனைக்குட்டிகளும் இப்பூவுலகில் வந்து விழுந்திருந்தன. இன்னும் கண்கள் சரியாகத் திறபடாத நிலையில், தாய்ப்பூனையின் ஸ்தனங்களைக் கவ்வி இழுத்து குஸ்தி போட்டுக் கொண்டும், குட்டிக்கரணம் போட்டுக் கொண்டுமிருந்தன அவை.

அந்தப் பெரிய வீட்டின் கடைசி அறையில் பழைய தட்டுமுட்டுச் சாமான்களுக்கிடையில் கிழிந்த துணிகள் நிறைந்து கிடந்த காட்போட் அட்டைப் பெட்டிக்குள்தான் அவற்றின் பிரசவம் நடந்தது. சில தினங்களாக இரவிரவாக உருண்டு திரிந்த தாய்ப்பூனை தன் பிரசவத்திற்கென தேடிக் கண்டுபிடித்திருந்த அந்த இடம் பஞ்சு மெத்தை போன்று ரொம்ப மென்மையாக இருந்தது. கால்களை அகல விரித்த படி மல்லாந்து கிடந்து, தனது குட்டிகள் ஆசைதீர பால் குடிக்குமட்டும் அமைதியாக அவற்றின் ஹிம்சைகளைப் பொறுத்துக்கொண்டு வாளாவிருந்தது அது. சற்று முன்னர் பிரசவ வேதனையில் துடித்துக்கதறினாலும் சற்று ஆசுவாசமாக இருந்தது அதற்கு.

குட்டிகள் பால் குடித்து ஓய்ந்தபின்னும், அதன் முலைக்காம்புகளில் வலி மீதிருந்தது. பசி வயிற்றைக் கிள்ளியது. மெல்ல எழுந்து, பெட்டிக்குள்ளிருந்து குதித்து வெளியே சென்றது.

சற்றைக்கெல்லாம் அந்த வீட்டுக்காரப்பெண்---அந்த அறையை ஒட்டியிருந்த வராந்தாவில் ஏதோ செய்துகொண்டிருந்த அந்தப்பெண்---அறைக்குள் இருந்து வருகின்ற கீச்சுக் குரலைக் கேட்டுவிட்டாள். சற்று நேரம் நின்று, அந்தச் சத்தம் எங்கிருந்து வருகின்றதென உன்னிப்பாக அவதானித்தாள். பின்னர், ஏதும் தீர்மானிக்க முடியாதவளாக 'எதற்கும் சென்று பார்ப்போம்' என்ற

எண்ணத்தில் அறைக்குள் மெதுவாக நுழைந்தாள். நுழைந்ததுமே அந்தக் கீச்சொலி எங்கிருந்து வருகின்ற தென்று அவளால் அறிய முடியுமாகி விட்டது. நேராக சென்று அட்டைப் பெட்டிக்குள் எட்டிப் பார்த்தாள். மூன்று குட்டிகளும் சுகமாக உறங்கிக் கொண்டிருந்தன.

அதைப் பார்த்ததுமே முகத்தைச் சுளித்தாள். அவளுக்கு ஏறத்தாழ முப்பத்தைந்து வயதிருக்கும். திருமணமாகி பல வருடங்கள் கழிந்துவிட்டபோதும் குழந்தை குட்டிகள் ஏதும் இல்லாதவள். அதே மனக்குறையுடன் வேளைக்கு மூன்று வகை மருந்துகள் சாப்பிட்டுக்கொண்டு சதா ஏங்கிக் கொண்டிருப்பவள். எப்போதும் தூசி துப்புரவாக வீட்டையும், வீட்டுச் சூழலையும் வைத்திருப்பவள்; தான் கை துடைப்பதற்கும், கால் துடைப் பதற்கும் வைத்திருந்த பழந்துணிகளையெல்லாம் பூனை பிரசவத் தீட்டினால் நாசமாக்கி விட்டது என்பதை உணர்ந்த போது அவளது முகமும், மூக்கு நுனியும் சிவந்து போயின. "சனியன், இருக்கிற வேல போதாதுண்டு இது வேற....." என்று முணுமுணுத்தபடியே வெளியே சென்றாள்.

சுகமாக உறங்கிக் கொண்டிருந்த பூனைக்குட்டிகளின் அழகு எப்போதும் மருந்தின் எரிவும், மனசின் எரிச்சலும் அடங்கிய அந்தப் பெண்ணின் வேகத்தைக் குறைக்க முடியவில்லை. நேரே தன் கணவனிடம் போய் நின்றாள்....

"இங்க பாருங்க...ஸ்டோர் ரூமுக்குள்ள பூன குட்டி போட்டிருக்கு...."

அவள் முடிக்குமுன் அவன் தொடர்ந்தான்.

"அதுதான் ராவு ராவா ஏதோ சத்தம் கேட்டுக் கொண்டே இருந்திச்சி போல. காட்போட் பெட்டிக்குள்ள தானே.....!"

"வந்து என்னமாவது செய்யுங்களேன். சுருக்கா நா வூட்டக் கூட்டி முடிக்கணும்..."

அவள் அவசரப்படுத்த அவன் எழுந்து சென்றான்.

சிறிது நேரத்தில் அந்தப் பூனைக்குட்டிகளுடன் சேர்த்து அட்டைப் பெட்டியும் வெளியே வீசப்பட்டது. குப்பைக் குழியருகில் கவிழ்ந்து கிடந்த பெட்டிக்குள்ளிருந்து துணிகள் சிதறின. ஏதுமறியாத குட்டிகள் நிலத்தில் வந்த விழுந்தன. முற்பகல் வெயிலின் உஷ்ணம் ஏற ஏற அவை மீண்டும் மீண்டும் கீச்சிடத் தொடங்கின. இரண்டு குட்டிகள் சற்று நடக்க வாரம்பிக்க, ஒன்று மட்டும் தூங்கியபடியே.

குட்டிகளுக்குப் பால் கொடுப்பதற்குத் தேவையான

உணவைத் தேடி உண்டு பசியாறிவிட்டு வந்த பூனை வீட்டுக்குள் சென்று குட்டிகளைத் தேடி, காணாமல் வெளியே வந்து பார்த்தது. குப்பைக்குழியருகில், கடும் உஷ்ண வெயிலில் தன் குட்டிகள் பரிதாபமாகக் கீச்சிடும் குரல் அதன் இதயத்தையே கிழித்தது. ஓடிச்சென்று குட்டிகளை இழுத்து ஒன்று சேர்த்து தனது வயிற்றுக்கடியில் வைத்து படுத்துக் கொண்டது. சிறிது நேரத்தில் உச்சி வெயில் ஏறி உக்கிரமாக எரிக்கத் தொடங்கிற்று.

'முன்னம் இந்த வீட்டில் குடியிருந்த அம்மாள் எங்கே?' என்று திடீரென எண்ணிக் கவலையுற்றது தாய்ப்பூனை. எங்கிருந்தோ அனாதரவாக வந்த என்னை "கிட்டி" என்று பெயரிட்டு, சோறு வைத்து 'எவ்வளவு இரக்கம் காட்டினாள்? ஒவ்வொரு முறையும் பயமில்லாமல் குட்டிபோட முடியுமே அவளிருந்தால்! குட்டிகள் வளர்ந்து, தானாகவே உணவு தேடும் காலம்வரை பொறுமையாக இருந்து, பின்னர் மெதுவாக தூரத்தில், தோட்டத்தின் மூலையில் இருக்கின்ற பழைய காருக்குள் கொண்டுபோய் மெத்தென்று வைத்து விடுவாளே... அதுமட்டுமல்ல, மாலைப் பொழுதுகளில் தனது குழந்தை களோடு அங்கு வந்த நின்று குட்டிகள் விளையாடும் அழகை ரசித்துக் கொண்டிருப்பாளே... அவ்வளவா? கொஞ்சம் கூடப் பொறுப்பேயில்லாமல் வாழை மரத்தின் உச்சியில் ஏறிப் பிராண்டிக் கொண்டுருக்கும் ஆண் பூனையைக் காட்டி, "சப்ரான்....அங்க பாரு, அதுதான் இந்தக் குட்டிகள்ட வாப்பா பூன" என்று முத்திரையும் குத்தி இனங்காட்டுவாளே....மகராசி எங்கே போனாள்?

யோசனையுடன் தனது குட்டிகளைத் தன்முகத்தால் நீவி விடத் தொடங்கியது. தன்னைப்போல முதுகில் வெள்ளையும், வயிற்றில் கபில நிறமும் கொண்ட ஒரு குட்டி... தந்தையைப்போல முழு சாம்பல் நிறத்தில் மற்றது... இரண்டும் கலந்த நிறங்களில் கடைசிக்குட்டி....இந்தக் குட்டி களைப் பார்த்தாலும்கூட அவள் சந்தோஷத்தில் என்னென்னவோ கதை சொல்லுவாள் என்று சிந்திக்கையிலேயே கண்ணீர் உகுக்கத் தொடங்கிற்று.

மேலும் அழுதுகொண்டிருக்க முடியாது என்கின்றவாறு கடைசிக்குட்டி பரிதாபமாக மூசத் தொடங்கிற்று. உச்சி வெயில் வேறு வாட்டத் தொடங்கியது. கிட்டி எழுந்து சுற்று முற்றும் பார்த்தது. அந்தக் குப்பைக்குழி மூன்று வீடுகளுக்குப் பொது வானது.

அந்தத் தோட்டத்தில் குப்பைக்குழியின் கிழக்குப் பக்கமாக

இருந்த சிறிய வீட்டைத் தேர்ந்தெடுத்தது கிட்டி. முதல் குட்டியைக் கவ்வியபடி மெதுவே நடந்து சென்று வீட்டுக்குள் நுழைந்தது. முன்ஹோலில் யாருமில்லை. அதையொட்டிய அடுத்த ஹோலுக்கு வந்து அங்கிருந்து மேலே பரணுக்குத் தாவியது. அது கொங்க்ரீட் பரண். என்றாலும் ஆபத்துக்குப் பாவமில்லை. குட்டியைப் போட்டு விட்டு, இரண்டாவது குட்டியை கவ்விக்கொண்டு பரணில் ஏறுகையில், ஏதோ காரியமாக அந்த ஹோலுக்கு வந்த வீட்டுக்காரி தற்செயலாக மேல் பரணைப் பார்த்துப் பயந்துவிட்டாள். பேசாமல் ஒதுங்கி நின்று அது எங்கே செல்கின்றது என்று கவனித்தாள். அது பரண்மேலே மறைந்து கொண்டதும், இடத்தை அறிந்துகொண்ட திருப்தியுடன் அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள்.

காரணம், அவள் நிறைமாத கர்ப்பிணி. ஓடியாடி எதுவும் செய்ய முடியாத நிலை. எதைக் கண்டாலும் வெறுப்பும் சலிப்பும் 'இந்தச் சுமையை எப்போது கீழிறக்கு வோம்...' என்ற சிந்தனை யும், பயமுமாக அவளது காலம் கழிந்து கொண்டிருந்தது. இது இரண்டாவது பிரசவம். மூத்த குழந்தையின் ரோதனை வேறு அவளை வாட்டியது. இனி குழந்தைகளே பெற்றுக்கொள்ளக் கூடாது என்ற வைராக்கியம் ஒரு கயிறு போன்று இறுக அவளை சுற்றிக் கொண்டிருந்தது. கணவனும் அப்போது அருகில் இல்லாத படியால் அவளால் எதுவும் செய்யமுடியவில்லை.

கடைசிக் குட்டியை சென்று பார்த்தபோது அது பேச்சு மூச்சற்றுக் கிடந்தது. ஆம். அது இறந்து போயிருந்தது. தான் பட்ட கஷ்டங்கள் யாவும் வீணாகி விட்டாற் போன்ற ஓர் உணர்ச்சியால் மௌனமாக அழுதுகொண்டே குப்பைக் குழியருகே சிறியதொரு குழியைத் தோண்டி அதனைப் புதைத்தது கிட்டி. “என்ன செய்வது? நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். மீந்திருக்கும் இரு குட்டிகளை யாவது காப்பாற்ற வேண்டும்” தனக்குள் சொல்லிக்கொண்டு, அந்த நினைப்பில் ஓடோடிச் சென்று குட்டிகளுக்குப் பால் கொடுக்கத் தொடங்கிற்று.

இரவு குழந்தையைத் தூங்கவைத்துவிட்டு கணவன் அருகே வந்து பெரும் சிரமத்துடன் சரிந்து, ஒருக்களித்துப் படுத்துக்கொண்டபோது, பூனைக்குட்டிகளின் சப்தம் பரண் மேலிருந்து கேட்க, “இங்க பாருங்கப்பா...லாபிரா தாத்தா வூட்டுல குட்டி போட்ட

பூன இங்க வந்துருச்சி…" என்று கணவனிடம் சொன்னாள்.

கணவன் உடனே எழுந்து சென்று, படிகளில் ஏறி எட்டிப் பார்த்தான். தாய் குட்டிகளை மறைத்து பாலூட்டிக் கொண்டிருந்தது. நீண்ட கம்பொன்றை எடுத்து லேசாக பூனையின் வயிற்றில் குத்தினான். அது எழுந்து நிற்க, குட்டிகள் இரண்டும் கூச்சலிட்டன. இப்போது ஒன்றும் இந்த இரவு வேளையில் குழப்ப வேண்டாம் என்று எண்ணிக்கொண்டு இறங்கினான்.

அவள் கேட்டாள், "எத்தனை குட்டி?"

"ரெண்டு…"

"மூணு குட்டின்னு சொன்னாளே லாபிராத்தா. ஒரு குட்டிய தின்னுருச்சோ என்னவோ?"

"ஏன்…?" அவன் புரியாமல் கேட்டான்.

"குட்டி போட்ட பூன எப்பவும் ஒரு குட்டிய தின்னுரு மாம். அதுதான் அது புள்ள பெத்த வருத்தத்துக்கு மருந்தாம். ஆச்சி சொல்லுவாங்க…"

அருவருப்புடன் சொல்லி முடித்தாள். சிறிது நேரம் சென்று அந்த அருவருப்பு நீங்க, மறுபடி கேட்டாள். "இப்ப இதுகள என்ன செய்றது?"

"காலைல பாப்போம்."

--------

தாய்ப்பூனையும். இரண்டு குட்டிகளும் மீண்டும் குப்பைக் குழியருகே வீசப்பட்டன. குப்பைக் குழியின் எதிர்ப்புறத்தில் வெறுமனே திறந்து கிடந்த வீட்டை இப்போது கிட்டி தேர்ந் தெடுத்தது. அவ்வீட்டில் குப்பைக் குழியின் பக்கமாகத் திறந்திருந்த ஜன்னலுக்கூடாக, கிட்டி வாயில் குட்டியைக் கவ்விய படி உள்ளே குதித்தது. நல்லவேளையாக அறைக்குள் யாரும் இல்லை. அந்த வீட்டுக்காரி சேகரித்து வைத்திருந்த காகிதங்கள் நிறைந்த கூடைக்குள் ஒவ்வொன்றாக இரண்டு குட்டிகளையும் கொண்டுவந்து போட்டுவிட்டு ஆசுவாசப் பெருமூச்சு விட்டது கிட்டி. இந்த இடமும் பறிபோய்விடக்கூடாதே என்று அதன் நெஞ்சம் பதைத்துக் கொண்டிருந்தது.

கரகரவென்ற காகிதத் துண்டுகள் உராயும் சப்தம் கேட்டு வீட்டுக்காரி வந்து எட்டிப் பார்த்தாள். காகிதக் கூடை யின் வெளிப்புறமாக நடமாடித் தொடங்கியிருந்த குட்டிகள் சட்டென

உள்ளே சென்று பதுங்கிக் கொண்டன. கொஞ்ச நேரம் அமைதியாக நின்று, தான் அவ்விடத்தை விட்டு போய்விட்டது பொன்று பாவனை காட்டினாள் அவள். என்ன ஆச்சரியம்! தாய்ப்பூனை அப்போதுதான் வெளியே போயிருந்தது. எச்சரிக்க யாரும் இல்லாத காரணத்தால் குட்டிகள் மேலே வந்தன. "ஏய்...ஓடிவாங்களேன்...." கூவிக்கொண்டே சென்றவள் கணவனது கையைப் பிடித்து இழுத்து வந்தாள்.

"ஏய்....இங்க பாருங்க....லாபிரா தாத்தா வூட்டுல குட்டி போட்ட பூன இங்க வந்துருச்சிபோல. ரெண்டு குட்டி...." கணவன் சொன்னான்.

"அப்படியே கொண்டு வெளிய கொட்டினா சரி..."

அவனது குரலைக் கேட்டுக்கொண்டு வீட்டின் வெளிப் புறமாக படுத்திருந்த கிட்டி விசனமுற்றது. 'ஐயோ. திரும்பவும் அக்கிரமம் நடக்கப் போகிறது...' உள்ளம் கலங்கிற்று.

மனைவியோ சற்றும் எதிர்பாராதவிதமாகக் கூறினாள். "வேணாம். வேணாம். பாவம் குட்டி போட்ட பூன...கொஞ்ச நாளக்கி இருந்துட்டுப் போகட்டும்...."

சிறிது நேர இடைவெளிக்குப் பிறகு மீண்டும் சொன்னாள். "பூன குட்டி போட்டா ஏழு இடம் மாத்தும்ன்டு சொல்லுவாங்களே...அதுதான் இங்க கொண்டு வந்துருச்சி போல...."

அவள் பெட்டியை இலேசாகக் கவிழ்க்க குட்டிகள் இரண்டும் பக்கவாட்டில் வந்து விழுந்தன. அவை சரிந்து விழுந்தபோது அவளது இதயம் வலித்தது. அக்குட்டிகளின் பிஞ்சுக்கால்களும், குழந்தை முகமும் தொட்டிலில் உறங்கிக் கொண்டிருக்கும் தனது நாலரை வயதுக் குழந்தையை ஞாபகமூட்ட சிலிர்த்துப் போனாள்.

தனது குழந்தை குழறிக் குழறிப் பேசியதும், பின் "உம்மா" என்று தெளிவாக அழைத்ததும் அகச்செவியில் கேட்டது. ரஸ்மியா தள்ளாடித் தள்ளாடி எழுந்து நின்றதும், பின் தத்தித் தத்தி நடை பயின்றதும் அவளது நினைவுகளில் சொட்டின. இரண்டு கன்னங்களிலும் குழிவிழ, குறும்புப் புன்னகை பூத்த மழலைப் பருவம் மனக் கண்ணில் தெரிந்தது. இன்று அந்தக் கட்டங்களையெல்லாம் கடந்து தன் குழந்தை நன்றாக ஓடி விளையாடி, தெளிவாக அமுதமொழி பேசத் தொடங்கிவிடவே, இப்போது அவள் பக்கத்து வீட்டுக் குழந்தைகளை அள்ளியணைத்து, கொஞ்சி மகிழ்ந்து தனது ஆசைகளைத் தீர்த்துக் கொண்டிருந்தாள்.

மெதுவாக தனது கணவனின் முதகுப்புறம் நெருங்கி அவனது தோள்களைச் சுரண்டி "யப்பா" என்றாள்.

அவன் நிமிர்ந்து பார்த்தான்.

"இந்தக் குட்டிகளப் பாத்தால் சின்னத்துல எங்கட ரஸ்மியா குட்டி பொறந்தது ஞாபகம் வருதுப்பா...." என்றாள்.

"ம்..." அவனும் தலையை ஆட்டி ஆமோதித்துக் கொண்டாலும், அவள் பூடகமாக எதையோ சொல்ல வருகிறாள் என்பதை மையலில் மினுமினுக்கும் அவளது விழிமொழியில் புரிந்து கொண்டான். அதற்குள் அவளது மூன்று பிள்ளைகளும் முன்வாசலில் பேசிக்கொண்டே சப்பாத்துகளைக் கழற்றும் அரவம் கேட்கவே, அவர்கள் பாடசாலையிலிருந்து வந்து விட்டார்கள் என்பதையும், தன்நிலையையும் சட்டென உணர்ந்து கொண்டவளாக சுதாகரித்து விலகி நின்று கொண்டாள். பின்னர், கீழே விழுந்த குட்டிகளைத் தூக்கி மீண்டும் பெட்டிக்குள் போட்டுவிட்டு கேட்டாள்.

"அதில்ல....இந்தப் பூன மூணு மாசத்துக்கு முந்தி தானே குட்டி போட்டது...? அதுக்கிடையில இன்னொருக்காவா...?"

அவள் கதையை மாற்றிவிட்டாள் என்பதை அவன் லேசாகப் புரிந்து கொண்டான். வெளியே, திண்ணையோரமாக வீட்டின் பக்கவாட்டில் படுத்திருந்த கிட்டியோ முற்றாகவே உணர்ந்து கொண்டது.

'அடி பெண்ணே, நாலு புள்ள பெத்த ஒனக்கே இன்னும் ஆச அடங்கல்லியே...எனக்கு மட்டும் கதை சொல்றியே.. என்று நினைத்துக்கொண்டது அது.

மல்லிகை43வது ஆண்டு மலர் - ஜனவரி 2008

# பெண்மை = உண்மை

அந்த மையத்து வீடு (மரண வீடு) நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. ஆம். தனது மாணவர்களுக்கெல்லாம் இஸ்லாத்தை யும், அதன் கொள்கைகளையும் தெளிவாகக் கற்பித்த, இஸ்லாமிய நாகரிகம் பாட விரிவுரையாளர் சுப்யான் தனது நாற்பத்தைந்தா வது வயதில் மாரடைப்பினால் திடீரென காலமாகி விட்டார்.

மிகச் சிறிய வீடு. முன்னும் பின்னும் ஆண்களே அதிகம் கூடியிருந்தார்கள். சுப்யான் ஆசிரியரிடம் கற்றவர்கள்... கற்றுக் கொண்டிருப்பவர்கள்... சகாக்கள்... கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள்... அதிகாரிகள்...எங்கும் ஒரே ஜனத்திரள் அலைமோதிக்கொண்டு இருந்தது. அந்த அலையில் குறிப்பிடத்தக்க அளவில் நின்றுகொண்டிருந்த பெண்கள் கூட்டமோ நெருக்கித் தள்ளி ஒதுக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

லேசாக நெஞ்சு வலிக்கிறதென்று நேற்றுக் காலை அனுராதபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சுப்யான், மாலையில் தனது மனைவியுடன் நல்லபடியாகப் பேசி யிருக்கிறார். இன்று அதிகாலை மனைவி ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது கணவரின் ஜனாஸாவைத்தான் (பூதவுடல்) பார்க்க முடிந்தது. அவர் தனது மார்க்கத்தை எவ்வாறு படிப்பித்தாரோ அவ்வாறே வாழ முயற்சித்தவர். ஏறக்குறைய வாழ்ந்தும் காட்டியவர். அவரது வேண்டுகோளின்படி உடனே மையத்து அடக்கம் செய்யப்பட ஏற்பாடாகியிருந்தது.

மாலை மூன்று மணியை நெருங்கிக் கொண்டிருந்தது நேரம். இன்னும் சிறிது நேரத்தில் அஸர் (மாலை நேரத்) தொழுகைக்கான அதான (அழைப்பு) ஒலிக்கும். அதற்குள் மையித்தைக் குளிப்பாட்டி கபனிடும் (இறுதியாக அணிவிக்கப் படும் தையலற்ற வெள்ளைத் துணி) வேலைகளைச் செய்தாக வேண்டும்.

அந்தச் சிறிய வீட்டின் முன்ஹோல் ஏறத்தாழ நூறு சதுர அடிகள் அளவே விஸ்தீரணம் கொண்டது. அதன் மத்தியில் போடப்பட்டிருந்த சிறிய பலகைக் கட்டிலின்மீது அவரது ஜனாஸா வெள்ளைத் துணியால் சுற்றப்பட்டுக் கிடந்தது.

"பொம்புளைகளுக்கு மையித்தைக் காட்ட மாட்டாங்களாம்".

பக்கத்தில் ஒருத்தி சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்ட லத்தீபாவுக்கு தலை வலித்தது. எவ்வளவு தூரத்தி லிருந்து வந்திருக்கிறோம்...? கடைசியாக ஒருமுறை sir இன் முகத்தைப் பார்த்துவிட்டுப் போவதற்குத்தானே... இப்போது இப்படிச் சொன்னால்...

அருகிலிருந்த நுஸ்ரத்தின் முகத்தைப் பார்த்தாள் அவள். "பேசாம உள்ளுக்குப் போவோம்... நீ வாவேன்..." என்றாள் அவள்.

எவ்வளவு இங்கிதமான ஆசிரியர்...என்ன அருமை யாகப் படிப்பிப்பார்....! சொல்லப்போனால் இன்று அனுராதபுர மாவட்டத்தில் உலவுகின்ற எல்லாப் பட்டதாரிகளுமே அவரிடம் கற்றவர்கள் அல்லவா? அந்த அன்பு, மரியாதை, அபிமானம் காரணமாகத்தானே மாத்தளையில் இருந்து மையித்துச் செய்தியைக் கேட்டவுடன் ஓடோடி வந்திருக்கிறோம்...

லத்தீபாவின் சிந்தனைகள் ஒரே திக்கில் சென்று கொண்டிருந்தன. கால்கள் தோய்ந்து இற்று விடுமோ என வலித்தன. பெண்கள் கூட்டம் நெஞ்சோடு நெஞ்சு முட்டி மூச்சு விடுவதற்குக்கூட அல்லற்பட்டுக் கொண்டிருந்தது.

அந்தச் சிறிய வீட்டைச் சுற்றியிருந்த வேலி எற்கனவே கூட்டத்தால் மிதிக்கப்பட்டு சிதிலமாகியிருந்தது. அந்த வேலிக் கட்டைகளின்மீது வயோதிபப் பெண்கள் சிலர் தாளாமல் உட்கார்ந்து கொண்டனர். பெண்கள் கூட்டத்தில் ஒரு அலை வீட்டின் பின்புறமாக உள்நுழைய முண்டியடித்துக் கொண்டு சென்றுகொண்டிருந்தது.

"வா. நாங்களும் அவங்களோட போவோம்..." நுஸ்ரத் லத்தீபாவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு முன்னேறினாள். ஒருவாறாக வீட்டைச் சுற்றி பின்வாசலை அடைந்தார்கள்.

ஏதோ சஞ்சீவனம் கேட்பதற்காக தெய்வத்தின் சந்நிதியில் காத்துக் கிடப்பவர்கள் போன்று அந்தப் பெண்கள் எல்லோரும் வாடி வரண்டு கிடந்தார்கள். தாகத்தால் நாக்கு வரண்டு உலர்ந்து மேலே ஒட்டிக் கொண்டது. ஒவ்வொரு முகத்திலும் சோகம், கவலை. எதிர்பாராத மரணத்தின் அதிர்ச்சி, துயரம்...

நிலத்தில் கால்கள் பாவாமல் மிதப்பதே போன்று லத்தீபாவும், நுஸ்ரத்தும் பின்கட்டு தாழ்வாரத்தைத் தாண்டி நடுக்கூடத்தை அடைந்தார்கள்.

முன்ஹோலில் யாரோ ஒரு ஆணின் குரல் உரத்துக் கேட்டது.

“நீங்க எல்லாரும் இப்புடி நெருக்கியடிச்சுக்கிட்டு ஆம்புள மையத்தைப் பாக்கணும்டு வந்து நிக்கிறீங்களே, இது சரியா? யோசிச்சிப் பாருங்க..” நிதானமாக, ஆனால் உறுதியாக அக்குரல் ஒலித்தது.

மீண்டும் நுஸ்ரத்தின் முகத்தைப் பார்த்தாள். ஏதோ தவறு செய்கிறோம் என்ற தாழ்வுணர்வு அந்தப் பார்வையில் தொனித்தது.

“இன்னும் கொஞ்ச தூரம்தான். கிட்டப்போய் எப்பிடியாவது பாத்துருவோம். வா பேசாம...” நுஸ்ரத் பிடித்திருந்த கைகளை இறுகப் பற்றினாள்.

பத்தடி தூரம் செல்வது பத்து கிலோ மீட்டரைக் கடப்பது போன்று கஷ்டமாக இருந்தது. அந்த சந்தடிக்குள் எதிரேயிருந்த அறையில் சோகமே உருவாக அமர்ந்திருந்த sir இன் மனைவியையும், மகளையும் கண்டாள் லத்தீபா. sir இன் மகளை முன்பு கண்ட ஞாபகம். அதைவைத்து sir இன் மனைவி இவர்தானோ என்று அவளால் ஊகிக்க முடிந்தது.

Sir எப்பவுமே தனது மனைவியை 'ராசாத்தி' என்றே குறிப்பிடுவார். தனது மனைவிக்கு அவர் அவ்வளவு உயர்ந்த இடம் வழங்கியமை கண்டு மாணவிகள் வியப்படைவார்கள். அந்த 'ராசாத்தி' சுந்தரரூபியாக இருப்பாள் என்று கற்பனையும் செய்வார்கள். ஆனால், லத்தீபாவின் கண் முன்னே தெரிந்தது மிகமிக சுமாரான ஒரு பெண்ணின் முகம்.

வந்திருந்த சில பெண்கள் 'ராசாத்தி'க்கு ஸலாம் கொடுத்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

Sir இருமி இருமி அந்த இருமலூடே கற்பிக்கும் கோலம் திடீரென லத்தீபாவின் கண்முன்னால் வந்தது. ஏறத்தாழ பதினைந்து வருஷங்களுக்கு முன்பே Sir இற்கு தொடர்ச்சி யான ஆஸ்த்துமா இருந்து வந்திருக்கிறது.

இதோ நெருங்கிவிட்டார்கள். வெள்ளைத் துணியால் மூடிய மையித்தின் காலண்டையில் வந்துவிட்டார்கள்.

அவர்களுக்கு முன்பாக சென்று மையித்தைச் சுற்றி நின்றுகொண்டிருந்த பெண்கள், நெருக்கித் தள்ளிக்கொண்டு மையித்தின் முகத்திரை களைவதற்காகக் காத்து நின்று கொண்டு இருந்தார்கள். நுஸ்ரத்தின் முதுகோடு ஒட்டியபடி நின்று அவளது

கழுத்துக்கு மேலே எம்பிப் பார்த்தாள் லத்தீபா.

"எவ்வளவோ சொல்லிட்டேன். நீங்க யாரும் கேக்குற மாதிரியில்ல..சரிசரி... சுருக்கா பாத்துட்டு இடத்தைக் காலி பண்ணுங்க. இதனால ஒங்களுக்கும் பாவம்....மய்யித்துக்கும் பாவம்....."

மீண்டும் அந்த மனிதர் நிதானமாகவும், உறுதியாகவும் கூறினார்.

திடீரென லத்தீபாவுக்கு பொறி கலங்கினாற் போலிருந்தது.

"அந்தா பாரு....sir முகத்தைக் காட்டுறாங்க... சுருக்காப்பாரு..." நுஸ்ரத் லத்தீபாவை நிமிண்டினாள்.

தனக்குப் பக்கவாட்டில் வெள்ளைத் துணியால் போர்த்திருந்த sir இன் கால்களை, பாதங்களை நன்றியுடன் நோக்கின லத்தீபாவின் விழிகள்.

அவளுள் மீண்டும் ஒரு சுழல் தோன்றி புரண்டெழுந்தது. 'வேணாம்.. sir இன் முகத்தைப் பாக்க வேணாம்...ஆண் மையித்தை நெருக்கமான சொந்தமில்லாத பெண்கள் பாக்குறது பாவம்....எனக்கு எப்பவும் நல்லதையே சொல்லித் தந்த sir இற்கு, உத்தமனா வாழ்ந்து காட்டிய sir இற்கு, ஒரு பட்டதாரியா, டிப்ளோமாதாரியா, நா உயரக் காரணமா இருந்த sir இற்கு, நானும் ஏதாவது நன்மை செய்யணுமே...! பாக்காமலே திரும்பிப் போயிடறதுதான் நல்லது...!'

அவளது உள்மனக் குரல் உரத்து ஒலித்தது. உடனேமறுபுறமாகத் திரும்பலானாள் லத்தீபா.

---------

அந்தக் கல்வி வளநிலையக் கட்டடம் மனித அலைகளால் மோதுண்டு கொண்டிருந்தது. மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களுமாக அந்த விழா மண்ட பத்திலே கூடியிருந்தார்கள். இன்னும் பலர் வந்துகொண்டு இருந்தார்கள்.

மண்டபத்தின் பின்புற உள் அறையில் கல்வி அதிகாரி வீற்றிருந்தார். அவர் தன் முன்னாலிருந்த காகிதக் கட்டுகளை மீண்டும் ஒருமுறை ஆழ்ந்து நோக்கிக் கொண்டிருந்தார்.

இன்று...நல்ல ஆசிரியர்களுக்கு விருது வழங்கும் வைபவம். தனது பிரதேசத்தில் சிறந்த தொண்டாற்றிய ஆசிரியர் களுக்குப் புள்ளி வழங்கி, அவர்களைக் கௌரவிக்கும் இந்த விழாவை தனது வருடாந்த செயற்றிட்டமாக அறிவித்திருந்தார் அவர். அதன்படி சகல

ஏற்பாடுகளும் பூர்த்தி யாக்கப்பட்டு இன்று விருது வழங்கப்பட இருக்கிறது. அதைக் காண்பதற்கு சகல ஆசிரியர் களும், உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்களும் கட்டாயம் வந்து கலந்துகொள்ள வேண்டும் என்று தனக்குக் கீழுள்ள ஒவ்வொரு பாடசாலைக்கும் கண்டிப்பாக உத்தரவு பிறப்பித் திருந்தார் அவர்.

தகுதியான ஒருவர் விடுபட்டிருந்தாலும் பரவா யில்லை, தகுதியற்ற ஒருவர் விருது பெற்று விடக்கூடாது என்பதில் அவருக்கு அதீத சிரத்தை. வந்து சேர்ந்த விண்ணப் பங்களைக் கவனமாகப் பரசீலித்து தனது உதவியாளர்கள் தயாரித்துத் தந்த மனுவை மீள் பரிசீலனை செய்து, பல திருத்தங்கள், வெட்டுக்கொத்துகள் இட்டு, சிறந்த பத்து ஆசிரியர்களை தனது பிரதேசத்திலிருந்து தெரிந்தெடுத் திருந்தார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கல்வித் திணைக்களத்தினூடாக தனது சுற்றறிக்கையை அவர் விடுத்திருந்தார். அதன்படி இந்தப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புகின்ற ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டப்பட்டிருந்தார்கள்.

அந்த சுற்றறிக்கையை ஏற்று ஏராளமான விண்ணப் பங்கள் வந்து குவிந்தன. அவற்றையெல்லாம் பார்த்து முடிப்ப தற்குள் போதும் என்றாகிவிட்டது அவருக்கு. இதற்கெல்லாம் விண்ணப்பங்களில் காணப்பட்ட குளறு படிகள்தான் காரணம் என்று சொல்வதற்கில்லை. அவற்றை உள்வாங்கி, ஆராய்ந்து, விருதுக்குரியவர்களைத் தெரிவு செய்வதில் அவர் மறை முகமான பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

அவர் வேறெந்த கல்வித் தகுதிகளும் இல்லா விட்டாலும் கூட, ஒரு கல்வியதிகாரியாகத் தன்னை நியமித்து, பணிப்பாளர் என்ற பட்டத்தை அலங்கரிக்க வைத்த அரசாங்கத் தின் அதிக பட்ச விசுவாசி. பலப்பல கல்வி கற்ற, நிர்வாகத் துறையில் பட்டை தீட்டப்பட்ட, அனுபவமும் ஆழ்ந்த அறிவும் சான்ற கல்விமான்கள் நிரம்பிய கூட்டங்களின் வாசல் படிகளைக்கூட ஒருபோதும் அவர் மறந்தும் மிதித்ததில்லை. அப்படியிருந்த போதும் அவருக்கு இந்தக் கல்வியதிகாரி பதவி வாய்த்திருக்கிறதென்றால் அவரது விசுவாசத்தைப் பற்றி கேட்கவா வேண்டும்? அல்லது மறுபுறம் பார்த்தால்... அவர் எவ்வளவு பெரிய விசுவாசியாக இருந்திருந்தால்

இந்தப் பதவி வாய்த்திருக்கும்...

நேரம் காலை ஒன்பதரையைத் தாண்டிவிட்டிருந்தது. காலை எட்டுமணி என்றால் ஒன்பது மணி என்பதுதான் நடைமுறைச் சித்தாந்தம். அதிலும் இவர் ஒருபடி மேலே போய் முப்பது நிமிடங்கள் அதிகமாக எடுத்துக்கொண்ட பின்னர் உள்வாயிலுக்கூடாக மேடையில் நுழைந்தார்.

மண்டபம் நிரம்பியிருந்தது. ஒவ்வொரு சோடிக் கண் களும் அவரது வருகையையே ஆவலாக எதிர் பார்த்திருந்தாற் போன்று....

மேடையில் ஆளுங்கட்சி அதிகாரிகள் அமர்ந்திருந் தார்கள். மண்டபத்தின் முன்வரிசைகளில் மாணவர்கள் வெள்ளைச் சீருடையில் கலகலத்துக் கொண்டிருந்தார்கள்.

அனைவர் மத்தியிலும் திடீரென ஒரு நிசப்தம். இவர் தனது குள்ளமான தடித்த உருவத்திற்குள்ளே வேண்டு மென்றே ஏற்படுத்திக் கொண்ட கம்பீரத்தை வரவழைத்துக் கொள்ள....

"சிறந்த ஆசிரிய மணிகளுக்கல்லாம் முடிசூடி கௌரவிக்கும் திட்டத்தை அறிமுகம் செய்த-அதற்காக அல்லும் பகலும் பாடுபட்ட -- எமது கல்வி அதிகாரி இதோ வந்துவிட்டார்...." அறிவிப்பாளர் உற்சாகமாக வரவேற்புப் பத்திரம் வழங்க, தனது இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

அப்போதுதான் கவனித்தார். தனக்கு எதிர் வரிசையில், மண்டபத்தில், பள்ளி மாணவர்களுடன் ஒருத்தியாக, வெண் மல்லிகை மொட்டுகள் நடுவில் பளீரெனத் துலங்கும் ஒற்றை ரோஜாவைப்போல வெண்ணிறச் சேலையில் வந்திருப்பது... ஆஹா...யார் அது? கஸ்தூரி அல்லவா?

மாணவர்களையும், என்னையும் எக்காரணத்தினாலும் பிரிக்கமுடியாது எனுமாப்போல தான் வழக்கமாக உடுத்து கின்ற வெள்ளை நிறச் சேலையை இழுத்துப் போர்த்துக் கொண்டு, கருகருவென்ற கண்ணாடிக்கூடாக சாந்தமான தழுவும் பார்வையோடு அந்தப் பெண்மணி அமர்ந்திருந்தாள். இதுவன்றோ சிறந்த ஆசிரியருக்குரிய முத்திரை! ஒரு ஆசிரியன் மாணவனோடு மாணவனாகக் கலக்காமல் எப்படி நல்லாசிரி யனாக உயர்வது?

கஸ்தூரி டீச்சரைப் பற்றித்தான் இந்த உலகமே சொல்லுமே. கல்வியில் அவர் ஏறிய படிகள் எத்தனை... நிர்வாகத்தில்,

ஆளுமையில், அன்பில், அர்ப்பணிப்பில்... அவர் எத்தனை கோணங்களில் மிளிர்ந்தார்..? அதுமட்டுமா? இலக்கியத்தை யும் விடவில்லையே....அவர் எழுதிக் குவித்த நூல்கள் எத்தனை... சிந்தனையைத் தூண்டிய உரைகள் எத்தனை யெத்தனை! ஆனால்....இந்தக் கல்வியதிகாரியின் சிறந்த ஆசிரியர் பட்டியலில் அவரது பெயர் இல்லையே ஏன்? குறு குறுக்கும் விழிகளைத் தாழ்த்திக்கொண்ட கல்வியதிகாரி ஏதோ ஒரு உள்ளுணர்வு உந்த மீண்டும் நிமிர்ந்து பார்க்கிறார்.

கஸ்தூரி டீச்சர் அப்படியேதான் இப்போதும் உட்கார்ந் திருக்கிறார். அவரது பார்வை சாட்சாத் பாரதியின் பெண்மைத் தெய்வத்தின் பார்வையை ஒத்திருப்பதுபோன்று, அனுபவக் கல்வியின் சுடரும், உண்மையின் தெளிவும் முன்னரை விட அதிக மதிகம் ஜொலிக்கிறாற்போல கல்வி யதிகாரிக்குத் தோன்று கின்றது. அந்தக் கணத்தில் நெஞ்சை ஏதோ....

தாளமுடியாமல் மறுபடியும் தனது கண்களைத் தாழ்த்திக் கொள்கிறார்.

ஜீவநதி - பங்குனி-சித்திரை 2008

# காட்டு நெடுவான நிலவு

மார்கழி மாதம். மெல்லிய இளங்காற்று வீசிக் கொண்டிருந்தது. அது கடும் பச்சையான மரங்களின் இலை களுக்கூடாக குளிர்ச்சியாகி உடலைத் தழுவி நடுங்க வதைத்துக் கொண்டிருந்தது. அந்தக் குளிரைத் தாங்குவதற்கு அங்கு கூடியிருந்த நூற்றுக்கணக்கான இளைஞர்களில் ஒருவரிடத்தும் ஒரு கம்பளி ஆடைகூட இல்லை. ஆனால், அவர்களுக்கு நடுவே பெரிய பாறாங்கல் ஒன்றை சிம்மாசனம் போன்று கருதி அமர்ந்திருக்கிறானே அந்த வீரன், அவனிடத்து மட்டும் ஒரு வுல்லன் சால்வை கழுத்தை மூடியிருந்தது. தலையில் ஒரு குல்லாத் தொப்பியும் அணிந்திருந்தான்.

தூரத்தில் நின்று பார்த்தாலுமே அந்த வீரன், அவ்விளைஞர் கூட்டத்தின் தலைவன் என்பது புரிந்துவிடும். உண்மைதான் அவன்தான் அந்தப் புரட்சிக் குழுவின் தலைவன்.

என்றோ...முப்பது வருடங்கள் இருக்கலாம்.... தோன்றிய சில சம்பவங்கள், சில துயரகரமான நிகழ்வுகள் அவனை ஒரு புரட்சி வீரனாக மாற்றியிருந்தன என்று சுருக்கமாக ஒரே வார்த்தையில் அவனது பூர்வீகம் பற்றிக் கூறிவிடலாம். மூர்க்க மாக நிகழ்ந்த ஒரு தாக்குதலின்போது, தனது தாய் தந்தை உட்பட ஏறத்தாழ நூற்றுக்கணக்கான அப்பாவிகள் கொன்று குவிக்கப்பட்ட ஓர் இரத்தக்கறை படிந்த நாளில், ஒன்றன் மேல் ஒன்றாக விழுந்த பல சடலங்களின் அடியில் மயங்கி விழுந்ததன் காரணமாக அதிர்ஷ்டவசமாக அவன் உயிர் தப்பியிருந்தான். அப்போது அவனுக்கு ஐந்து வயது இருக்கும். பிறகு எப்படியோ காப்பாற்றப்பட்டு, ஓடி ஒளிந்து, கடைகடையாக வேலை செய்து... இறுதியில் ஓர் இளைஞனாக அவன் வளர்ந்தபோது, இயல்பாகவே அவனிடம் புரட்சி மனோபாவமும் குடிகொண்டிருந்தது.

தனது தோழர்களோடு தங்கியிருக்கும் பாசறையில்--அவனது பாசறை மத்தியிலும், ஏனைய தோழர்களின் பாசறைகள் அதைச் சுற்றிலுமாக அமைந்திருந்தன-- தன்னந்தனியனாக அவன் கண்விழித்துப் புரண்டுகொண்டிருக்கும் இரவுப் பொழுதுகளில்கூட,

தனக்கும் தன்னைச் சார்ந்து நிற்கின்ற இந்தக் கூட்டாளிகளுக்கும் ஒரு நல்ல வழிமுறையைக் காட்டிவிடவேண்டும் என்ற சிந்தனையே அவனிடத்து தூக்கலாக இருக்கும்.

பால்ய வயதிலேயே அவன் ஒரு இரத்தக் களரியைக் கண்டிருந்தாலும், மனித ரத்தமும், சதையும் பந்து போல வீசியெறியப்படுகின்ற அவலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாலும், அவனது அந்தராத்மா அதனை உண்மை என நம்ப மறுத்தது. அவையெல்லாம் பொய்; கணநேரத் தோற்றங்கள்; மாயைகள் என்று அவன் தனக்குத்தானே கூறிக்கொள்வான்.

முகமூடியணிந்து வந்து சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்த அந்தக் கூலிப்படைகள், வெறும் கறுப்புப் பிண்டங் களாகவே அவனது ஞாபகங்களில் வந்து போனார்கள். இதெல்லாம் அவர்கள் நினைத்து, மனம் வைத்து செய்த வேலைகள் அல்ல யாரோ ஒருவன் இயக்கினான்---அவர்கள் இயங்கினார்கள், ஒரு நூலில் கோர்க்கப்பட்ட பொம்மைகள் போல-என்பதாகவே அவன் தனது ஞாபகங்களின் பக்கங்களில் கண்டுகொண்டிருந்தான்.

அவன் ஒரு புத்தகக் கடையில் வேலை பார்த்தபோது அவனுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்து, வாசிக்கும்படி செய்து, அவனது சந்தேகங்களையும் தீர்த்து வைத்தாரே, அந்தப் பெரியவரை அவன் எப்போதும் நன்றியுடன் நினைவு கூர்வதுண்டு. தன்னையும், இந்த உலகத்தையும் சரிசமமாகப் பிரித்து, இந்த உலகத்தில் தனது பங்கு என்ன என்பதையும், தான் யார் என்பதையும் உண்மையாக விளக்கியவர் அவர்தான். பொய்யும், இருளும் கவிந்த முகமூடிகளைக் கிழித்து, உண்மையும், தெளிவும், அன்பும் நிறைந்த ஆன்ம சொரூபத்தைக் காட்டிக் கொடுத்தவர் அவர்தான். அவர் அடிக்கடி சொல்வார், காந்தியைக் கொன்ற கோட்ஸேகூட சிறிது நேரம் ஆற அமர யோசித்திருந்தால், தனது முடிவி லிருந்து பின்வாங்கியிருப்பான்; மகாத்மா காந்தி எத்தகைய பெரியார் என்பதையும், முழு மனித இனத்துக்கு மான பொதுச்சொத்து அவர் என்பதையும்கூட விளங்கிக் கொண்டிருப்பான்'' என்று.

யாரோ ஒரு அறிஞர் சொன்னாராமே, அவர் ஜித்து கிருஷ்ணமூர்த்தியோ, யாரோ...'போர் நமக்குள்ளேயே தொடங்குகின்றது' என்று. அதைப் பற்றி அதிக நேரம் சிந்தித்துப் பார்த்திருக்கிறான் அவன். விளைவாக, போர் நமக்குள்ளேயே

தொடங்குகின்றது என்றால், சமாதானமும் நமக்குள்ளாகவே தொடங்க வேண்டும் அல்லவா என்று அவன் உள்ளம் வினா எழுப்பும்.

உலகின் மாபெரும் வெற்றி வீரர்களாகிய ஜெங்கிஸ்கான், அலெக்சாந்தர், நெப்போலியன் பொனபாட் ஆகியோரெல்லாம் எவ்வளவோ கட்டிக் காத்தபோதும், அவர் களுக்குப் பின்பு அவர்களது பேரரசுகள் நிலைக்க வில்லையே... அப்படியென்றால் மனித குல வரலாற்றில் மாபெரும் தடம் பதித்த வெற்றி வீரர்கள் என்று அவர்களை எவ்வாறு கொள்ள முடியும்? அதைவிடவும் புத்தர், யேசு, முஹமது நபி போன்ற பெரியோர்கள் காட்டிய சீரிய நெறிகள் இன்றுவரை நிலைத்து நிற்கின்றனவே....என்றெல்லாம் யோசிக்கும்போது, மனிதனுக்கு வன்முறை மீதான வேட்கை இருந்தபோதிலும், அது காலப் போக்கில் இயல்பாகவே குறைந்து, நலிவடைந்து போய் விடுகிறது என்பதாக அவன் கருதினான்.

தனது படைகளை, குடிகளை...அழிவுப் பாதையில் இட்டுச் சென்ற பேரரசர்கள் எத்தனை? மன்னர்கள் எத்தனை? அவர்கள் எல்லோரும் அடுத்த தலைமுறைக்குள்ளாகவே மறக்கப்பட்டுப் போனார்கள். ஆனால், மிக எளிமையாக வாழ்ந்த பெரிய மனிதர்களை உலகம் நினைவில் வைத்துக் கொண்டி ருக்கிறது. சாந்தியைத் தேடித் தவித்துக் கொண்டி ருக்கும் இந்த உலகத்திற்கு வழிகாட்டப் போகும் பெரியார் ஒருவர் இனி எப்போதாவது வந்தால்தான் உண்டு என்பதாக அவனுக்குத் தோன்றும்.

-----------

மீண்டும் ஒரு வாரத்திற்குப் பிறகு அந்த இளைஞர் கூட்டம் கூடியிருந்தது. இப்போது அதே இடத்தில் அல்ல. அடர் காட்டின் நடுவே, வெட்டி வீழ்த்தப்பட்டிருந்த ஒரு மரத்தின் அடிப்பாகம் மீது அந்த இளைஞன் அமர்ந்திருந்தான். முன்பு கூடியிருந்தவர்களைவிட மிகக் குறைந்தளவு எண்ணிக்கை யான மனிதர்களே அவனைச் சூழ்ந்திருந்தார்கள்.

“சொல்லுங்கள் தலைவரே...இப்போது என்ன செய்யப் போகிறோம்...?”

ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்த அவன் தலை நிமிர்ந்தான்.

“எமது பிள்ளைகள் கல்வி பெறுவதற்குக்கூட உரிமை யிழந்து

தவிக்கிறார்கள். அறநெறிப் பாடசாலையில் கூடியிருந்த மாணவர்களை ஷெல் வீசி தாக்கி அழித்திருக்கிறார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பலியாகி விட்டார்கள்....''

கூட்டத்தின் மத்தியிலிருந்து இன்னொருவன் எழுந்து நின்றான்.

''அவர்களில் இருநூறு பேரையாவது நாம் முடிக்க வேண்டும்.''

உடனே அதை ஆமோதித்து பல குரல்கள் எழுந்தன. கசமுசா என்ற கிசுகிசுப்புகளும்கூட.

''நாங்கள் ஆயுதமேந்திய இந்தப் பதினைந்து வருட காலங்களில் குறைந்தளவு பேரைத்தான் பலி வாங்கி யிருக்கிறோம்... இப்படியே போனால், எமது புரட்சிக் குழுவின் பெயர்கூட மறக்கப்பட்டு விடும்....'' சற்று வயது முதிர்ந்த ஒருவர் எழுந்து நின்று கூறினார்.

''நீங்கள் எல்லோருமே அவர்களைப் பலிவாங்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். இல்லையா தோழர்களே...?'' அந்த முதியவரின் முகத்தைக் கூர்ந்து பார்த்துத் தலைவன் கேட்டான்.

''ஆமாம்.... ஆமாம்....'' ஒருசேர, ஆனால் தணிந்த குரலில் கூட்டம் கர்ச்சித்தது.

''சரி, இப்போது சொல்லுங்கள். நாம் ஆயுதமேந்தி போராட வந்தது எதற்காக?''

''எமது எதிரிகளைப் பலிவாங்குவதற்காக...''

''இல்லை... இல்லை...'' அவன் உறுதியாகத் தலை யசைத்தான்.

---

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு அதே முதியவர் எழுந்து நின்று கூறினார்.

''தற்காப்புக்காக...! எதிரிகளை நேருக்கு நேராகச் சந்தித்து வெல்வதற்காக....!''

''மெத்தச் சரி...'' அவன் தலையை ஆட்டினான்.

''நமது எதிரிகளைத் தவிர வேறு யாரையும் பலி வாங்கக் கூடாது என்பது நமது பிரமாணங்களில் ஒன்று. அதேபோல, எதிரி ஒருவன் எம்மை வம்புக்கிழுத்தால் அவனை சும்மா விடுவதில்லை என்பதும் நமது பிரமாணங்களில் ஒன்றுதான்.''

''ஆமாம்....'' கூட்டம் ஆமோதித்தது.

''அப்படியானால், அவர்கள் எமது குழந்தைகளைக் கொல்கிறார்கள் என்பதற்காக அவர்களது குழந்தைகளை நாம்

கொல்லுவது எந்த வகையில் நியாயம்?'' அவன் திருப்பிக் கேட்டான்.

“இப்படியே மௌனமாகிப் போனால் நமது மக்கள் நம்மைப் புறக்கணித்துவிட மாட்டார்களா?'' ஒரு இளம் வீரன் பவ்வியமாகக் கேட்டான்.

“எம்மைப் பற்றி சரியாக விளங்கிக் கொண்டால் அவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்கள்? உலக வரலாற்றில் ஹிட்லரைப் போல காண்பவர்களையெல்லாம் கொன்று குவித்த, கொலை வெறி கொண்டு அலைந்த ஒரு தலைவனை அவனது மக்களே வெறுக்கவில்லையா? அவனையெண்ணி ஒவ்வொரு ஜெர்மனியனும் வெட்கித் தலை குனியவில்லையா?''

“இப்போது என்ன செய்வது?'' மீண்டும் அதே முதியவர் கேட்டார்.

“நீங்கள் சொல்வதுபோல அவர்களைப் பலிவாங்கத் தான் வேண்டும். எப்படி...?''

கேள்வியெழுப்பிவிட்டு அவன் நீண்ட நேரமாக மௌனத்தில் ஆழ்ந்தான். பிறகு நிஷ்டை கலைந்தாற்போல தலையை உலுப்பிக்கொண்டு மேலும் தொடர்ந்தான்.

“நான் சேகரித்து வைத்திருக்கிற இலக்குகளில் அவர்களது பாடசாலையும் ஒன்றுதான். அந்தப் பாடசாலை மாணவர்களை எப்படி அணுகுவது? உண்மையிலேயே என்னை நீங்கள் உங்கள் தலைவனாக ஏற்றுக் கொள்வீர்கள் என்றால், நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள்.... அந்த மாணவர்கள் சில வேளை எமது தாய்மார்களின் வயிறுகளில் பிறந்திருந்தால்...? நமது பிள்ளைகளும், அவர்களும் ஒன்றாக இருந்திருப்பார்கள். விளையாடிக் களித்திருப்பார்கள் இல்லையா?''

'நானும் அவனும் எதிரெதிர் தளங்களில் இருந்ததால் தானே அவனுடன் நான் போரிட்டேன்? இல்லையென்றால், ஒரே ஓட்டலில், ஒரே பீடியைப் பகிர்ந்து கொள்கின்ற நல்ல நண்பர் களாகக்கூட நானும், அவனும் இருந்திருப்போமே...' என்ற, எப்போதோ படித்த ஆங்கிலக் கவியின் வரிகளை மனதில் நினைத்துக் கொண்டு மேலும் தனது திட்டங்களை அவன் கூறத் தொடங்கினான். ஆரம்பத்தில் கூச்சலிட்ட சில இளைஞர்களும் கூட, அவன் பேசப் பேச, அந்தச் சுண்டியிழுக்கும் நாவன்மை யின் வசீகரத்தின்பால் கட்டுண்டு

போனார்கள்.

அந்தக் கூட்டம் கூடி சரியாக மூன்று தினங்களுக்குப் பிறகு, அவர்களது கிராமத்திற்கு அருகிலுள்ள, வேற்றுமொழி பேசுகின்ற, பெரிய நகரத்தின் பிரபலமான ஒரு பாடசாலை யின் மீது புரட்சிக் குழுவினரின் யுத்த விமானங்கள் தாழ்வாகப் பறக்கத் தொடங்கின. பாடசாலைக்குள்ளிருந்து பீதியுடன் அவதானித்துக் கொண்டிருந்த மாணவர்களில் ஒரு சிலர் வெளியே ஓடிவந்து பார்த்தார்கள். அவர்களைத் தொடர்ந்து சில ஆசிரியர்களும் ஓடி வந்தார்கள். அவர்களது அண்ணாந்த முகங்களின்மீது வாச மலர்களும், வண்ண ரிப்பன்களும், விதவிதமான பலூன்களும் வந்து விழத் தொடங்கின.

மல்லிகை 44வது ஆண்டு மலர்-ஜனவரி 2009

# சாக்கடை மேடையில் ஒரு மாநாடு

அந்த மாநகரத்தின் அகலமான கார்பட் வீதியின் இரு மருங்குகளிலும் ஓடுகின்ற கால்வாய்கள் போன்ற கான்கள் இரண்டும் சந்திக்கின்ற பெரிய சாக்கடையின் இறுதி முனையில், கொங்க்ரீட் மேடையின் அடியில், அந்த மாநாடு ஏற்பாடாகி யிருந்தது. மாநாட்டு ஏற்பாடுகள் இன்னும் முடியவில்லை யாதலால், நேரகாலத்துடன் வந்து அரங்கில் அமர்ந்திருந்த பார்வையாளர் நுளம்புகள் "ம்ஹூம்.." என்று முனகிக் கொண்டன. ஆம். அது சர்வதேச நுளம்புகளின் மாநாடு. நேரம் செல்ல, பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளாக வருகை தந்திருந்த நுளம்புகள் யாவும் தத்தமக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் வந்து அமரத் தொடங்கின. கொங்க்ரீட் மூடியின் நடுவில் காணப்பட்ட துளையொன்றின் வழியே அந்த மாநாட்டு நிகழ்ச்சிகள் வெளியில் சூழ்ந்து நிற்கும் பெண் நுளம்பு களுக்கும், குழந்தை நுளம்புகளுக்கும் கேட்க வேண்டுமெனப் தற்காக இரு பெரிய ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டிருந்தன. பருத்த உடம்பைக் கொண்ட அந்தி நேர நுளம்பு பெருஞ்சிரமத்துடன் "one, two, three" என்று கூறியபடி மைக் டெஸ்ட் செய்து கொண்டிருந்தது. மாநாட்டு மண்டபத்திலிருந்து வீதியின் தொடக்கத்திலிருக்கும் சாக்கடை முனைவரை நுளம்புகளின் கருங்கொடி எங்கும் பறந்து கொண்டிருந்தது. இருள் சூழ்ந்து வரும் முன்னிரவு நேரத்தில் குதூகலத்துடன் தனது அறிவிப்பைத் தொடங்கிற்று இந்தியக் கொசு.

"இதோ...நீங்க எல்லாரும் ஆவலா எதிர்பார்த்துக் கிட்டிருக்கிற சர்வதேச நுளம்புகளின் மாநாடு ஆரம்பமாகிறது. எல்லோருக்கும் வணக்கம். உங்க எல்லாரையும் வரவேற்கிற துல நம் பாரத நாடு சார்பா பெருமிதம் கலந்த மகிழ்ச்சியடைகிறேன். வெளியே நிற்கின்ற தோழர்களே, தயவு செய்த உங்கள் ஆசனத்தில் வந்து அமருங்கள். வாங்க. வந்து உ்காருங்க. எல்லோருக்கும் மீண்டும் எனது நமஸ்காரம்..."

பிடிகளுக்குள் கூட அவர்கள் கசங்கி மாண்டார்கள். பின்னர், சத்தமின்றி பறக்கின்ற நமது தோழர்கள் பிறந்தார்கள். பட்டி தொட்டி யெங்கும் தமது சேவையைத் தொடர்ந்தார்கள். மனித இனத்தைப் பார்த்துப் பார்த்து சம்ஹாரம் செய்தார்கள். எனினும், டி.டி.டி, மலத்தியன் போன்ற நாசகார சக்திகளால் அவர்களும் பெருமளவில் அழிந்து போனார்கள். இன்று களை கட்டியிருக்கும் இந்த மாநாடு உண்மையில் அவர்களது உயிர்த் தியாகத்தின் பேராலேயே உதயமானது. அவர்களது இரத்தங்களை அஸ்திவாரமாகக் கொண்டே உருவானது. இப்போது நாம் "ஙொய்" என்ற சத்தத்தையும் குறைத்து, மனிதனையும், விலங்குகளையும் எச்சரிக்கும் படியான சொறிச்சலையும் தவிர்த்து மிக மென்மையாகவும், மும்முரமாகவும் எமது கடமைகளைச் செய்ய முடிகின்ற தென்றால், தமது இன்னுயிர்களைத் தத்தம் செய்த எமது குலக்கொழுந்துகளின் தியாகத்தின் காரணமாகவே தவிர வேறல்ல. அவர்களது பரம்பரை ஜீன்கள் கூர்ப் படைந்த தனாலேயே நாம் வீர்யம்மிக்க மற்றொரு இனமாக தலைநிமிர்ந்து நிற்கின்றோம். சதிகார மனித இனத்துக்கு மிகப்பெரும் சவாலான டெங்கு ஆட்கொல்லி நோயையும் தோற்றுவித்து வருகின்றோம். இந்த வெற்றியைக் கொண்டாட முன்னர், எமக்கு வாழ்வு தந்த தியாகி நுளம்புகளை மரியாதை செய்யுமுகமாக ஒரு நிமிட மௌனாஞ்சலி செய்வோமாக..." என்று கூறிமுடித்து தலைவர் தொண்டையை செருமிக் கொண்டார். கூட்டத்தில் ஒரு சின்ன சலசலப்பும், தொடர்ந்து ஊசி விழுந்தால் கேட்கும்படியான நிசப்தமும் நிலவின. ஆம்; ஒரு நிமிட மௌனாஞ்சலி நிறைவேற்றப்பட்டது. அஞ்சலி முடித்து தமது ஆசனத்தில் அமரும்போது சில பெண்நுளம்புகள் தமது இனிய சந்ததிகளை... பாதியிலேயே தொலைத்துவிட்ட மக்கள் கூட்டத்தை...எண்ணிக் கண்ணீர் சிந்திய கண்களைத் துடைத்து, மூக்கை உறிஞ்சிக் கொண்டன."

"நல்லது தோழர்களே, தலைவரது உருக்கமான உரையைக் கேட்டோம். நாம செஞ்சி முடிச்சிட்ட சாதனையை விட இன்னும் செய்யப் போறது அநேகம். பொறுத்திருந்து பாருங்க. ஆனானப்பட்ட மனுஷனுக்கே இனி நாங்க தண்ணி காட்டப்போற விதத்தை...இதோ இப்ப உங்க முன்னால எங்க விசேஷ அதிதி பேசப்போறார். எங்கே உங்க கரகோஷம்... வருக வருக என வரவேற்கிறோம் மிஸ்டர் சிக்கன் குன்யார்..."

அந்தி நேரத்து பெருநுளம்பு மைக் டெஸ்ட் பூரணமாகிவிட் திருப்தியில் மேடையில் ஒரு மூலையில் போட்டிருந்த கதிரையில் தனது உடம்பைத் திணித்துக் கொண்டது. 'கடவுளே, மாநாடு நடந்து முடியிறவரைக்கும் மைக் ட்ரபள் பண்ணிடக்கூடாது..யப்பா..என்ன பாடாயிருக்கு இப்பல்லாம். ஓர வேலகூட செய்ய முடியிறதில்ல' என்று தனக்குள் முனகிக் கொண்டது அது. விளக்கேற்றும் சம்பிர தாயங்கள் அந்த விழாவின் வெற்றிக்கு இடையூறாக இருக்கும் என்று கருதப்பட்டதால், கடவுள் வாழ்த்துடன் நிகழ்ச்சிகளைத் தொடங்குவதற்கு எற்பாட்டுக்குழு தீர்மானித் திருந்தது. அதன் படி கடவுள் வாழ்த்துக்குப் பின்னர் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

“தோழர்களே, மிக எளிமையான முறையில இந்த கூட்டத்த நடத்தி முடிக்கிறதுதான் எங்கட நோக்கம். அதனால உடனடியா நிகழ்ச்சிகளுக்கு வருவோம். இப்ப தலைவர் உங்க முன்னால உரையாற்றுவார்” என்ற அறிவிப்புக்குப் பிறகு தலைவராக வீற்றிருந்த டெங்கு நுளம்பார் தனது தொடக்க வுரையை ஆற்றினார்.

“அன்பார்ந்த தோழர்களே...சகோதர சகோதரிகளே... உங்கள் அனைவருக்கும் எனது மனங்கனிந்த நல்வாழ்த்து களும், மாலை வணக்கமும் உரித்தாகுக. மண்டபம் நிறைந்து வழியும்படியாகவும், வெளியே கூட்டங் கூட்டமாகவும் குழுமி நிற்கின்ற உங்களது திருமுகங் களைக்காண நான் பேருவகை கொள்கிறேன். எவ்வளவு பெரிய வெற்றி! எனது இனம் பல்கிப் பெருகி ஊழி முடிவுவரை அழிவின்றி நிலைத்திருக்கும் என்பதற்கு இந்த மாநாடே ஒரு சாட்சியாக இருக்கின்றது...”

கூட்டத்திலிருந்து பலத்த கரகோஷம் கிளம்பிற்று. “ஙொய்..” என்ற சப்தத்துடன் இளைஞர் நுளம்புகள் எழுந்து நர்த்தனமாடத் தொடங்கின. சிறிது நேரம் அந்த உற்சாகத்தைக் கரைபுரள விட்டபின் கம்பீரமாக மீண்டும் தொடர்ந்தார் தலைவர்.

“என் மக்களே...இந்த வெற்றி இலகுவில் கிடைத்த தல்ல...பல போராட்டங்களக்கு மத்தியில் நமது எத்தனையோ இனிய தோழர்களைப் பலிகொடுத்து நாம் பெற்ற வெற்றியே இது. ஆரம்பத்தில் “ஙொய்... ஙொய்” என்று சத்தமிட்டு இயங்கிய நமது மூதாதையர்கள் அந்த சத்தத்தின் காரணமாகவே இனங்காணப்பட்டு எதிரிகளால் அழிக்கப் பட்டார்கள். எமது எதிரி வேறு யார்? இந்தப் படுபாவி மனிதன் தான். சின்னஞ்சிறு மனிதக் குட்டிகளின்

மாநாட்டில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருந்த 'சிக்கன் குன்யா' நுளம்பார் தனது சால்வையை தோளிலிருந்து இழுத்து விட்டபடி அடுத்து பேசுவதற் காக எழுந்து நின்றார். பலத்த கரகோஷம் சாக்கடையையே அதிரச் செய்தது. மங்கைப் பருவத்து நுளம்பினங்கள் மிக இளமையாகத் தோற்ற மளிக்கும் பிரதம அதிதிமீது உடனே மையல் கொண்டு தமது கருவிழிகளால் அவரைப் பருகிக் கொண்டிருந்தன. அவர் புன்சிரிப்புடன் தனது பேருரையை ஆரம்பித்தார்.

“மதிப்புக்குரிய நுளம்பினப் பெருமக்களே் வாழ்க, வளர்க, உங்கள் அனைவருக்கும் மிக இளையவனாகிய நான் எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தலைவர் தனது தொடக்கவுரையில் கூறிய கருத்துகள் மிக முக்கியமானவை. நமது மூதாதையர்கள் செய்த பெரும் சேவைகளாலும், தியாகங்களாலுமே நாம் இன்று உலக வாழ் உயிரினங்களில் குறிப்பிடத்தக்க பூச்சியினமாக பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளோம். எமது பிரதான எதிரி மனிதன்தான். அவனை அழித்தொழிப்பதே எமது லட்சியம். அவனை அழிப்பதற்கான அல்லது அவனது வலிமையைக் குறைப்பதற் கான சகலவிதமான ஏற்பாடு களையும் நாம் எப்போதும் தயாராகவே வைத்துக்கொள்ள வேண்டும் என்பது எனது பணிவான அபிப்ராயம். எமது எதிரியாகிய மனிதன், தன்னினத்தைத் தானே அழிப்பதற்கு அணுகுண்டுகளைக் கண்டுபிடித்தான். அடுத்த வீட்டிலிருக்கும் தனது அயல் மனிதனைக்கூட கவிழ்ப்பதற்கு மிகமோசமான குழிபறிப்பு வேலை களைச் செய்தான். நாமோ அவனை ஒரேயடியாக அழிப்பதற் கான உயிரியல் ரசாயனப் பதார்த்தங் களை மிக வெற்றிகரமாக உருவாக்கி வருகின்றோம். மலேரியா என்றும், டெங்கு நோய் என்றும் மனிதன் துவண்டு நிற்கின்ற இந்த வேளையில் சிக்கன் குன்யா எனும் நமது புதிய ஏவுகணை பரீட்சார்த்தமாக அனுப்பப்பட்டாலும், நம்பிக்கையூட்டிய வெற்றியை அளித் துள்ளது. இந்த ஏவுகணையிலிருந்து மனிதன் தப்பவே முடியாது. அவனையும் ,அவனது முழு இனத்தையும் பலவீனமாக்கும்வரை நாம் ஓயவே கூடாது. அறிவும், தொழினுட்பமும், விஞ்ஞானமும் வளரவளர, மனிதன் கண்ட தெல்லாம் மாபெரும் தோல்வி தான். அவனது மனத்துக்குள்ளே சுயநலம் விஸ்வரூபம்

எடுக்கும் போது, அவன் எப்போதும் சூழல் மீதான அக்கறையைத் தலைமேல் கொள்ளாதபோது, தன்னைத் தவிர பிறரை ஏறெடுத்தும் பார்க்காத மானுட நலன் மிகுந்து அவனை ஆட் கொண்டிருக்கின்றபோது...இந்த வேளையில், இந்த நிமிஷத்தில் நாம் நமது இலக்குகளை நோக்கி முன்னேறுவது மிக மிக சுலபம். இந்த வாய்ப்பை நாம் தவற விடக் கூடாது. மனிதனின் வலிமையைக் குறைத்து, அவனை நோயில் வீழ்த்தி, அல்லது மரணப் படுக்கையில் போட்டு, உலகின் மிக வலிமை மிக்க இனமாக எமது இனத்தை மாற்றிக் காட்டவேண்டும். இதுவே எம் அனைவரினதும் இறுதி இலட்சியமாக இருக்கட்டும். இந்த இலட்சியத்தை அடையும் முயற்சிகளில் எமக்கு வெற்றி கிட்டட்டும்... அல்லது வீரமரணம் கிடைக்கட்டும்...”

மிக நிதானமாகவும், ஆர்ப்பாட்டமின்றியும் உரை யாற்றிய போதும், சிற்சில இடங்களில் உணர்ச்சி கொப்பளிக்க மேஜையில் தட்டிப் பேசினார் சிக்கன் குன்யார். அந்த உரைமீது அழ்ந்த சிந்தனையைச் செலுத்தியிருந்த அறிவிப்பாளர் சில நிமிட நேரம் சிந்தனையில் ஆழ்ந்தி ருந்தார். பிறகு தொண்டையைச் செருமிக்கொண்டு. “அடுத்த தாக பிரித்தானியா விலிருந்து வந்த பிரதிநிதியார் நுளம்பினம் எதிர்நோக்கியுள்ள பாரிய ஆபத்துகள் எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றைச் சமர்ப்பிப்பார்” என்று கூறினார்.

பிரித்தானிய நுளம்பார் ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தார்.

அதில், ஏற்கனவே பாவிக்கப்பட்ட டி.டி.டி, மலத்தியன் போன்ற திரவங்களைவிட மிக அதிகமாக பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நுளம்பு வலை பற்றி பிரதானமாகக் குறிப்பிட்டிருந்தார். “நுளம்புச் சுருள்களும், மின்சாரத்தில் இயங்கும் கொசு வர்த்திகளும், மனித உடம்பில் பூசிக்கொள்ளப் படுகின்ற தைலங்களும் குறிப்பிடத்தக்க பாதிப்புகளை ஏற்படுத்துவதாக இல்லை. என்றபோதும், நுளம்பு வலை மிகப் பிரதானமான எதிரியின் ஆயுதமாகும். எனினும், மனிதன் தனது சுயநலம் மிக்க செய்கைகளினால் இந்த ஆயுதத்தை இன்னும் சரிவர கைக்கொள்ளும் புத்தியை பெற்றுக் கொள்ளவில்லை என்பது ஒரு ஆறுதல் தரும் செய்தி.....

“ இந்தச் செய்தியை நான் உங்கள் முன்னிலையில் சமர்ப்பித்துக் கொண்டிருக்கும் அதே வேளையில் மனிதன் தனது

இனத்தைத் தானே ஏமாற்றிக்கொள்ளும் குறுக்கு வழிகளினால் பின்னடைந்து நிற்கிறான் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் நாம் கூறியாக வேண்டும். உதாரணமாக, இன்று மனிதன் வெண்கட்டி போன்ற ஒரு பொருளை தன் நண்பர்களுக்கிடையில் கூடிய விலைக்கு விற்பனை செய்து, இதைப் பாவித்து ஒரு கோடு வரைந்தால்கூடப் போதும், இரண்டு வருடங்களுக்கு உங்கள் வீட்டுப் பக்கம் கொசுவே வராது என்று பொய் கூறுகிறான். ஏமாந்த சோனகிரிகள் பலரும் அந்த வார்த்தை ஜாலங்களை நம்பி காசை இறைக்கிறார்கள். இந்த வியாபாரத்தை நம்பி பலரும் சோடை போய் விட்டார்கள். இந்த வியாபாரம் நீடிக்கும்வரை நமது வெற்றியும் நிச்சயமானது. அது முடிந்தாலுமென்ன? இன்னொரு வியாபாரி வரவே வரப் போகிறான். அது தவிர, shopping bag, lunch sheet முதலிய பாவனைப் பொருட் களை மனிதன் கைக்கொள்ளும் வரையிலும் எமது இனத்திற்கு பேரழிவு ஏற்படும் அபாயம் அருகில் இல்லை என்றே கூறவேண்டும். ஏதோ ஒரு நாடு இருக்கிறதாம். அந்த நாட்டில் ஒரு சட்டம் இருக்கிறதாம். அங்கு ஒரு ஆண்மகன் மணமுடிப்பதானால் ஐம்பது நுளம்புகளை அடித்து சாகடித்து, ரெஜிஸ்ட்ராரிடம் காட்ட வேண்டுமாம். இந்தச் சட்டம் அமுல்படுத்தப் படுமானால் அந்த நாட்டில் நமது இனம் பூண்டோடு அழிந்து போகலாம். எனினும், இதிலும் ஒரு நப்பாசை. பாவி மனிதன் எதைத்தான் சரியாகச் செய்தான்? இந்த இடத்திலும் மோசடியும், ஊழலும் புரிவான். ரெஜிஸ்ட்ராருக்கு லஞ்சம் வழங்கி கையெழுத்து வாங்கிக் கொள்வான். அல்லது ஒருவன் கொன்ற நுளம்புகளை இன்னொருவன் கடனாகப் பெற்று ரெஜிஸ்ட்ராரிடம் கணக்குக் காட்டுவான். இந்த நிலை இருந்தால், அங்கும் எமக்கு அதிக ஆபத்தில்லை."

இவ்வாறு கூறிமுடித்தவுடன் ஒரு ஆயாசத்துடன் அவர் தனது கதிரையில் அமர்ந்து கொண்டார். இவ்வாய்வுரை, கூட்டத்தில் இருந்த பலரையும் சிந்திக்க வைத்துவிட்டது. தலைவரும் மோவாயில் கையூன்றி யோசனையில் ஆழ்ந் திருந்தார் சிறிது நேரம். அதை அவதானித்த அறிவிப்பாள ராகிய தென்னிந்தியக் கொசுவார், "நண்பர்களே..., இந்த அய்வுக் கட்டுரை சார்பாக உங்கள் கருத்துகளை எதிர் பார்க்கிறோம். வெற்றிக்கு வழிகோலும் வலிமைமிக்க தந்திரங்கள் உங்கள் வசம் இருக்கலாம். அவற்றை எங்கள் முன்னிலையில் சமர்ப்பியுங்கள். இது குறித்து நாமனைவரும்

ஒரு திறந்த மட்ட விவாதத்தை இப்போது மேற்கொள்வோம்'' என்று தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து, “ஙொய்..” என்ற இரைச்சல். ஒவ்வொருவரும் தத்தமது கருத்துகளை பக்கத்தி லிருந்தவரிடம் பரிமாறிக்கொள்ளத் தொடங்கினர்.

கூட்டத்தின் மத்தியிலிருந்து எழுந்து நின்ற ஒரு பெரியவர் கூறினார்.

“வஞ்சக உள்ளம் கொண்ட மனிதன் பூகோள மயமாக்கல், கம்ப்யூட்டர் புரட்சி....இவற்றுக்குள் நுழைந்து மேலே செல்லச்செல்ல, அவன் தனது அடிப்படை நலங் களைக்கூட கவனிக்காது விட்டுவிடுவான். நீர், நிலம், வளி... எது மாசடைந்தாலும் எனக்கென்ன என்றிருப்பான். எனவே, அவன் போகிற போக்கிலேயே விட்டுவிடுவோம். நமக்கு வெற்றி தானே சித்திக்கும்....'' என்றார் அவர்.

தொடர்ந்து பேசிய இன்னொருவர், “மலேரியாவை ஏற்படுத்தும் அனோபிலிஸ் சகோதரிகளைப் போன்று, அனோபிலிஸ் சகோதரர்களும் தாவரச் சாற்றை உறிஞ்சு வதைக் குறைத்துக்கொண்டு, காலை மாலை தேநீர் வேளை களின் போதாவது மனித இரத்தத்தை உறிஞ்சும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். இதுவே ஆபத்தை எதிர் கொள்ளக்கூடிய சிறந்த வழி'' என்று கருத்துத் தெரிவித்தார். அடுத்து மிக இளமையான பெண்நுளம்பு ஒன்று எழுந்தது. தனது குட்டைக் கொம்புகளை ஒருதரம் சிலுப்பிக்கொண்டு உணர்ச்சியுடன் பேசிற்று.

“இந்த கியூலெக்ஸ் சகோதரர்கள் என்ன செய் கிறார்கள்? இவர்களது எந்த சேவையும் இதுவரை சரியாக நடைபெற வில்லை. யானைக்கால் நோயை பரப்புவதில் அவர்கள் காட்டும் சோம்பேறித்தனத்தை நான் மிகவும் கண்டிக்கிறேன். குறைந்த பட்சம் ஆண்டுக்கு நூறு எதிரி களாவது மாள வேண்டும். இப்போதைய புள்ளிவிபரங் களின்படி மிகக் குறைவான தொகையினரே இந்நோயால் இறக்கிறார்கள். இந்நோய் கட்டுப் பாட்டுக்குள் வந்துவிட்டதாக அவர்களது சுகாதார நிறுவனங்கள் அறிவித்த வண்ணமிருக் கின்றன. இது குறித்து கியூலெக்ஸ் சகோதரர்கள் தமது கருத்தைக் கூற வேண்டும்'' என்று கொதித்தது அது.

மீண்டும் கசமுசா என்ற இரைச்சல். கியூலெக்ஸ் கூட்டம்

“வொய்..” என்ற இரைச்சலுடன் அந்த இளம் பெண்ணைத் தாக்குவதற்காகப் பறந்துசெல்ல, அவளது கூட்டம் அவளைச் சூழ்ந்துகொள்ள, ஒரே ரகளை பரபரப்பு. உடன் அறிவிப்பாளர் எழுந்து நின்றார்.

“அமைதி. அமைதி. எங்களது குழப்பம் எமது எதிரியின் வெற்றியாகிவிடும். சகோதரர்களே, உங்களை எச்சரிக்கிறேன். தயவுசெய்து உங்கள் ஆசனங்களில் அமருங்கள். ஒவ்வொருவரும் இங்கு உரிமையுடையவர்கள். ஆனால் தமது கருத்துக்களைக் கூறத்தான். தாக்குதலுக்கு அல்ல. தயவுசெய்து பொலிசாரையோ, இராணுவத்தின ரையோ கூப்பிடும் நிலையை எற்படுத்தி விடாதீர்கள். ப்ளீஸ்...”என்று கேட்டுக்கொண்டது. அந்த உருக்கமான அறிவிப்பைத் தொடர்ந்து தலைவர் எழுந்து நின்றார். யாவரும் அமைதியடைந்த நிலையில் அவரை உற்று நோக்கினர்.

“நாம் யாரையும் குறைகூற வேண்டாம். எல்லோரும் அவரவர்க்கு இயலுமான அளவு முயற்சிப்போம். மாநாட்டின் தலைவர் என்ற கோதாவில் உங்களுக்கு நான் ஒரு வாக்குறுதி அளிக்கிறேன். டெங்கு நோயினால் அதிர்ந்து போயிருக்கும் மனித இனத்தை...எனது முழு முதல் எதிரியை....மேலும் அழிப்பதற்கு நான் இரவு பகல் பாராது பாடுபடுவேன். எமது எதிரியின் இனத்தைச் சேர்ந்த வைத்தியர்களை நாம் பலியெடுத்தது பெரிய விடயமல்ல. இனிமேல் அரசியல் ஜுரத்தினால் தளர்ந்து போயிருக்கின்ற மக்கள் தலைவர்களையும், மக்களது பிரதிநிதிகளையும்கூட நான் பலியெடுப்பேன். காலை மாலை மட்டுமல்ல, இரவிலும் பகலிலும்கூட நான் பறந்து திரிந்து கருமமாற்றுவேன். மனிதன் குடிக்கும் ஒரு சொட்டு தண்ணீரின் மூலமாவது ஒரு கிருமியை அவனுடம்பில் செலுத்துவேன். இது சத்தியம்” என்று தனது நெஞ்சில் கைவைத்து சிறிதுநேரம் சிலையாக நின்றார் தலைவர். அதைத் தொடர்ந்து ஆக்ரோஷமாகப் பேசியவர்கள்கூட மௌனித்து தமது நெஞ்சில் கைவைத்து தமது உறுதிமொழிகளைத் தமக்குத்தாமே கூறிக் கொண்டனர். இதுவரை நடந்த நிகழ்ச்சி களைக் குறிப் பெடுத்துக் கொண்டிருந்த வங்காள தேசத்துக் கொசுவாரும் அவ்வாறே செய்துகொண்டார்.

மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியாக, அமெரிக்காவிலிருந்து வந்து கலந்துகொண்ட மலேரியா நுளம்பாருக்கு பொன்னாடை போர்த்தி

பொற்கிழி வழங்கப் பட்டது. அந் நிகழ்ச்சியைத் தொடர்ந்து அறிவிப்பாளர் பின்வருமாறு சாற்றினார்.

"அன்பர்களே, எமது மூதாதையருள் ஒருவரான மிஸ்டர் மலேரியா இன்னும் மனிதர்களுக்குத் தண்ணி காட்டி வருகிறார். அவர் நமக்கெல்லாம் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவர். ஆனாலும் தமது பணியைச் சளைக்காது தொடர்ந்து வருகிறார். சமீபத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த, எமது எதிரி இனத்தைச் சேர்ந்த மூளைசாலி ஒருவன் மலேரியா சகோதரர்களை தனது ஆய்வு கூடத்தில் வளர்த்து, அவற்றை அழிப்பதற்கான மருந்து களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டானாம். ஆனால், அங்கு நிலவும் மிக குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை காரணமாக அவனால் மைனர் மலேரியா ஒன்றைக்கூட வளர்க்க முடியாது போய்விட்டதாம். இப்படியாக பல்வேறு சவால்களையும் எதிர்கொண்டு தமது கடமையைச் செவ்வனே செய்கின்ற நமது பெரியவர்களை வாயார வாழ்த்தி மகிழ்வோம். எங்கே உங்கள் கரகோஷம்.... ஹ்ஹாஹா... இத்துடன் இம்மாநாடு இனிதே நிறைவு பெறுகின்றது. வணக்கம்! வாழி நுளம்பினம்! வாழி பற்பல நூற்றாண்டு"

கூட்டம் இரைச்சலுடன் முடிவுற்றது. கூடியிருந்த லட்சக்கணக்கான நுளம்புகள் மிக்க ஆரவாரத்துடன் "ஙொய்.." என்று கூச்சலிட்டபடி கலைந்து சென்றன. நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. பசி வயிற்றைக் கிள்ளும் நேரமாச்சே! அவை சாக்கடைக்கு வெளியே விரைந்து பறந்து சென்றன.

எங்கே? அதோ அந்த வீதியோரத்தில் உறங்குகின்ற பிச்சைக்காரர்களின்,இரத்தத்தைச் சுவைத்துப் பருகத்தான்.

# முடிவில் தொடங்கும் கதைகள்

கெகிறாவ ஸஹானா



கெகிறாவ ஸஹானா என்கின்ற இந்தப் படைப்பாளியை எனக்கு எவ்வளவு காலமாகத் தெரியுமோ, அவ்வளவு காலமாகவே ஏ.எஸ் ஜஹனாறா என்கின்ற ஆசிரியையையும் எனக்குத் தெரியும்.

ஏறத்தாழ இருபது வருடங்களுக்கு மேலாக விஞ்ஞான, ஆங்கில, தமிழ்மொழி ஆசிரியையாகவும் எனக்கு இவரைத் தெரியும். இவரது நூல் வெளியீட்டு விழாக்களிலும் நான் கலந்துகொண்டுள்ளேன்.

துடிப்பான ஓர் ஆசிரியையாகத் திகழும் போதே காத்திரமான படைப்பாளியாகவும் இவர் திகழ்கின்றார். எமது வடமத்திய மாகாணத்தில் இருந்து கொண்டு இலக்கியத் துறையில் தனியாகவும், தனித்துவமாகவும் இயங்கும் இப்பெண் படைப்பாளி முழு இலங்கைக்குமான ஒரு சொத்தாகத் திகழ்கிறார் என்பது எனது அபிப்பிராயமாகும்.

இக்கருத்துக்கு அனைவரும் உடன்படுவார்கள் என்று நம்புகிறேன்.

***ஈ. பீர்முஹம்மத்,***
உதவிக் கல்விப் பணிப்பாளர்
(தமிழ்ப் பிரிவு)
வடமத்திய மாகாண கல்வித் திணைக்களம்
அனுராதபுரம்.

ISBN 978-955-51679-5-6

விலை: *175/=*